# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 30 திங்கட்கிழமை (17.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 325




14

வெள்ளத்தில் மூழ்கப்போகும் வன்னி மக்கள்



21

40 ஆவது ஆண்டில் அ.தி.மு.க



25

அரை இறுதியில் ஆஸி.

# வடக்கு, கிழக்கில் நில அபகரிப்பைக் கண்டித்து வவுனியாவில் இன்று உண்ணாவிரதப் போர்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு; மனோ கணேசனும் பங்கேற்பு

வவுனியா, ஒக்.17

காணிப்பதிவு என்னும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்புச் செயற்பாடுகள் உட்பட வடக்கு, கிழக்கில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை அரசினதும் சர்வதேசத்தினதும் கவனத்துக்கு கொண்டுவரும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று உண்ணாவிரதம் மேற்கொள்கின்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

✷ முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைகளை மாற்றி வெலிஓயா என்னும் புதிய பிரதேச செயலாளர் பிரிவை உருவாக்குவதன் மூலம் அந்த மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றி இனங்களுக்கிடையில் கசப்புணர்வையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் செயற்பாட்டை உடன் நிறுத்துக.

✷ போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டு உறவுகளையும், சொத்துகளையும் இழந்து நிற்கும் நிலையில், காணிப்பதிவு எனும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மோசடியான நில அபகரிப்புச்

பக் 27

# நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றாகச் சீர்குலைவு

### 18 ஆவது திருத்தத்தினால் வந்த வினை என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

கொழும்பு, ஒக்ரோபர் 17

*அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தின் பின்னர் நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்துவிட்டது என்று எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எனவே 18ஆவது திருத்தத்தை நீக்குவதற்கான போராட்டத்தை தமது கட்சி விரைவில் தொடங்கும் என்றும் அவர் நேற்று அறிவித்தார்.*

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற தமது கட்சியைச் சேர்ந்தவர்களை ரணில் விக்கிரமசிங்க நேற்று சிறிகோத்தாவில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அரசமைப்பின் 18ஆவது திருத்தத்துக்கு எதிரான போரை தமது கட்சி நாடாளுமன்றத்தில் இருந்து ஆரம்பிக்கும் என்று அங்கு அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டில் சட்டம் ஒழுங்கு முழுமையாகச் சீர்குலைந்துள்ளது என்பதற்கு முல்லேரியாவில் அரச தரப்பு அரசியல்வாதிகள் மோதிக்கொண்ட சம்பவமே பெரிய உதாரணம் என்றும் அவர் கூறினார்.

பொலிஸ் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஆகியன சுயாதீனமாக இயங்குவதற்கு அரசமைப்பு வழங்கியிருந்த அதிகாரங்களை தற்போதைய

பக் 27

இராஜ தந்திர உரிமைகளைச் சுட்டிக் காட்டி

# அமெரிக்க நீதிமன்றில் சவேந்திர சில்வா மனு



கொழும்பு, ஒக்.17

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர பிரதிநிதி சவேந்திர சில்வா தமது இராஜதந்திர சிறப்புரிமைகளை சுட்டிக்காட்டி அமெரிக்க நீதிமன்றத்தில் பதில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தளபதி கேர்ணல்

பக் 27

# கொழும்பு மாநகரத்தில் மோதலுக்கு அரசு தயார்

### எதிர்க்கட்சி அலுவலக விடயத்தில் ஐ.தே.கவுடன் கடும் சர்ச்சை

கொழும்பு, ஒக்.17

கொழும்பு மாநகரசபைக்குள் எதிர்க்கட்சி அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பான விவகாரத்தினால் அரசுக்கும், கொழும்பு மாநகர நிர்வாகத்துக்கும் இடையில் பெரும் சர்ச்சை ஒன்று உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பக் 27

# பல்கலை மாணவர் தலைவர் மீது நடுவீதியில் வைத்துத் தாக்குதல்

### கந்தர்மடத்தில் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் நேற்று நண்பகல் நடுவீதியில் வைத்து அடையாளம் தெரியாத கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டார். தலையிலும் கையிலும் காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

சுப்பிரமணியம் தவபாலசிங்கம் (வயது 24) கந்தர்மடம், பழம் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கையில் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். அவரது பின்னந் தலையில் மூன்று தையல்கள் போடப்பட்டுள்ளன.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்த ஆறு பேருக்கும் மேற்பட்டவர்கள் பிற்பகல் 1.30 மணியளவில் அவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று அவரது நண்பர்கள் கூறினர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வீட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் மு.ப. 10 மணி முதல் அரசியல் சந்திப்பு ஒன்றில் ஈடு பட்டிருந்த மாணவர் ஒன்றியத் தலைவர், அங் கிருந்து வெளியேறி வீடு செல்லுகையில், அவரை எதிர்பார்த்துக் காத்திருந்த நபர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது.

தாக்குதல் நடந்த இடம் இந்திய துணைத்தூதரகத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ளது. அதிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் இராணுவத்தின் நிரந்தரக் காவலரண் அமைந்துள்ளது.

கடதாசிகளில் சுற்றி மறைத்துக் கொண்டு வந்த இரும்புக் கம்பியால் மாணவர் தலைவரைத் தாக்கினர் என்று சம்பவத்தை நேரில் கண்ட மாணவர் தெரிவித்தார். "அவரைத் தாக்கியவர்கள் அவரது மோட்டார் சைக்கிளை அடித்து நொருக்கினர். அவர்களிடம் இருந்து தப்புவதற்காக தவபாலசிங்கம் பத்மினி சிதம்பரநாதன் வீட்டை நோக்கி ஓடினார். அவர்கள் துரத்திச் சென்றனர். அதற்குள் ஆள்கள் வந்துவிட்டதால் அவர்கள் அப்படியே போய் விட்டார்கள்" என்றார் அந்த மாணவர்.

காயமடைந்த மாணவர்

பக் 27



காயமடைந்த தனபாலசிங்கம்

# இன்று போராட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்டதை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு மாணவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று நேற்றிரவு தெரியவந்தது.

அனைத்துப் பீட மாணவர் தலைவர்கள் நேற்றிரவு கூடி இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். அநேகமாக இன்று பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

# தாக்குதலுக்குக் கூட்டமைப்பு கண்டனம்

மாணவர் தலைவர் மீதான தாக்குதலுக்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இணைச் செயலாளர்களாகிய மாவை சேனாதிராசாவும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

"இந்தத் தாக்குதல் அதிர்ச்சியையும் துக்கத்தையும் ஏற்படுத்துகிறது. மக்கள் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் பெரும் பீதியை இந்தச் சம்பவம் மீண்டும் ஏற்படுத்தி உள்ளது. குற்றவாளிகளைக் கைது செய்வதுடன் நீதியின் முன் நிறுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மாவை சேனாதிராசா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முகத்தை மறைத்து தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வரும் ஆயுததாரிகள் ஜனநாயக சக்திகள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்துவது அதிகரித்துச் செல்கிறது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"இவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் *உனக்குத் தமிழீழம் வேண்டுமா* என்று கேட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் பாணி, தாக்குதலாளிகள் பேசிய முறை, பட்டப்பகலில் நடக்கிற சம்பவங்கள் என்பவற்றைப் பார்க்கிறபோது இவை யாரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள்" என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமாதானம் மலர்ந்துவிட்டது; வடக்கில் வசந்தம் வந்துவிட்டது; யாழ்ப்பாணத்தில் எவ்வித பயமும் பீதியும் இல்லாத நிலை

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைக்கான சாத்தியம்

# உலகில் ஒவ்வொரு 40 நிமிடங்களிலும் ஒரு தற்கொலைச் சம்பவம் நிகழ்கிறது

## 'மானச சஞ்சாரம்' நிகழ்வில் உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதி

யாழ்ப்பாணம், ஒக்.17

உலக ரீதியாக ஒவ்வொரு 40 நிமிடங்களிலும் ஒரு தற்கொலைச் சம்பவம் நிகழ்ந்து வருகின்றது. தற்கொலை முயற்சி அல்ல. தற்கொலை மரணமே நடந்து வருகின்றது என்று தெரிவித்தார் உலக சுகாதார நிறுவனத்திற்கான பிரதிநிதி டாக்டர் பிலிடொலிஸ் சஸ்டம் மெத்தா.

உலக உளநல தினத்தை முன்னிட்டு 'மானச சஞ்சாரம்' எனும் தொனிப்பொருளில் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் தற்கொலைகளைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடுதலான அக்கறை காட்டப்படுகிறது. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரியளவில் வைத்தியர்கள் உளநல செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் ஏனைய நாடுகளை விட இலங்கையிலும் யாழ்.மாவட்டத்திலும் தற்கொலைகள் குறைவாகவே உள்ளது.

துரதிஷ்டவசமாக உலகில் 80 வீதமான மக்கள் உளநல சிகிச்சையைப் பெறத் தவறிவிடுகின்றனர். இதனாலேயே அதிகளவான தற்கொலைகள், குடும்பப் பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றது.

உளநலம் என்பது மனத்தினூடு பயணம் செய்வது அல்ல. உள, உடல் நலத்தினூடு பயணம் செய்வதாகும் என நான் கருதுகின்றேன்.

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளிலேயே அதிகளவான பற்றாக்குறைகள் நிலவுவதை நான் அறிவேன். ஆளணி பற்றாக்குறைகள், மருந்துகள், இட வசதிகள் ஆகியனவே இவ்வாறான பற்றாக்குறைகள், இருந்தபோதிலும் சிறப்பான தலைமைத்துவம் உள்ளதால் அனைவரும் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றனர்.

அதேசமயம், சிறியளவான வளங்களை வைத்துக் கொண்டு பெரிய அளவிலான சேவை ஆற்றி வருகின்றனர் உளநலத் துறையினர் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில், யாழ்.பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், உளநலச் சங்க உறுப்பினர் டாக்டர் ராஜேந்திரா, சுகவாழ்வு நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சாந்திக நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஒ-311)

# வெள்ளைப் பிரம்பு தினத்தில் வாழ்வகத்தினர் ஊர்வலம்



வலி.வடக்கு, ஒக்.17

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் நிறுவனத்தினால் ஊர்வலம் நடத்தப்பட்டது. காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்றலில் இருந்து ஆரம்பமாகி சுன்னாகம் நகரத்தைச் சுற்றி மீண்டும் காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று சபாபதிப்பிள்ளை வீதியூடாக வாழ்வகத்தை சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.குமரவேலு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஒ-86)

# கையில் என்ன பெரிய புல்லாங்குழலா? ராணுவத்தின் கேள்வி கவலை தருகிறது

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வில் விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக்.17

வெள்ளைப் பிரம்பைப் பற்றி அறியாத இராணுவத்தினர் சிலர் கையில் என்ன பெரிய புல்லாங்குழல் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்பது எமக்குப் பெரும் கவலை அளிக்கிறது. உலகத்திலேயே 60 சதவீத மானவர்களுக்கு மட்டுமே வெள்ளைப் பிரம்பு பற்றிய அறிவு உண்டு. அவர்களே மதிப்பளிக்கிறார்கள். ஏனையோர் பார்வையற்றவர்களையும், வெள்ளைப் பிரம்பையும் நகைச்சுவையாகவும், விளையாட்டுப் பொருளாகவுமே கருதுகின்றார்கள்- இவ்வாறு கூறினார் விழிப்புப்புலன் அற்றோர் சங்கத் தலைவர் எஸ்.மகேந்திரன்.

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு யாழ்.சுண்டுகுளி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

பார்வை அற்றவர்கள் என அடையாளப்படுத்துவதற்காகவே நாம் கையில் வெள்ளைப் பிரம்பை வைத்துள்ளோம். வெள்ளைப் பிரம்பானது எமது உயிர் நாடி. இன்னொருவரின் துணையின்றி நாம் வாழ்வதற்கு, நடமாடுவதற்கு எமக்கு வழிகோலுவது இந்த வெள்ளைப் பிரம்பே.

இலங்கையிலேயே 40 வருடங்களாக இந்த விழா கொண்டாப்பட்டு வருகின்றது. பார்வை அற்ற எமக்கு இந்த விழா எடுத்துக் கொண்டாடுவது எமது சமூகத்துக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் எமது பிறந்த தினம் என நினைத்து இதனைக் கொண்டாடி வருகின்றோம்.

அத்தோடு ஒவ்வொரு வருடமும் ஊர்வலம் நடத்திச் சிறப்பாகச் செய்வது வழக்கம் இந்த வருடம் அதற்கான வசதிகள் இல்லாததால் செய்ய முடியவில்லை.

எங்களைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டாம். எங்களுக்குப் பார்வை மட்டுமே இல்லை. தவிர ஏனைய தகுதிகள், ஊக்கங்கள் அனைத்தும் எம்மிடம் உண்டு.

பார்வை அற்றவர்களுக்கு எமது சங்கத்தினூடாக பல பயிற்சிகளை அளித்து வருகின்றோம். ஒவ்வொரு நபர்களும் ஏதோ ஒரு சுயதொழிலையோ, திறமைகளையோ தன்னகத்தே கொண்டுள்ளனர்.

எனவே சமூகத்தில் வெள்ளைப் பிரம்புடன் நடமாடுபவர்கள் பற்றியும் விழிப்புலன், செவிப்புலன் அண்ணறார் பற்றியும் அனைவரும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு இடையூறு செய்யாது, துன்புறுத்தாது உதவ முடிந்தால் அது சமூகத்துக்கு நல்லதொரு தொண்டாக அமையும்.

மனிதனின் வாழ்வுக்கு மீனைக் கொடுப்பதை விடுத்து தூண்டிலைக் கொடுத்து மீன் பிடிக்க விட வேண்டும். அப்போதுதான் மனிதன் சுயமாக வாழ்வதற்கும், தனித்து நின்று போராடுவதற்கும் பழகிக் கொள்வான்- என்றார்.

நிகழ்வில் மற்றும் பலர் உரையாற்றினர். (ஒ-311)

# மாவிட்டபுரத்துக்கு வீடு பார்க்கச் சென்றவர் திடீர் மரணம்

தெல்லிப்பழை, ஒக்.17

மாவிட்டபுரத்துக்கு வீடு பார்க்கச் சென்றவர் அங்கு காணியில் வேலைகளில் ஈடுபட்டு விட்டு நேற்று மதியம் 'றொட்டி' சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் திடீரென மயங்கி சரிந்து மரணமானார்.

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் வசித்து வரும் குமாரசாமி சிவானந்தன் (வயது-64) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் யாழ். நகரிலுள்ள மதுபானக் கடை ஒன்றின் ஊழியர் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-36)

# போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியில் கற்களைப் பறித்தவர் பொலிஸால் கைது

வலி. வடக்கு, ஒக்.17

போக்குவரத்து செய்வதற்கு இடைஞ்சலான வகையில் வீதியில் கற்களைப் பறித்த லொறி உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அண்மையாகச் செல்லும் இக்கிரானை வீதியில் கற்களை நடு வீதியில் பறித்து பொது மக்கள் பயணம் செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

பொது மக்கள் கொடுத்த தகவலை அடுத்து சுன்னாகம் பொலிஸார் உடனடியாகச் செயற்பட்டு குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-86)

# நிகழ்வுகள்

**அபிவிருத்தி தொடர்பான கூட்டம்**

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள சனசமூக நிலையங்களுக்கான உள்ளூர் பங்கேற்பு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நெறிக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**விடுதி உரிமையாளர்களுக்கான கூட்டம்**

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் விடுதி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

**வாழும் கலை பயிற்சி அறிமுகம்**

ஜெய குருதேவ் வாழும் கலை பயிற்சி அறிமுக உரை இன்று மாலை 5 மணிக்கு இலக்கம் 132, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான பயிற்சிகள் நாளை செவ்வாய்க் கிழமை முதல் இடம்பெறும். (ஒ-313)

**ஆண்டு நிறைவு விழா**

சங்கானை ஐடிஎம் நஷனல் கம்பஸில் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை எப்போதுமே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது

## வவுனியா நிகழ்வில் வினோ நோதராதலிங்கம் எம்.பி.

வவுனியா, ஒக். 17

பத்திரிகைகளில் பார்க்கின்ற போதும் மக்களிடையே இருக்கும் விமர்சனங்களை பார்க்கின்ற போதும் எவ்வளவு காலம் இந்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு உயிரோடு இருக்கும் என்று சந்தேகிக்கப்படும் அளவிற்கு நாம் எல்லோரும் ஒட்டுமொத்தமாக நடந்துகொண்டிருக்கின்றோம். விடுதலைப் போராட்டமாக இருந்தாலும் சரி அபிவிருத்தி வேலைத்திட்டமாக இருந்தாலும் சரி எமது மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.

கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் மன்றங்களின் தலைவர் உபதலைவர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானபோது அங்கு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

''நாம் தேர்தலுக்கு மக்களிடம் செல்லும் போது ஒற்றுமையை பற்றி பேசுகின்றோம். உணர்வுபூர்வமாக எமது உரிமைக்காக, விடுதலைக்காக ஒன்றுபடுங்கள் ஐக்கியப்படுங்கள் என மேடைகளில் பேசி வரும் நாம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அந்த ஒற்றுமையை கட்டிக்காக்கின்றோமா என்றால், அதில் நாம் தோல்வி அடைந்திருக்கின்றோம் தோல்வி அடைந்து வருகின்றோம் என்றே கூற வேண்டும்.


தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் மத்தியிலும் ஒற்றுமையின்மை இருந்து வருகின்றது நாம் நிவர்த்தி செய்தேயாக வேண்டும். இல்லையேல் எந்த தீர்வையும் தமிழ் மக்களுக்கு எம்மால் பெற்றுக் கொடுக்க முடியாது போய் விடும்.

மக்கள் எம் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் காத்துக்கொண்டிருக்கும் நிலையில் தொடர்ந்தும் நாங்கள் துரோகம் செய்ய முடியாது. இவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு சபைக்குரிய உறுப்பினர்களையும் அழைத்து அவர்களது கருத்துக்களைக் கேட்பதோடு எமது கட்சியை வளர்க்கும் பணியாக கட்சிக்குள் இருக்கும் குறைபாடுகளையும் உறுப்பினர்களுக்கிடையில் இருக்கும் குறைபாடுகளையும் கேட்கும் அரங்கம் ஒன்றினை தலைவர்கள் உருவாக்க வேண்டும்.

எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாத நிலையில் நிச்சயமாக ஒட்டுமொத்த தாயக பிரதேச மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியாது'' என்றார்.

**சிவசக்தி ஆனந்தன்**

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உரையாற்றுகையில், ''தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பலப்படுத்தும் நோக்கோடு கூடுதலாக எதிர்வரும் ஜனவரி மாதமளவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறும். அதற்கு நடைமுறை பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை பேசி தீர்த்து பதிவு செய்து மாபெரும் சக்தியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்க வேண்டும்'' என்றார். (ஒ-10)



மீண்டும் பொலிஸாரின் வீதிச் சோதனை ஆரம்பித்து விட்டதா? இல்லை இல்லை கொரிய தொழிப் பரீட்சை எழுதும் இளைஞர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் ஏதாவது ஆவணங்களை இரகசியமாக எடுத்துச் செல்கின்றனரா என்று பொலிஸார் துருவித் துலாவும் காட்சியே இது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவின் கண்காணிப்பின்கீழ் இந்தப் பரீட்சை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வல்வையில் புத்த கோயில் அமைக்கும் பணி நிறுத்தம்

வல்வெட்டித்துறையில் கத்தோலிக்க தேவாலயத்துக்கு முன்பாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் புத்தர் சிலைக்கான அடித்தளம் தற்போது அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இராணுவத்தினர் அங்கு சட்டவிரோதமாக புத்தர் சிலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்த கருத்தை பலாலி இராணுவ தலைமையகம் மறுத்திருந்தது. எனினும் இராணுவ முகாம் வாசலுக்கு அருகில் மதில் சுவருக்கு அருகே வளர்ந்திருந்த அரச மரத்துக்கு கீழாக புத்தர் சிலைக்கான அடித்தளம் கட்டப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (10)

# செய்தித் துளிகள்: ஒரே பார்வையில்

தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்யுமாறு நோர்வே அரசிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளை தடைசெய்வது குறித்து நோர்வே அரசு மீண்டும் கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொஹான் கார் ஸ்ட்ரோ மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*** *** ***

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்த சம்பவத்தின் பின்னணியில் ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவருக்குத் தொடர்பு இருக்கிறது என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இந்த நபர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற தினமன்று இரவே குறித்த இருவரும் முஸ்லிம் பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவருடன் இணைந்து சென்னைக்குச் சென்றுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

*** *** ***

பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான திட்டங்கள் இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டுமென்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களது சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

தற்போது விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை தற்காலிகமானது எனவும் விரிவுரையாளர் மஹிம் மெண்டிஸ் தெரிவிக்கிறார்.

இந்த முறை வரவு-செலவுத் திட்டத்திலும் விரிவுரையாளர்களுக்கான உரிய தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படாவிடில் பல்கலைக்கழகத்தினுள் மீண்டும் பிரச்சினைகள் பெரிய அளவில் தலைதூக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

*** *** ***

முச்சக்கரவண்டியொன்றும் லொறியொன்றும் நேற்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்திருப்பதோடு மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். தெவிநுவர, தல்பாவில வீதியின் மாளியன்கொடை சந்தியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

*** *** ***

தொம்பே பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் தொடர்பாக மேலும் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனப் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் கைதுசெய்த 34 பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

*** *** ***

கேகாலை மொலமுறே மாவத்தையில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற மோதலின்போது கூர்மையான ஆயுதத்தால் தாக்கி குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

*** *** ***

உடவலவ பணஹடுவ பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சந்தேகநபர் சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை சுமார் 50 பேரிடம் விசாரணை நடத்தி வாக்கு மூலங்களைப் பதிவுசெய்துள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

*** *** ***

ஜே.வி.பிக்கு துரோகம் செய்வதானது, அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்று கட்சியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். சர்வதேச புரட்சித் தலைவர் ஏனஸ்ரோ சே குவேராவின் நினைவு தினம் நேற்று கொழும்பு ஜயவர்தன நிலையத்தில் இடம்பெற்றது.

# சிறுவர் தின நிகழ்வில் 217 மாணவர் உணவு அருந்திய பின்னர் மயக்கம்

## தலவாக்கலை தமிழ்ப் பாடசாலையில் சம்பவம்

கொழும்பு, ஒக். 17

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் வழங்கப்பட்ட உணவு விஷமடைந்ததால் 217 மாணவர்கள் மயக்கமுற்ற நிலையில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று நேற்று தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இந்த விசேட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது .

இந்த நிகழ்வில் 350 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர் என்றும், நிகழ்வின் இறுதியில் வழங்கப்பட்ட உணவு விஷமடைந்ததாலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிறிவெஸ்டன், பாமஸ்டன், லோகி, நோர்வூட், ரத்னகிரி ஆகிய பிரதேசங்களிலுள்ள மாணவர்களே மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கேள்வியுற்றதும் பாடசாலைக்கு விரைந்த பிரதேசவாசிகள் பாதிக்கப்பட்ட சிறார்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுத்தனர்.

வைத்தியசாலைகளில் போதிய மருத்துவ வசதியின்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வெளிமாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நுவரெலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விருப்பு வாக்கு முறையால் நுவரெலியாவில் பிரதி மேயர் பதவியை இழந்தது தமிழர் தரப்பு

## இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆதங்கம்

கொழும்பு, ஒக். 17

நுவரெலியா மாநகரசபைக்கான மேயர் மற்றும் பிரதி மேயர் ஆகியோரை விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நியமித்துள்ளதால் தான் தமிழர் தரப்பில் நாம் பிரதி மேயர் ஒருவரை இந்த முறை இழந்தோம் என்று மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நுவரெலியா மாநகரசபைக்கு தமிழர் தரப்பில் பிரதி மேயர் ஒருவரை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

உறுப்பினர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையில் மேயர் மற்றும் பிரதி மேயர் ஆகியோரை நியமிக்க அரசு தீர்மானம் எடுத்ததால் தான் எமக்கு இந்த நிலைமை.

எமது சிறுபான்மை இன உறுப்பினர்கள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பின்னால் உள்ளனர். பெரும்பான்மை உறுப்பினர்களோ முன்னால் உள்ளனர்.

தமிழர் தரப்பு இந்த முறை பிரதி மேயர் ஒருவரைத் தவறவிட்டமையையிட்டு நாம் கவலை அடைகின்றோம். இருந்தாலும், இதற்கு எதிராக எம்மால் எதுவும் செய்ய முடியாது.

எமக்கு பிரதி மேயர் பதவி கிடைக்காத போதிலும் நாம் அரசுடன் இணைந்து நுவரெலியா மாநகரசபையின் ஊடாக எமது மக்களுக்கு சேவைகளைச் செய்வோம் - என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகத்தில் ஓட்டோ சாரதி கைது

வலி.வடக்கு, ஒக். 17

சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் ஓட்டோ வைத்திருக்கும் நபர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். சுன்னாகம் பஸ் நிலையப் பகுதிக்கு வந்த பொலிஸாரும் இரகசியப் பொலிஸாரும் குறிப்பிட்ட நபரைக் கைது செய்ததுடன் ஓட்டோவையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியின் நண்பர் ஒருவர் கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து தற்போது குறிப்பிட்ட ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ஒ-86)

**வீடு வாடகைக்குண்டு**

4 வாகனங்களுக்கு மேல் பார்க் பண்ணக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு கொக்குவில் கேணியடியில் உண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 3058872, 077 9799706

**வகுப்புகள்**

தரம் 6, 7, 8, 9 மாணவர்களுக்கு கணிதம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 9863678

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில

By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி வகுப்புகள்

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை.

Tel.0776751649

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். நகரிலிருந்து 3 Km சுற்றாடலில் அமைதியான சூழலில் 5 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777311453

# தாக்கலான வேட்பு மனுக்கள் ரத்து

தற்போது தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் நந்திக்கடல் பிரதேச சபைகள் இரண்டுக்கான வேட்பு மனுத் தாக்கலை இரத்துச் செய்ய உள்ளுராட்சி சபை அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இந்தத் தகவலை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ளார்.

# பரிசோதனை அறிக்கை கிடைக்கவில்லை

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெந்தின் தரம் தொடர்பாகப் பரிசோதிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சிமெந்தின் மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. சந்தை யிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட சிமெந்து மாதிரிகள் பரிசோதனைக்காக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் கூறியுள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
27
★
01
★
1929



உதிர்வு
17
★
09
★
2011

### அமரர் இராமலிங்கம் மயில்வாகனம்

**(பிரபல வர்த்தகர், பாணந்துறை)**

கடந்த 17.09.2011 சனிக்கிழமை எமது குடும்பத்தலைவர் சிவபதமடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து எமக்கு உதவி செய்த அனைவருக்கும் மற்றும் அவர் சுகவீனம் உற்றிருந்த வேளையில் பல உதவிகள் புரிந்த வேலணை பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் தக்க நேரத்தில் உதவி செய்த வேலணை ப.நோ.கூ.சங்க பணியாளர்களுக்கும், உற்றார், உறவினர்கள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அன்பு உள்ளங்களுக்கும் ஊடகங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அந்தியேட்டி கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (17.10.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**இ.சிவநாதன்**
*(தலைவர், வேலணை ப.நோ.கூ. சங்கம்).*

**குடும்பத்தினர்**
*"கந்தகிரி",*
*வேலணை வடக்கு, வேலணை*

## மரண அறிவித்தல்

### *வைத்திலிங்கம் மகாதேவன்*

*(முன்னாள் அதிபர் -யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்.இந்துக்கல்லூரி)*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இருபாலை மற்றும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் தற்போது 34, ஸ்ரீ சங்கபோ வீதி, கவுடான, தெஹிவளையில் வசித்தவருமான வைத்திலிங்கம் மகாதேவன் நேற்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கொழும்புத்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை - மங்கையர்க்கரசி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் கமலாவதி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் அருந்ததி, கருணாநிதி (சிரேஷ்ட விரிவுரையாளர் -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (முன்னாள் முகாமையாளர் - HNB), கமலகுமாரி (சிரேஷ்ட விரிவுரையாளர் - திருகோணமலை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் அர்ச்சனா (Asia Pacific Institute of Information Technology), பிரதீஷ்ன (St. Thomas College), சண்முகி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.10.2011) திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் தெகிவளை-கல்கிசை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

**தெகிவளை.** **குடும்பத்தினர்.**

## 6 ஆம் மாத நினைவலைகள்

தோற்றம்
12.06.1973

மறைவு
16.05.2011



அன்பிற்காய் ஏங்கும் நெஞ்சங்கள்
ஆயிரம் அவனியில் தவித்திருக்க
அடைக்கலம் தேடி ஆண்டவனடி சேர்ந்தாயோ ...
உள்ளத்தால் என்றும் வாடாமலிருந்து
புன்னகை பூத்த மலரே ...
எம் உயிர் மண்ணில் மடிகிற வரையில்
உம் நினைவு என்றும் மறையாது
உறவுகள் என்றும் பிரியாமலிருக்க
எம்மை விட்டுப் பிரிந்த உன் ஆன்மா
என்றும் ஆண்டவன் கரத்திலிருக்க
வேண்டுகின்றோம்.

### அமரர் சீவரத்தினம் சீவறஞ்சன்

**(றெஜி றெஸ்ரோரன்ட் உரிமையாளர்)**

என்றும் நினைவுடன்:
**இந்திரா (மனைவி).**
**இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குதிரைக்கு முன்னால் வண்டியா?

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பு ஒன்றின்போது, வடக்கு மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்ததால், மாகாண சபைத் தேர்தலில் அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதில் உண்மை இருக்கிறது.

போர் முடிவுற்று இரண்டரை வருடங்களாகின்றன. தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு - ஆறு தசாப்த காலமாக இழுபட்டுவரும் இனப்பிரச்சினைக்கு - தீர்வு காண்பதில் அரசாங்கம் உள்ளார்ந்த ரீதியில் அக்கறை காட்டவில்லை. வாய்ச்சொல்லில் காலத்தை வாங்கி வருகின்றது.

பொதுத் தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தையை பெயருக்காகத் தொடங்கிவிட்டு, கடந்த பத்து மாதங்களாக இழுத்தடித்து வருகின்றது அரசு. தமிழ் மக்களுக்குரிய உரிமைகளில், எவற்றைத்தான் வழங்கப்போகிறது, எந்தெந்த ஆட்சி அதிகாரங்களைக் கொடுக்கத் தயாராக உள்ளது என்பதனைத் தானும் உச்சரிக்கக் கூட விரும்பமின்றி ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றது அது.

தன்னால் தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடிய ஆகக் குறைந்த ஆட்சி அதிகாரங்கள் எவை, அல்லது ஆகக் கூடிய ஆட்சி அதிகாரங்கள் எவை என்பதைத் தானும் வெளிப்படுத்த முன்வராது ஒளித்துப் பிடித்து கண்ணாமூச்சி விளையாடுகின்றது மஹிந்த அரசு. அதற்கு ஒரு பொழுதுபோக்கு விடயமாக இது மாறிவிட்டதோ என்று கருதும் அளவுக்கு, அதனிடம் வெறும் போலித்தனம் விரவிக் காணப்படுகின்றது. அவ்வாறில்லை என்றால், இது வரை தனது தீர்வுப் பொதி எது என்றாயினும் தெரிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அரசு அது தொடர்பில் ஓர் அங்குலம் தானும் நகரவில்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஏதோ ஒரு காரணத்தைக் கூறி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உண்மையான ''பற்று'' உள்ளதாகக் காட்டிக் கொள்கிறது. அவ்வளவுதான்.

அரசாங்கத்தின் காலம் கடத்தும் இந்த ''வித்தை'' வெளிநாடுகளுக்கும் தெரியும். ஈழத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகக் குறிப்பாக இந்தியா அதிக கரிசனை காட்டி வருகின்றது. அதற்குக் காரணம் உண்டு என்பதனை இந்தப் பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டி உள்ளோம்.

போரின் இறுதிக்கட்டத்தில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன என்று விடயத்தில், இலங்கை தண்டிக்கப்பட வேண்டும் என்று தமிழகம் ஆரம்பித்த அழுத்தம், இந்திய மத்திய அரசுக்கு அதிகரித்து வருவதும், அந்த அழுத்தம் தமிழகத்தோடு மட்டும் நின்றுவிடாது, அந்த நாட்டின் ஏனைய மாநிலங்களுக்கும், ஏன் புதுடில்லி வரையும் பரந்து விரவி வருகின்றது என்பது இப்போது புதிய சங்கதி அல்ல.

தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கினால் மட்டுமே போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்கு ஓரளவிலேனும் வாய்ப்பு உண்டு என்று இந்திய அரசு கொழும்புக்கு விலாவாரியாக விளக்கியதாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேவேளை, பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக் கொள்ள வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமும் இந்தியா வலியுறுத்தி உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. அடுத்த வாரத்தில் அமெரிக்க மற்றும் கனேடிய அரச அதிகாரிகளைச் சந்திக்க கூட்டமைப்பினர் அந்த நாடுகளுக்குச் செல்லவுள்ளனர். இந்தியா கூறிய 'புத்திமதியே' பின்னைய நாடுகளிலும் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை அரசு தனது சுய அட்டவணைக்குள் சேர்த்துக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடிவு செய்துள்ளது எனக் கருதலாம். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அடுத்த (மார்ச் மாத) அமர்வுக்கு முன்னதாக, தமிழ்ப் பிரதேசத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கிறோம், எமது நாட்டில் தமிழர்கள் சம உரிமைகளுடன் வாழ்கிறார்கள் என்று உரத்த குரலில் சர்வதேசத்துக்குக் கூறுவதற்கு, காட்டுவதற்குத் திட்டமிடுகிறது அரசு.

தேர்தலுக்கு முன்னோட்டமாக, அதனுடன் தொடர்பான காய் நகர்த்தல்களில் அரசாங்கத் தரப்பு ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. குறிப்பாகச் சொல்வதானால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு வடமாகாண சபைத் தேர்தலை வென்றெடுப்பதற்கான விரிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகின்றது. வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதென்ற குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டும் உத்திக்கு, இந்தியா சோரம் போவது, எந்த வாய்ப்பாட்டில் அல்லது அட்டவணையில் அடங்குகிறது என்பது தெளிவற்றதாகவே உள்ளது. இறுதிப் போரின்போது இலங்கை அரசுக்கு உதவியது போன்ற ஏற்பாடோ என்றும் ஐயுற வேண்டி உள்ளது.

இதே அணுகுமுறையை அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் மேற்கொள்ளுமா என்ற சந்தேகம் இயல்பாகவே எவருக்கும் தோன்றும். இலங்கைக்கு அயல்நாடு இந்தியா. அதனால் இந்தியாவின் தோழமை நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்தியாவை உராய்ஞ்சிக் கொண்டு செயற்பட முன்வரமாட்டா என்ற சமன்பாடு ஒன்று உண்டென்பதனையும் தமிழர் தரப்பு புறக்கணிக்கக் கூடாது. எல்லோருமாகச் சேர்ந்து தமிழ் மக்களின் தலையில் சம்பல் அரைக்க எந்தக் கட்டத்திலும் இடமளிக்கவும் கூடாது.

# பாதாள உலக கும்பல்களின் செய்கையால் உலக மட்டத்தில் அரசுக்கு பெரும் அபகீர்த்தி

நேற்று 16-10-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

துப்பாக்கிச் சண்டையொன்றையடுத்து ஆளும் கட்சியின் அரசியல் வாதியொருவர் கொலையானார். இன்னொருவரை பாரதூரமான காயங்களுக்குள்ளாக்கியுள்ளது. இந்த நிகழ்வு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியினை களங்கப்படுத்திவிட்டது எனலாம்.

23 உள்ளூராட்சி மன்றங்களில் 22 இல் அது வெற்றியீட்டியது. இது மூன்றாவது தடவையாகவும் ஐ.தே.கட்சிக்கு படுதோல்வியை ஏற்படுத்தியது. கொழும்பு மாநகரசபை வெற்றிதான் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆறுதல். இருந்தும் அங்கேயும் அக்கட்சி 53பேர் கொண்ட சபையில் சிறுபான்மை நிலையிலேயே இருக்க நேர்ந்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதற்கு சுமார் இரண்டுமணி நேரத்துக்கு முன்னர் இரண்டு ஆயுதம் தரித்த குழுவினர் மோதல் ஒன்றில் ஈடுபட்டனர். ஒரு குழு ஜனாதிபதியின் தொழிற்சங்க விவ காரங்களுக்கான ஆலோசகர் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திராவுக்கு ஆதரவானது. அவர் முன்னர் கொழும்பு மாவட்டத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். கொலன்னாவ தேர்தல் தொகுதி அவருக்குப் பலத்த ஆதரவு வழங்கும் தொகுதியாக இருந்துள்ளது. மற்ற குழுவானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேசமான்ய ஆர் துமிந்த சில்வாவுக்கு ஆதரவானது. நாட்டின் இரண்டாவது மிக உயர்ந்த விருதினைப் பெற்றவர் அவர். பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு எம்.பியாகவும் அவர் செயல்பட்டுவந்தார். இந்த இரண்டு விருதுகளும் அவரது தனிப்பட்ட இணையத் தளத்தில் மிகவிலாசமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. துமிந்த சில்வா நிறுவனத்தின் தலைவராகவும் அவர் இருப்பதாகக் காட்டப்படுகின்றார். கொலன்னாவ தொகுதிக்கான உறுப்பினராக அவர் செயல்பட்டு வந்தார். அவரது ஆதரவாளர்களுக்கும் பிரேமச்சந்திராவின் ஆதவாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை பல மாதங்களாகவே இருந்து வந்துள்ளது.

கொலன்னாவையில் வல்பொல என்ற இடத்தில் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளது. பிரேமச்சந்திர அந்த இடத்திலேயே மரணமானார். அவரது உடல் முழுவதும் ரி-56 றைபிள் சன்னங்கள் தலையிலிருந்து கால் பெருவிரல் வரை துளைத்திருந்தன. குறைந்தது 40 தடவையாகுதல் அவர் மீது சுடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கைதுப்பாக்கியொன்றினால் சுடப்பட்டிருந்தது. சில்வாவின் தலையில் இரண்டு துண்டுகள் பாய்ந்திருந்தன. அவசர சிகிச்சைக்குள்ளான அவர் உயிர் காப்பு கருவியின் உதவியில் சுவாசிப்பதாக வியாழக் கிழமை டாக்டர்கள் கூறினார்கள். பின்னர் வெள்ளிக்கிழமை அது நீக்கப்பட்டு அவர் சுமுக நிலைக்கு திரும்பியுள்ளதாக டாக்டர்கள் கூறினார்கள்.

இந்தச் சம்பவத்துக்கு இட்டுச்சென்ற தொடர் நிகழ்வுகள் பற்றிய விவரங்கள் பொலிஸ் விசாரணைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பிரேமச்சந்திராவே முதலில் துப்பாக்கியால் சுட்டார் என்று ஒரு பிரிவினர் கூறியுள்ளனர். அதனை மற்ற பிரிவினர் மறுத்துள்ளனர்.

மரணமான பிரேமச்சந்திராவின் 5 சகோதர சகோதரிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தச்சம்பவம் நிகழ்வதற்கு முன்பே எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தமது சகோதரர் பிரேமச்சந்திராவையும் மற்றும் கொலை பயமறுத்தலுக்குள்ளாகியுள்ள சுதந்திரக்கட்சியினரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்ததாக தெரிவித்துள்ளார்கள்.

உள் கட்சியிலேயே பக்கம் சாயும் உறுப்பினர்களால் பாரதவுக்கு ஆபத்து ஏற்படவிருக்கிறது. எமது சகோதரருக்குரிய

## 30 வருடகால ஆயுதக் கலாசாரம் ஒழித்துக் கட்டப்படுவதன் அவசியம்

இடம் கொலன்னாவையில் வழங்கப்படாமை வேதனையாகும். நாங்கள் எல்லோரும் அங்குதான் பிறந்து வளர்ந்தோம். தற்பொழுது உரித்தில்லாத உரிமைகளை அனுபவிக்கும் சந்தர்ப்பவாதி ஒருவர் தனது அதிகாரங்களைப் பரப்பி வருகிறார். அவர் மூலம் உயிர் ஆபத்து வெளிப்பட்டிருப்பது கவலையளிப்பதாகும் என அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பிரேமச்சந்திராவுக்கும் சில்வவுக்குமிடையில் கோஷ்டி மோதல்கள் இருந்து வருவது பொலிஸ் தலைமையகத்தில் உள்ளவர்களுக்கு பகிரங்கமான விடயம்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் சில்வாவின் ஆதரவாளர்களான மூன்று பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டபோது முன்னாள் பொலிஸ் அதிபர் டாக்டர் மகிந்த பாலசூரிய பிரேமச்சந்திராவை விசாரணை செய்யும்படி உத்தரவிட்டிருந்தார். பிரேமச்சந்திராவும் தலைமறைவுக் கும்பல்களின் ஆதரவைப் பெற்றிருந்தார் என்பதே இதற்குக் காரணமாகும். அவர் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட போது தாமோ தமது ஆதரவாளர்களோ இந்தச் சம்பவத்தில் தொடர்பு கொண்டிருக்கவில்லையென்று அவர் மறுத்திருந்தார். சில்வாவின் ஆதரவாளர்கள் போதைப் பொருள் கடத்துவோர் மற்றும் கொலன்னாவையில் சேரிகளில் வாழ்பவர்களில் ஒரு பகுதியினரும் அடங்குவர் என்று பொலிஸார் கூறினார்கள். பிரேமச்சந்திராவின் ஆதரவாளர்களில் கொலன்னாவையைச் சேர்ந்த சுதந்திரக்கட்சி ஆதரவாளர் ஒருவர் போதைப் பொருள் கடத்து பவர் என்றும் கூட குற்றச் சாட்டுகள் கூறப்படுகின்றன.

பிரேமச்சந்திரவும் அவரது ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொடிக்காவத்தை-முல்லேரியாவ பிரதேச சபையில் பி.குணசிங்க சோலங்காராச்சி என்பவருக்கு விருப்பு வாக்குகளை சேகரிப்பதற்கான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவருக்கு 42, 322 விருப்பு வாக்குகள் கிடைத்தன. பிரதேச சபையில் இதுவே மிக அதிகமான விருப்பு வாக்காகும். சில்வாவும் ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே பிரசாரம் செய்தாலும், சுமுதுருக்ஷன் என்பவருக்கு விருப்பு வாக்குகளை வழங்குமாறு வாக்காளர்களைக் கேட்டுவந்தார்கள். ருக்ஷனுக்கு 8157 விருப்பு வாக்குகள் கிடைத்து இரண்டாவதாக வந்தார்.

ருக்ஷன் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர் என்றும் சேரிப்பகுதியைச் சேர்ந்ததாக அவர் பெயர் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவிடம் பத்திரிகையாளர்கள், அரசியல் வாதிகளில் பலரும் பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்களையே மெய்ப்பாதுகாவலர்களாக வைத்திருக்கிறார்கள். அரசு அதிகாரம் அற்ற ஆயுதங்களைக்களைவதற்கு இப்பொழுதுதான் விழிப்படைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். அமைச்சர் பின்வருமாறு பதில் கூறினார்:-

கடந்த மூன்று தசாப்தங்களாக ஆயுதக்கலாசாரம் நாட்டில் இருந்து வந்துள்ளது. ஒருசில மாதங்களில் இதனைக் களைந்து விடமுடியாது. பெரும்பாலான சமயங்களில் அரசியல்வாதிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாவல் போதாது என்றே கருதுகிறார்கள். அதனால் அவர்கள் தமது

**தமிழில்: கோகுலன்**

ஆள்களையும் வைத்துக் கொள்கிறார்கள். அதனால் பிரச்சினைகள் எழுகின்றன. எனவே அரசு இப்பொழுது செயல்படத் தொடங்கியுள்ளது. நடந்துள்ளசம்பவம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என்று நான் நினைக்கிறேன். தன்னிச்சையாக நடந்த எதிர் விளைவு அல்ல'' என்றார்.

முல்லேரியாவ சம்பவம் தொடர்பாக அரசைச் சேர்ந்த முக்கிய தலைவர்களே தலைமறைவு கோஷ்டிகள் அரசியலுக்குள் தலையெடுப்பதைக் கண்டித்து வருகிறார்கள் பிரேமச்சந்திரவின் மரணச் சடங்கில் உரை நிகழ்த்திய பிரதம மந்திரி டி.எம்.ஜெயரட்ண, இம்மாதிரி நடவடிக்கைகளில் ஒருசிலர் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் சர்வதேச சமூகத்துக்கு நம் நாட்டை பற்றிய கூடாத தகவல்களை இது கொடுத்து விடு கிறது என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில்பிரேமஜெயந்த, கருத்து

(26ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.17

குடாநாட்டின் பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள் இல்லை என்று கூறப்படுகின்றது.

இதேவேளை புதிய பாட நூல்கள் புத்தகங்கள் மருந்து சுற்றுவதற்குப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

இதை நேரில் கண்டவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

மந்திகை ஆதார வைத்திய சாலை தற்போது பருத்தித்துறை பிரதேச வைத்தியசாலையாக இயங்குகின்றது.

அங்கு 10 மூடைகளில் புத்தகக் கட்டுக்கள் மருந்து கட்டுவதற்காக வந்துள்ளன.

இப்பாடநூல்கள் யாவும் புதிய பாடத்திட்டத்தை விளக்குவனவாக உள்ளன.

கல்விப் பிரிவில் இருந்து அல்லது வேறு மார்க்கமாகவோ இந்த நூல்கள் வந்திருக்கலாம்.

மாணவர்களின் கல்விப் பசிக்கு தீனிபோடும் இந்த நூல்கள் இவ்வாறு மருந்து சுருளாக மாறுவது மிக வேதனையான விடயம் ஆகும்.

இந்த விடயத்தை நேரில் பார்த்த பேராதனை பல்கலைக் கழக கல்விமான் இவ்வாறான சம்பவங்கள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

சில வேளைகளில் இருப்பில் இருந்து எடுக்கப்படாத நூல்கள் இவ்வாறு வெளியில் வந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமிழ் பிரதேசத்துக்கு கொண்டுவரப்பட்ட பாடநூல்கள் மருந்துச் சுருள்களாக மாறுவது வேதனை தரும் விடயம் என்று இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

பழைய புத்தங்களே மருந்து சுற்றுவதற்கு வழங்கப்படுவதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புதிய பாடப் புத்தகங்கள் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு மருந்து சுற்றுவதற்கு பயன்படுவதாக கிடைத்த முறைப்பாடு தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

எமக்குப் பழைய புத்தகங்கள் வேறு வழியில் கிடைக்கின்றன. அதனையே மருந்து சுற்றுவதற்கு பயன்படுத்தப்படுகின்றோம். அது எந்த வழியில் கிடைக்கின்றது என்று தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

தற்போதைய பாடப் பரப்புக்கு அப்பாற்பட்ட புத்தகங்கள் சில இவ்வாறு மருந்து சுற்றுவதற்கு மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொடுக்கப்பட்டுள்ளன. புதுப்பாடத்திட்ட புத்தகங்கள் எவையும் அவ்வாறு கொடுக்கப்படுவதில்லை. புதுப் பாடத்திட்ட புத்தகங்கள் போதாமல் இருக்கிறது. அதை எவ்வாறு கொடுக்க முடியும்? என்று கேள்வி எழுப்பினார். (ம-319-302)

## மோட்டார் சைக்கிளை மோதிய கார் தப்பிச் சென்றது

யாழ்ப்பாணம், ஒக்.17

வீதி ஒழுங்குப் பொலிஸார் நிற்கக் கூடியதாக மோட்டார் சைக்கிளை மோதிய கார் அந்த இடத்தில் நிற்காது ஓடித் தப்பிய சம்பவம் சனிக்கிழமை சுன்னாகம் நகரப் பகுதியில் இடம்பெற்றது.

காங்கேசன்துறை வீதி வழியாக வந்த கார் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் முன் சில்லு வளைந்துள்ளது. பொது மக்கள் பார்த்திருக்கக் கூடியதாக குறிப்பிட்ட வாகனம் நிற்காது சென்று மறைந்துள்ளது.

அயலில் சுமார் இருபத்தைந்து மீற்றர் தூரத்தில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த போதிலும் பொலிஸார் நடவடிக்கையை மேற்கொள்ள முன்னர் கார் தப்பிச் சென்றுள்ளது என்று கூறப்பட்டது. (ம-86)



சர்வதேச வெள்ளைப் பிரம்புத் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தால் ஊர்வலம் நடத்தப்பட்டது. காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றிலில் இருந்து ஆரம்பமாகி சுன்னாகம் நகரத்தைச் சுற்றிய பின்னர் மீண்டும் காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று சபாபதிப்பிள்ளை வீதியூடாக வாழ்வகத்தை சென்றடைந்தது. இந்த நிகழ்வில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.குமாரவேலு கலந்துகொண்டார். (ம-86)

# மழையில் நனைந்து கடும் வெயிலில் காயும் வலிகாமம் வலய அலுவலர்களின் வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஒக.17

மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் அலுவலர்களின் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பன மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக இந்த அலுவலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த இரு அலுவலகங்களும் மருதனார்மடத்தில் இயங்கி வருகின்றபோதும் அலுவலர்களின் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான பாதுகாப்பான தரிப்பிட வசதிகள் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் வெட்ட வெளியிலும் மரங்களின் கீழும் அலுவலர்கள் தமது மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை நிறுத்துகின்றனர். இவை வெயில், மழை என்பவற்றால் பாதிக்கப்படுவதைக் காண முடிகின்றது. மழைக்காலங்களில் வெள்ள நீரால் இவை சூழப்பட்டுக் காணப்படுகின்றன. இதனால் இவற்றை எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமங்களை இந்த அலுவலர் கள் எதிர்கொள்கின்றனர். மேலும் அதிக பணம் செலுத்தித் தாம் கொள்வனவு செய்த தமது வாகனங்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதை எண்ணி அவர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்வித் திணைக்களத்தின் உயரதிகாரிகளின் கண்களில் இந்த அவலநிலை தினமும் தென்படுகின்றபோதும் அவர்கள் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

பருவமழை காலம் ஆரம்பித்துள்ளதால் இனியாவது தமது வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான கொட்டகைகளை அமைத்து வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# வர்ணக்கலவை உடைகிறது

கைதடி, ஒக். 17

நாவற்குழியில் அமைந்திருக்கும் இரும்புப் பாலத்தில் ஏற்படும் சறுகலைத் தடுப்பதற்காக அண்மையில் போடப்பட்ட மண்கலந்த வர்ணக்கலவை வாகனங்களின் அதீதப் போக்குவரத்தால் உடைந்துவருகிறது.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்த இரும்புப் பாலங்களில் ஏற்படும் திடீர் விபத்தை தடுக்கும் முகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பாலங்களில் வர்ணக் கலவையை ஊற்றிப் பாலத் தகடு சறுக்காத வண்ணம் செய்து வருகிறது. ஆனாலும் நாவற்குழி பாலத்தில் போடப்பட்ட இந்தக் கலவை திண்ம நிலையை அடைந்து சில நாள்கள் ஆனாலும் ஆங்காங்கே உடைகிறது. இதனால் மீளவும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தவிடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கூடிய கவனமெடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-288)

# தவறான செயற்பாடுகளுக்கு 'வடதாரகை' அனுமதிக்கப்படாது

யாழ்ப்பாணம், ஒக். 17

நெடுந்தீவுக்கான சேவையில் உள்ள வடதாரகைப் படகு நெடுந்தீவு மக்களுக்கே உரியது. தவறான செயற்பாடுகளுக்கு அனுமதிக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இதனைக் குறிப்பிட்டார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியேல் றெக்சியன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சபையின் ஆரம்ப நிகழ்வில் வடதாரகையின் சேவையால் நெடுந்தீவு மக்கள் நிம்மதியான பயணத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

நெடுந்தீவுப் பயணிகளைக் கீழ்த் தளத்துக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டு தென்பகுதியில் இருந்துவரும் மக்களை மட்டுமே மேல்தளத்தில் இருந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறது.

இதனால் வயது முதிர்ந்தவர்கள் மற்றும் நோயாளர்கள் பெரும் கஷ்டப்பட்டே கீழ்ப் பகுதிக்கு இறங்கி ஏறவேண்டியுள்ளது.

நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்துக்கென வழங்கப்பட்ட இந்தப் படகு உல்லாசப் பயணிகளுக்கான படகாக மாறி வருகிறது. நெடுந்தீவு மக்கள் எடுத்துவரும் பொதிகளை ஏற்ற மறுக்கும் நிலையில் வேறு பொதிகள் ஏற்றப்படுகின்றன.

எமக்கென வழங்கப்பட்ட படகில் எமது மக்கள் பயணிக்கப் பிரயத்தனப்பட வேண்டியுள்ளது என்றும் கூறப்பட்டது.(ம-7)

# நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் இறங்குதுறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் குறிகாட்டுவான் துறைமுகத்தில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்களப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட சிறுகைத்தொழில் அமைச்சரிடம் குறிகாட்டுவான் துறைமுகத்தில் சங்கப்படகை நிறுத்தி பொருள்களை ஏற்றுவதில் கஷ்டம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பெருமளவு மக்கள் நயினாதீவுக்குச் செல்வதால் அந்த மக்களின் போக்குவரத்து வசதிக்காக சங்கப் படகைத் துறைமுகப் பாலத்தில் நிறுத்திவைக்க அனுமதிப்பதில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரும் பாரஊர்தியை மக்கள் நெருக்கடி எனக்கூறி நீண்டநேரம் பாலத்துக்குச் செல்லமுடியாதவாறு நிறுத்தி வைக்கப்படுகிறது.

படகு ஊழியர்கள் படகில் நடுக்கடலில் நங்கூரமிட்டபடி இருக்கவேண்டியுள்ளது. இதனால் அவர்கள் தமது உணவுகளைக் கூட எடுக்க முடியாதுள்ளது.

குறிகாட்டுவான் துறைமுகம் நெடுந்தீவு மக்களின் கடற் போக்குவரத்து வசதிகருதி அமைக்கப்பட்டது. நயினாதீவுக்கான போக்குவரத்து புங்குடுதீவு, கழுதைப்பிட்டி துறைமுகமே காலம்காலமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது நயினாதீவுக்கான போக்குவரத்து குறிகாட்டுவான் வழியாக இடம்பெறுவதுடன் நயினாதீவுக்குச் செல்லும் மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு குறிகாட்டுவான் துறைமுகத்தில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதனால் நெடுந்தீவில் இருந்து பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வரும் சங்கப் படகு சில சமயங்களில் இரவு நேரத்திலேயே பொருள்களுடன் நெடுந்தீவுக்குப் புறப்பட வேண்டியுள்ளது. காற்று, மழை காலங்களில் இதனால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, சங்கப் படகு உரிய முறைப்படி தனது செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடியதாக குறிகாட்டுவான் துறைமுகத்தில் உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் நெடுந்தீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் அமைச்சரிடம் தெரிவித்தது.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளது.

இதனையடுத்து இதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை அதிகரிக்கும் நோக்கில் கருத்தரங்கு

## இன்று காலை யாழ். இராமநாதன் வீதி மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 17

பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை அதிகரிக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் மாபெரும் அரசியல் கருத்தரங்கு ஒன்றை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் வீதி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், விழுதுகள் நிறுவனப் பணிப்பாளர் திருமதி சாந்தினி சச்சிதானந்தம், யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை விரிவுரையாளர் சி.சிவநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் பெண்கள் தமது தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது. அதற்கான திறன்களை எவ்வாறு வளர்த்துக்கொள்வது, பெண்கள் எவ்வாறு கற்றலை மேம்படுத்துவது, பெண்கள் அரசியலில் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. இலங்கையின் சனத்தொகையில் 51 வீதமானவர்கள் பெண்களாக உள்ள நிலையில் 4 வீதமானவர்கள் கட்சிகளிலும், மாகாணசபைகளில் 3.9 வீதமானவர்களும், மாநகர சபைகளில் 4 வீதமானவர்களும், பிரதேச சபைகளில் 2 வீதமானவர்களும் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் சமூகத்துறைகளில் முக்கியமாக கல்வி, உள்ளூர் சமூக நிறுவனங்களில் ஆர்வம் காட்டியுள்ள போதும் அரசியலில் இவர்கள் வரையறுக்கப்பட்டே பங்களிப்பு செய்கின்றார்கள்.

இத்தகைய விவாதங்கள் தொடர்பான கருத்துரைகளை பெண்கள் மத்தியில் ஏற்படுத்திப் பெண்களும் அரசியலில் ஈடுபட முடியும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலில் பங்குபற்றிய பெண்களும், அரசியலில் ஆர்வமுடைய பெண்களும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என்று மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (ம-313-311)

# காணிப் பதிவுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டும் மக்கள்

அளவெட்டி, ஒக்.17

அளவெட்டிக் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்தில் காணிப் பதிவுகளை மேற்கொள்வதற்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் வந்து சேர்கின்றனர்.


இதேவேளை இந்தப் பதிவுகள் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்று பூரண விளக்கம் இன்றி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-36)

### கௌரவம்...



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களைக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் வரவேற்று அழைத்துச் செல்கிறார். விருந்தினர்களான யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் ஏ.என். கிருஷ்ணவேணி, ஓய்வுபெற்ற பிரதி அதிபர் தி.சண்முகநாதன் , நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ந.சுதாகரன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# வீதித்திருத்த வேலைகளால் பெரும் அவலப்படும் பயணிகள்



யாழ்ப்பாணம், ஒக். 17

நாவற்குழிப் பிரதேசத்தின் ஏ-9 வீதியின் அகலிப்பு வேலைகள் ஒரே நேரத்தில் இருபக்கமும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் வீதியில் செல்லும் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் அவலங்களைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த வீதியின் ஒருபக்க வேலைகள் கடந்த இரு மாதங்களாக நாவற்குழியை அண்டிய பகுதியில் இருந்து ஆரம்பிக்கப் பட்டது.

ஆனாலும் கடந்த மாதம் தொடக்கம் ஒரேநேரத்தில் இரண்டு பக்கங்களிலும் பணிகள் இடம் பெறுகின்றன.

இதனால் இருபக்கமும் கிடங்குகள் வெட்டப்பட்டு செம்மண் பறிக்கப்பட்டுள்ளன.

இதனால் வீதியின் இருபக்கங்களாலும் வாகனங்கள் செல்லும் நேரத்தில் மண்புழுதி காற்றில் பறந்து பயணிப்போருக்கு இடையூறு விளைவிக்கிறது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் சீருடையையும் அசுத்தப் படுத்துகிறது.

இதனால் சுவாச நோய்கள் ஏற்படும் நிலையும் உள்ளது.

எனவே இந்த விடயத்தில் சம்பத்தப்பட்டோர் உடனடியாகக் கவனமெடுத்து இந்தத் திருத்த வேலைகளை முதலில் ஒருபக்கமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-288)

# மாற்றுவலுவுடையோருக்கு அவயவம் பொருத்தும் இலவச சிகிச்சை முகாம்

## மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 17

மாற்றுவலுவுடையோர் செயற்கை அவயவங்கள் பெறுவதற்கான இலவச சிகிச்சை முகாம் எதிர்வரும் 25ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் கே.கே.எஸ். வீதியிலுள்ள இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் இடம்பெறவுள்ளது.

மோட்டிவேசன் இலங்கை நிறுவனத்தால் ஜொகானிற்றரின் நிதி உதவியுடன் வவுனியா ஒகன், மன்னார் வாழ்வுதயம், கண்டி சென்ரர் போர் கான்டிகப் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து இதற்கான தொழில்நுட்ப உதவிகளைவழங்கியுள்ளன.

அத்துடன் இயன் மருத்துவர்கள், செயற்கை அவய நிபுணர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் கொண்ட குழுவினரும் நேரடியாக வருகை தந்து இந்த சிகிச்சை முகாமை நடத்தவுள்ளனர்.

இந்த சேவையில் பயன்பெற விரும்பும்அவயவங்களை இழந்தவர்கள், நடமாட முடியாதவர்கள் 24 ஆம் திகதிக்கு முன்னதாக தீபன், மக்லியோட் வைத்தியசாலை, கே.கே.எஸ். வீதி இணுவில் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாற்றுவலுவுடையோர்களுக்கான ஏனைய உதவிகள், சேவைகள் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள், முறைகள் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்படவுள்ளது.

மிதிவெடி மூலம் பாதிப்புற்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சேவை வழங்கப்படுவதுடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி செயற்கை அவயவங்கள் பொருத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# கைதடி கூட்டுறவுக் கண்காட்சியில் பண்டத்தரிப்பு சங்கம் முதலிடம்



யாழ்ப்பாணம், ஒக்.17

கைதடியில் நடைபெற்ற கூட்டுறவுக் கண்காட்சியில் வடமாகாண ரீதியில் பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்துக்கான விருதைப் பெற்றுக்கொண்டது.

இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் அதன் செயற்பாட்டு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளதாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மன்னார், தாழ்வுப்பாடு கடற்றொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# இரவு நேர ரோந்தில் கோப்பாய் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக். 17

கோப்பாய் பொலிஸாரின் இரவுரோந்துப் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இரவு 7 மணிக்குப் பின்னர் பொலிஸார் சைக்கில்களிலும் மற்றும் கால்நடையாகவும் தமது ரோந்துப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

வலி.கிழக்கில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸ் ரோந்துப் பணிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன.

இரவில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுவோரை பொலிஸார் வழிமறித்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தியும் வருகின்றனர்.

அதேவேளை இராணுவத்தினரின் பாதுகாப்பு ரோந்துப் பணியும் அதிகரித்தே காணப்படுகின்றன. இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் இந்தப் பகுதிகள் அமைதியாக உள்ளது. (ம-26)

# யாழ். மாவட்ட விவசாயிகள் பெரும்போகத்தில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்.மாவட்டத்தின் அதிகமான பிரதேசங்களில் விவசாயிகள் பெரும்போக நெற் போகச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கால நிலைகளுக்கு ஏற்றாற் போல் மழையினை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு தற்போது பெய்து வரும் மழை சாதகமாக அமைந்துள்ளதால் அதிகமான விவசாயிகள் நெற் பயிர் செய்கை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

குறிப்பாக நவாலி, ஆனைக்கோட்டை, கந்தரோடை போன்ற பிரதேசங்களில் அதிகமான வயல் நிலங்களில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் இத்தகைய ஆர்வத்தினால் விதை நெல்லுக்கு அதிகளவு கிராக்கி ஏற்பட்டுள்ளது . ஒரு மூடை விதை நெல் இரண்டாயிரம் ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப் பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பெரும்போக அறுவடையின் போது காலநிலைகள் சீராக அமையுமானால் அதிகமான விளைச்சலைப் பெறுவதுடன் நெல்லுக்கு அதிகளவு இலாபம் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவுக் குண்டுத் தாக்குதலுடன்தொடர்புடைய சந்தேகநபர் இலங்கையில் கைதானார்

மாலைதீவில் குண்டுத் தாக்குதல் ஒன்றுடன் சம்பந்தப்பட்டு அங்கிருந்து தப்பி வந்து இலங்கையில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட மாலைதீவு பிரஜையை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சர்வதேச பொலிஸாரின் தகவலுக்கு அமைய மொஹமட் அமீன் என்ற மாலைதீவு பிரஜையை இலங்கை இரகசியப் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி மாலைதீவின் சுல்தான்பாப் பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தில் குறித்த நபர் கைது செய்யபட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

பயாகல பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்ததை அடுத்து நீதிமன்றம் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

(வ)



ஆசிரியர் தின நிகழ்வின்போது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து மாணவர்களால் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேடையில் நிற்கின்றனர். (வ-135)

# போலிக் கடவுச் சீட்டில் இலங்கைக்கு பயணிக்க முற்பட்டவர் கைது

போலிக்கடவுச்சீட்டு மூலம் தூத்துக்குடியில் இருந்து பயணிகள் கப்பலில் இலங்கைக்கு வரமுற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் சூரங்குடிப் பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் (வயது-40) என்பவர் தற்போது மதுரை மாவட்டம் கே.புதூர் பகுதியில் வசித்து வருகிறார்.

இவர் போலிக் கடவுச்சீட்டு மூலம் தூத்துக் குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் பயணிகள் கப்பலில் செல்ல முயற்சி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது கடவுச்சீட்டை சோதனை செய்த குடியுரிமை பிரிவு அதிகாரிகள், சந்தேகம் கொண்டு இணையத்தளம் மூலம் சோதனை செய்தனர். சோதனையில் கடவுச்சீட்டு போலி என்பது தெரிய வந்தது.

விசாரணையில் முருகானந்தம், தனது சகோதரர் ஆறுமுகத்தின் கடவுச் சீட்டில் புகைப்படத்தை மட்டும் மாற்றி இலங்கைக்குச் செல்ல முயற்சி செய்ததும், இலங்கையிலிருந்து சவூதி அரேபியா வுக்குச் செல்ல முயற்சி செய்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து முருகானந்தம் கைது செய்யப்பட்டார். (வ)

# டான்ஸ் மாஸ்டர் சலீம் மரணம்

300 படங்களுக்கு மேல் நடனம் அமைத்த சினிமா டான்ஸ் மாஸ்டர் சலீம்,(வயது 80) சென்னையில் மரணம் அடைந்தார்.

எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், என்.டி.ராமராவ், திலீப் குமார், ராஜ்குமார் போன்ற பழம் பெரும் கதாநாயகர்களின் படங்களுக்கு நடனம் அமைத்தவர் சலீம். ரஜினிகாந்த், கமல் ஹாசன் படங்களுக்கும் இவர் நடனம் அமைத்து இருக்கிறார்.

ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் இணைந்து நடித்த இளமை ஊஞ்சலாடுகிறது படத்தில், தண்ணி கருத்திருக்கு என்ற பாடலுக்கு நடனம் அமைத்ததுடன், அந்தப் பாடலுக்கு நடனம் ஆடியும் இருந்தார்.

சிவாஜிகணேசன் நடித்தவியட்நாம் வீடு படத்தில் இடம்பெற்ற பாலக்காட்டு பக்கத்திலே என்ற பாடலுக்கும் சலீம் நடனம் அமைத்திருந்தார்.

இறுதியாக அவர், கேப்டன் பிரபாகரன் படத்தில் இடம்பெற்ற ஆட்டமா தேரோட்டமா என்ற பாடலுக்கு நடனம் அமைத்தார்.

300 இற்கும் மேற்பட்ட படங்களில் அவர் பணி புரிந்தார். 20 ஆயிரம் பாடல்களுக்கு மேல் நடனம் அமைத்து இருந்தார்.

மரணம் அடைந்த சலீமுக்கு மனைவியும், 2 மகள்களும் உள்ளனர். அவருடைய இறுதிக்கிரியை சென்னை, கோடம்பாக்கத்தில் நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

(வ)

# பிஜியில் ராணுவ ஆட்சியை எதிர்த்த இலங்கையர் கைது

பிஜி நாட்டில் இராணுவ ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் இலங்கையில் பிறந்து தற்போது நியூசிலாந்தில் குடியுரிமை பெற்ற ஒருவர் பிஜி நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பிஜியில் இடம்பெற்றுவரும் ராணுவ ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்ட குற்றச் சாட்டின் பேரிலேயே ஜெகத் கருணாரட்ன உட்பட ஐந்து பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பிஜியில் ராணுவ ஆட்சியாளரான Voreqe Bainimarama எதிராக சுவர்களில் வாசகங்களை எழுதியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் சுவா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு பிணை மறுக்கப்பட்ட நிலையில் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (வ)

## மரண அறிவித்தல்



### மரியாம்பிள்ளை எட்வின் யோசவ்

(இளைப்பாறிய பணியாளர் கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ரெம்பிள் றோட்டையும் பின்னர் கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை எட்வின் யோசவ் 15.10 2011 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலம் சென்றவர்களான சில்லாலை திரு திருமதி மரியாம்பிள்ளை (உடையார்) மரியம்மா தம்பதிகளின் மூத்த மகனும் - காலம் சென்ற ராஜமலரின் அன்புக்கணவரும் திவ்வியாரஜ் ஸ்ரீபன் (லண்டன்) பேனாட் கொளின் (லண்டன்) பிளசிடா மொறின் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் எரிக் நிறோசனின் (லண்டன்) அன்பு மாமனாரும் டெனீசியஸ் (இளைப்பாறிய தபாலதிபர் - யாழ்ப்பாணம்) காலம்சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத்திணைக்களம் - வவுனியா) ஆன்கிறேஸ் குலோட்டில்டா (லண்டன்) யசிந்தா புஸ்பம் (லண்டன்) ரெறென்சியா (லண்டன்) ஆன் றெஜீனா வினிபிறற் (லண்டன்) அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி செல்வராஜாவின் சம்மந்தியும் வில்லியம் டானியேலின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள்
17ஆம் திகதி (திங்கள்) 3 மணிக்கு திருப்பலியின் உடன்
**கொழும்பு கல்கிசை மகிந்த மலர்சாலையில்** நடைபெறும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மோறின் - மகள் (கொழும்பு) திவ்வியாரஜ் ஸ்ரிபன் - மகன் (லண்டன்)
பேனாட் கொளின் - மகன் (லண்டன்)

19 கரகம் பிற்றிய குறுக்கு வீதி - தெகிவளை
தொலைபேசி 0779236047

## மரண அறிவித்தல்



### கந்தையா வைத்திலிங்கம்

(முன்னாள் அதிபர்)

யாழ்ப்பாணம், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மாடந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வைத்திலிங்கம் (முன்னாள் அதிபர், முள்ளோயா தமிழ் மகாவித்தியாலயம்) 15.10.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி-சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மருமகனும், மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், மகேஸ்வரலிங்கம் (ஜேர்மனி), உதயலிங்கன் (பிரான்ஸ்), உமா (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி (கண்டி), ஞானேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற குகனேஸ்வரி மற்றும் விக்னேஸ்வரலிங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் சுப்பிரமணியம், வீரவாகு கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதனும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் துரைராஜா ஆகியோரின் சகலனும், இராசபூபதி, தவமலர் ஆகியோரின் மைத்துனரும் சதாசிவம், விஜயகுமார், பாஸ்கரன், மஞ்சுளாதேவி, யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனும் ஹெலன்குமார், கற்பகதுளசி, சகானா, அபிவீணா, மயூரி, நிரூஷன், சயந்தா, பிருந்தா, அமர்தா, அபிராம், அஞ்சரன், சேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் மயானத்தில் மு.ப 10 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாடந்தை, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
**சதாசிவம்** (மருமகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 . 08 . 1938



மறைவு
28 . 09 . 2010

அமரர் **தர்மலிங்கம் சந்திரசேகரர்**

(முன்னாள் உரிமையாளர்.சேகர் ரேடர்ஸ் யாழ்.)

**திதி: 17.10.2011**

*ஆண்டொன்று சென்று விட்டது*
*ஆறவில்லை எங்கள் மனம்–அப்பா*
*என்றும் உங்கள் நினைவுகள் எங்களுடன்....*

செட்டியார் மடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியனம் கேட்டீர்களா?

### ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை வாடியிருக்கும் கொக்குகளாக..............

அது 788ஆம் இலக்க வழித்தட மினிபஸ் நத்தை போன்று ஊர்ந்து வருகின்றது. பிற்பகல் நேரமாதலால் பயணிகள் அதிகமில்லை. குறிப்பிட்ட பஸ் சேவையில் இடையில் இரு இடங்களில் நேரக் கணிப்பாளர்கள் உள்ளனர். முதலில் சண்டிலிப்பாயில் குறித்த நேரத்துக்கு பஸ் வருகின்றது. குறித்துக் சொண்டு நேரக் கணிப்பாளர் செல்லுமாறு கூறுகிறார். பஸ் மீண்டும் நத்தையாகிறது.

மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து ஒரிடத்தில் சற்று இளைப்பாறுகின்றது. உள்ளேயிருக்கும் பயணிகளுக்கு புழுக்கம் ஒரு புறம். பஸ் காலதாமதமாகிறது. குறித்த நேரத்துக்குச் செல்ல முடியாதுள்ளதே என்ற வெப்பியாரம் மறுபுறம். 'நாலு மணிக்குக் கிளாஸ். அதற்குள் போக வேண்டும்' என ஒரு பெண்பிள்ளை சொன்னார். நடத்துநரோ 3.50 க்கு யாழ்ப்பாணத்தில் விட்டு விடுவதாகக் கூறினார். இவ்வாறு வாய் திறந்தவர்களுக் கெல்லாம் பொறுமையாகவும், அன்பாகவும் பதில்கள் தரப்பட்டன.

வெளியே கடையில் வெற்றிலை வாங்கப் போன நடத்துநர் ஐந்தாறு நிமிடங்கள் கழித்து அவசரமாக ஓடி வருகின்றார். 'சரி..சரி எடுங்கள். காரைநகர் ஒன்று வருகின்றது' என்று சாரதியிடம் சொன்னார். பஸ் முயலாகப் பறக்கிறது. வழியில் அவசர கதியில் பயணிகள் ஏற்றப்படுகின்றனர். இறக்கப்படும் பயணிகள் அவசரப்படுத்தப்பட்டார்கள். அவசரம் காட்டாதவர்கள் கடுமையான வார்த்தைகளால் ஏசப்பட்டனர். ஒருவர் உரிய இடத்தில் இறக்கப்படாமல் தள்ளி இறக்கப் பட்டார்.

அசுர வேகத்தில் பயணித்து இந்தா அடிபடப் போகிறது எனப் பயணிகளை ஏங்க வைத்து அடுத்த நேரக்கணிப்பிடத்துக்கு வருகின்றது. மீண்டும் இதே பல்லவி. ஒருவாறு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தா யிற்று.

இவ்வாறான அனுபவங்கள் ஒவ்வொரு வழித்தடத்திலும் ஒவ்வொரு பயணிக்கும் ஏற்பட்டிருக்கும். அரச பேருந்துகளின் எண்ணிக்கை பயணிகளை ஏற்றப் போதாத நிலையில் தனியார் பேருந்துகள் இந்த வெற்றிடத்தை நிரப்புகின்றன. இவற்றின் நிறைவான சேவையளிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆயினும் ஒரு சிலர் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படும் முறை ஒட்டுமொத்த தனியார் பேருந்துகள் மீதும் களங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. போட்டி போட்டுக்கொண்டு ஓடி விபத்துக்குள்ளான சம்பவங்கள் பலவற்றில் அப்பாவிகளின் உயிர்பிரிந்த வரலாறுகள் பல உள்ளன.

இங்கே தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு ஒரு சங்கமுள்ளது. அதில் ஒவ்வொரு பேருந்தின் உரிமையாளரும் அங்கத்தவராக உள்ளனர். ஒரு பேருந்து நேரத்தை எடுத்து பயணிகளை முறைகேடாக ஏற்றிச் சென்றால் இதனால் பாதிக்கப்படப் போவது இதே சங்கத்தில் அங்கத்தவராகவுள்ள இன்னொரு பேருந்து உரிமையாளரே!

அதுமட்டுமல்ல, பயணிகள்தான் தமது எசமானர்கள் என்பதைப் பலரும் உணர்வதில்லை. பயணிகளோடு நடந்துகொள்ளும் முறையைப் பொறுத்தே அவர்கள் குறித்த பேருந்துகளில் ஏறுவார்கள். இத்தகைய செயற்பாடுகளால் தான் பல பயணிகள் ஓடும் மினிபஸ்கள் ஓட, உறு அரச பஸ் வரும் வரைக்கும் வாடியிருக்கும் நிலையுள்ளது. அதாவது, ஓடு மீன் ஓட, உறுமீன் வரும் வரையும் வாடியிருக்கும் கொக்குகளாக மாறியுள்ளார்கள் பயணிகள் பலர்.

பள்ளி செல்லும் சிறுவர்கள் எமது எதிர்கால மன்னர்கள் என்ற எண்ணப்பாங்கும் தனியார், அரச மற்றும் பேருந்துச் சாரதிகளிடம் இருக்க வேண்டும். பாவம் அவர்கள்! மறிக்கும்போது சில சாரதிகள் ஏற்றிச் செல்ல மாட்டார்கள். கருணையுள்ள சாரதிகள் மட்டுமே ஏற்றுவார்கள். இந்தக் கருணை எல்லோரிடமும் வர வேண்டும். இத்தகைய எண்ணப்பாங்கை சாரதிகளிடம் சங்கங்கள் வலியுறுத்த வேண்டும். இந்த பஸ்ஸில் ஏற வேண்டும். நிம்மதியாகப் பயணம் செய்யலாம் என ஒவ்வொருவரையும் நினைக்க வைக்க என்ன செய்யப் போகிறீர்கள் சாரதிகளே! நடத்துநர்களே!

விழிச்சான் குஞ்சு.

# வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரினார் பொன்சேகா

**விக்கிலீக்ஸ் தகவல்**

கொழும்பு,ஒக்.17

தமது குடும்பத்தினர் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறு சரத்பொன்சேகா அமெரிக்க அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று இரண்டு தினங்கள் செல்லும் முன்னர், தான் உள்ளிட்ட தமது குடும்பத்தினர் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு முன்னாள் இராணுவ தளபதியும், எதிர்க்கட்சியின் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா அமெரிக்க அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூர் நோக்கி செல்லவே சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இலங்கைப் படையினர் அவர் தங்கியிருந்த விடுதியைச் சுற்றி வளைத்திருந்ததுடன், அவர் போய்வரும் இடங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தனர்.

இதன் பின்னர், சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, அவர்



கைதுசெய்யப்பட்டதுடன், அவருக்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)



ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் ஶ்ரீலால் லக்திலக்க ஆகியோரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தம் செய்யப்பட்டமைக்கு எதிராக ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவுக்கு முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# இலங்கையர் அனைவரும் இலத்திரனியல் பதிவுக்கு

**பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு**

கொழும்பு,ஒக்.17

இலங்கையர்கள் அனைவரினதும் விவரங்களை உள்ளடக்கிய தேசிய இலத்திரனியல் பதிவு ஒன்றை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ளவுள்ளது. இதற்காக 14.5 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக அனைத்து இலங்கையர்களுக்கு இலவசமாக தேசிய இலத்திரனியல் பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதிவு தொடர்பான தகவல் கடந்த ஜூலை மாதத்தில் அரசு அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது. நாட்டின் எதிர்காலப் பாதுகாப்புக் கருதி இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடைமுறை மூலம் இலங்கையர் ஒருவர் தொடர்பில் சில நிமிடங்களுக்குள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்ப டுகின்றது. (ச)

# கலகம் அடக்கும் பொலிஸ் எந்நேரமும் உஷார் நிலையில் இருக்க வேண்டும்

**பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்**

கொழும்பு, ஒக். 17

நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையங்களில் கலகம் அடக்கும் பொலிஸ் பிரிவினரை உஷார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென பொலிஸ்மா அதி பர் என்.கே.இலங்ககோன் பணிப் புரை விடுத்துள்ளார்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கலவரங்களை அடக்க முயன்றபோது ஏற்பட்ட சில குறைபாடுகளை கருத்தில் கொண்டே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதென பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பொலிஸ் பரீட்சகர் ஒருவர், இரண்டு சார்ஜன்கள், 16 கொன்ஸ்டபிள்கள் அடங்கிய கலகம் அடக்கும் பிரிவு அமைக்கப்பட்டு 24 மணித்தியாலமும் விழிப்பு நிலையில் வைக்கப் படல் வேண்டும்.

அவர்களுக்கு அவசியமான உபகரணங்கள் போதியளவு வழங்கப்பட வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# பஸ்களில் லஞ்சம் வாங்கியவர் கைது

பஸ் நிலையத்தில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைவிட மேலதிகமாக தரித்திருந்து பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ்களில் தலா நூறு ரூபாவை லஞ்சமாகப் பெற்று வந்த நேரக்கட்டுப்பாட்டாளர் ஒருவரை இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோக ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர்.

மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கொட்டாவை பிரதேச அலுவலகத்தில் பணிபுரிந்த நேரக்கட்டுப்பாட்டாளரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

ருக்மல்கம - புறக்கோட்டை செல்லும் தனியார் பஸ் வண்டியின் நடத்துநர் ஒருவர் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். இத்தகைய முறைப்பாட்டின் கீழ் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஊழியரொருவர் கைது செய்யப்பட்டது இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பஸ் ருக்மல்கம பஸ் நிலையத்தில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலான நேரம் தரித்திருக்கவே இவர் லஞ்சம் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# 96 கி.மீற்றர் அதிவேகப் பாதை 19 இல் ஜனாதிபதியால் திறப்பு

கொழும்பு, ஒக். 17

இலங்கையின் முதலாவது அதிவேகப் பாதையான தக்ஷிண அதிவேகப் பாதை அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் ஆறாவது ஆண்டுப் பதவிக்காலத்தை நினைவூட்டும் முகமாக இந்தப் பாதை திறக்கப்படவுள்ளது.

கொட்டாவையில் இருந்து காலி வரையிலான 96 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பாதையில் ஏழு பிரவேச மார்க்கங்கள் உள்ளன.

இது நான்கு ஓடுபாதைகள் சகிதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நிர்மாணத்துக்கான மொத்தச் செலவு 6900 கோடி ரூபா என்று துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையின் வேலைகள் தற்போது பூர்த்தியடைந்த நிலையில் உள்ளதாகவும் பாதையில் அடையாளக் குறிகள் இடும் வேலை நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதசாரிகள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் இந்தப் பாதையில் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதை திறக்கப்பட்டு சிறிது காலத்துக்கு பஸ்கள் செல்வதற்கும் அனுமதி அளிக்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஞ்சுகளின் ஊர்வலம்...




மகிழ்ச்சியான வேளை: கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வுகளின்போது சிறார்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். (6)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு காலபோகத்துக்கான உர மானியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. பருவமழை பெய்ய ஆரம்பித்ததையடுத்து விவசாயிகள் காலபோகச் செய்கையினை ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில் காலபோக செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய விலையிலான உரம் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள மகிழங்காடு பெரியபரந்தன் ஆகிய கமக்கார அமைப்புக்களின் விவசாயிகளுக்கு மானிய உரவிநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே வேளை முரசு மோட்டை, ஊரியான் ஆகிய கமக்கார அமைப்புக்கள் காலபோக செய்கையாளர்களின் பட்டியல்களை இதுவரை தமக்கு அனுப்பி வைக்காததால், அந்தப் பகுதி விவசாயிகளுக்கான உரமானியங்களை வழங்கமுடியாதுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# பொலிஸாரின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.17

பொலிஸாரின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளன. இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ் மா அதிபர் என்.டி.நீல்தளுவத்த, கிளிநொச்சிப் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா ஆகியோரின் வழி நடத்தலில் கீழ் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதற்கான அனுசரணையை ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்கியது. இந்தச் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல். அரிப்டீன், கிளிநொச்சி மத்திய கல்லூரியின்உயர்தர வகுப்பு மாணவி செல்வநாதன். கௌசிகா ஆகியோர் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில் மாணவர்களிடையே உதைபந்தாட்டப் போட்டி, துடுப்பாட்டப்போட்டி, சித்திரப் போட்டி, விவாதப்போட்டி என்பன நடத்தப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும், வெற்றிக் கேடயங்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன. சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற முதல்நிலை மாணவர்களுக்கும், போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்த, பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி.றூபாவதி கேதீஸ்வரன், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீர, ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் கிளி நொச்சி மாவட்ட முகாமையாளர் ஏ.ரஞ்சித், பூநகரிப் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி செல்வம், மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், சிறார்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (க-6)

# ஸ்கந்தபுரம் மக்களுக்கான குடிதண்ணீர் பிரதேசசபை உறுப்பினர்களால் விநியோகம்

கிளிநொச்சி,ஒக்.17

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் மக்களுக்கான தண்ணீர் விநியோகம் கரைச்சிப்பிரதேச சபை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சிமாவட்டம் ஸ்கந்தபுரம் மேற்கு, ஸ்கந்த புரம் கிழக்கு, மணியங்குளம் விநாயகர் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் வருடாந்தம் குடிதண்ணீர்ப் பிரச்சினை நிலவி வருகின்றது.

இதனால் இந்தப்பகுதிகளில் வாழும் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது இந்தப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்தைக் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களான டெனீஸ்ராஜன், தயாபரன் அன்ரன்டானியல் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி நான்கு கிராமங்களுக்கும் தினமும் சுமார் 10 ஆயிரத்து 500 லீற்றர் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபை உறுப்பினர் ம.அன்ரன் டானியல் தெரிவித்தார்.

இந்த வருடம் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக வன்னிப் பிரதேசங்களில் என்றுமில்லாதவாறு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையில் பிரதேச சபை உறுப்பினர்களின் இத்தகைய செயற்பாடு மக்களுக்கு ஓரளவு ஆறுதலை வழங்கும் என பலரும் குறிப்பிட்டனர். (க-6)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

*(சனி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் பிரதேச சபையினர் இந்தப் பிரதேசத்தில் உள்ள ஒழுங்கைகள், சிறுவீதிகள் என்பனவற்றைக் கைவிட்ட நிலையில் உள்ளனர். அவர்களுடைய செயற்பாடுகள் எதுவுமற்ற நிலையில்தான் இந்த வீதிகள் பாழடைந்து காணப்படுகின்றன.

### வீதி

மேலும் முத்துஐயன்கட்டு வாய்க்கால்களையொட்டி வீதிகள் உள்ள போதிலும் நிதி ஒதுக்கீடு அற்ற நிலையில் திருத்தப்படாது உள்ளன. தற்போது சில வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றபோதிலும் அரை குறை வீதித் திருத்த வேலைகளால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த வீதிகளைப் பார்க்க மேலதிகாரிகள் எவரும் முன் வராது உள்ளனர். இப்படியான அரைகுறை வேலைத் திட்டத்தால் அபிவிருத்திப் பணி என்ற பெயர்மட்டும் இருக்குமே தவிர மக்களின் பயன்பாட்டுக்கு எந்தவித பலனும் இருக்காது.

### குடிதண்ணீர்

இந்தப் பிரதேசத்தில் குடிதண்ணீர்க் கிணறுகள் இருந்தபோதிலும் சில கிணறுகள் கட்டப்படாது சுகாதாரமற்ற நிலையில் உள்ளன. இவற்றைக் கட்டி முடிப்பதற்கு பொருளாதார வசதி அற்றநிலையில் அந்த நீரையே மக்கள் உபயோகிக்கின்றனர்: தற்போதும் குடிதண்ணீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஆனால் இவற்றைப் பாதுகாப்பாகக் கட்டக்கூடிய நிலை காணப்படவில்லை. இதற்கான உதவிகள் வழங்கப்படுமாயின் கிணறுகளைப் பாதுகாப்பாக அமைக்க முடியும்.

சிலகிராமங்களில் கிணறுகள் இல்லாததால் வேறு இடங்களில் இருந்து தண்ணீரைப் பெற வேண்டியநிலை காணப்படுகின்றது. சில இடங்களில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டபோதிலும் அவற்றிலிருந்து பெறப்படும் நீர் தேவைக்கேற்ற வகையில் இல்லை. பாடசாலைகள், சுகாதார நிலையங்கள், பொதுநிறுவனங்கள் மக்கள் கூடும் இடங்கள் என்பனவற்றில் குடிதண்ணீர் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். பிரதானமாகப் பாடசாலைகளில் குழாய்கள் பொருத்தப்படுவது சிறந்ததாகும்.

### பொதுச்சந்தை

இந்தப் பிரதேசத்தில் பொதுச் சந்தை என்ற கதையும் இல்லை. இருந்த இடமும் இல்லை. ஆங்காங்கு கடைகளிலும் மரங்களின் கீழும் மரக்கறிகள் விற்கப்படுகின்றன. ஒட்டுசுட்டானிலே முன்பு பொதுச்சந்தை இருந்தது. ஆனால் அது தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. கற்சிலைமடுவிலும் முத்துஐயன்கட்டிலும் கூட சந்தைகள் இருந்தன. ஆனால் அவைகளும் வேறு தேவைகளுக்கு எடுக்கப்பட்டதால் இல்லாமற் போய்விட்டன. இதனால் மக்கள் பொருள்களை இலகுவாகப் பெறவும் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும் பொதுச்சந்தைகள் உருவாக்கப்பட வேண்டும். பொதுச் சந்தை இல்லாததால் மீன் வியாபாரிகள் தாம் விரும்பிய இடங்களில் சுகாதாரமற்ற நிலையில் மீன் விற்பனை செய்கின்றனர். இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன.

பொதுச்சந்தை அமைவதால் வேலையற்ற பெண்கள், முதியவர்கள் போன்றவர்களுக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மக்கள் சந்தைகளுக்குச் சென்று சகல பொருள்களையும் வாங்கக் கூடிய நிலை உருவாகும். அத்துடன் அந்தப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை உடனுக்குடன் சந்தைப்படுத்தும் அரிய வாய்ப்பு ஏற்படும். எனவே இந்தப் பிரதேசங்களில் பொதுச் சந்தை மிக முக்கியமாக அமைக்கப்பட வேண்டும். இதனை பிரதேச சபை கவனத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் மக்களின் அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

### கால்நடை

விவசாயத்துடன் ஒவ்வொரு குடும் பத்தினரும் 100 இற்கும் மேற் பட்ட கால்நடைகளை வளர்த்து அதன்மூலம் நல்ல வருவாயைப் பெற்று வந்தனர். தயிர், பால், நெய் என்பவற்றுக்குக் குறைவே இல்லாத நிலை காணப்பட்டது. அதுமட்டுமல்ல இங்குள்ள மக்கள் நல்ல தேகாரோக்கியமுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால், காடுகள் அழிக்கப்பட்டுக் காணிகள் வழங்கப்பட்ட நிலையில் மேய்ச்சல் தரைகளின்றிக் கால்நடைகளை வைத்திருக்க முடியாததால் அவற்றை விற்க முற்பட்டனர். மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளையும் சிலர் அடாத்தாகப் பிடித்து அவற்றுக்கு உத்தரவுப் பத்திரங்களையும் பெற்றுவிட்டனர். அன்றைய காலகட்டத்தில் அரசானது மாபெரும் தவறு இழைத்ததால் மேய்ச்சல் தரையின்றி கால்நடைகளை வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் கொடிய நோய்களின் தாக்கமும் கால்நடை அழியக் காரணமாக இருந்தது. அவை ஒருபுறமிருக்க சிறந்த கால்நடைகளைத் தவிர்த்து கழிவு கால்நடைகளை வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு நல்ல விலையில் விற்று வந்தவேளையில் வெளிமாவட்ட விற்பனையை நிறுத்தியதால் உள்ளூரிலே பெறா விலைக்கு விற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனால் பண்ணையாளர்கள் நஷ்டம் அடைந்து வருகின்றனர். இந்தத் தடை நீக்கப்பட வேண்டும். அத்துடன் கால்நடை நிலையங்கள் ஊடாக நல்லினக் கால்நடைகளைப் பண்ணையாளர்களுக்கு வழங்க வேண்டும். நல்லின கறவையினங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நல்லின ஆடுகளை வளர்க்கத் தூண்ட வேண்டும். மீண்டும் இந்தப் பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பில் அபிவிருத்தி காணப்பட வேண்டும்.

### சுயதொழில்

இங்கு சுய தொழில்களாக வீட்டுத்தோட்டம் அமைத்தல், கோழி வளர்த்தல், ஆடுவளர்த்தல், பன்ன வேலை (பெட்டி, கடகம், பாய்) நெசவுத் தொழில், தையல், தச்சுவேலை, மேசன் வேலை, மட்பாண்டம் தயாரித்தல், சிற்றூண்டிகளுக்கான உணவுகளைத் தயா ரித்தல், பற்பொடி தயாரித்தல், படம் வரைதல், அழகு சாதனப் பொருள்களைத் தயாரித்தல், துடைப்பங்கள் கூட்டுமாறு போன்றவற்றைத் தயாரித்தல். இவை போன்ற பல சுய தொழில் களை மேற்கொள்வதற்கு எமது மாவட்டத்தில் நிறைய வளங்கள் இருந்தபோதிலும் அவற்றை மேற்கொள்வதற்கு உதவிகள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. வேலையற்ற மக்கள் வறுமை நிலையில் உள்ளனர். இவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுமேயானால் அனைத்து

**இராஜ் தனபால்**

மக்களும் ஏதோ ஒரு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். இதனால் பல குடும்பங்கள் நன்மையடைய வாய்ப்புக்கள் உண்டு.

### மது ஒழிப்பு

இந்தப் பிரதேசத்தில் மதுவுக்கு அடிமையான மக்கள் அநேகர் உள்ளனர். இதனால் பல குடும்பங்கள் சீரழிந்து வருவதுடன் வறுமையிலும் உள்ளன. அவர்களது பிள்ளைகளும் சீரழிகின்றனர். இந்தப் பிரதேசத்தில் அனுமதியற்ற மது உற்பத்திகளை முற்றாக ஒழித்தல் வேண்டும். சிறு வயதில் மது அருந்துதல் புகை பிடித்தல் என்பனவற்றைத் தடுத்தல் வேண்டும். இதனால் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும். *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவைக்குண்டு கிராமத்தில் திடீர் குடியேற்றம்; உடன் தடுத்து நிறுத்துமாறு அவசர கோரிக்கை

மன்னார்,ஒக்.17

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அறுவைக்குண்டு கிராமத்தில் தற்போது நடைபெறும் குடியேற்றத்தை உடனடியாக இடைநிறுத்தக்கோரி நானாட்டான் பிரதேச அமைப்புக்கள், நானாட்டான் பிரதேச செயலாளர் அலுவலகத்துக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில்:

நானாட்டான் அரிப்பு வீதியில் அருவியாற்றங்கரையை அண்டிய அச்சங்குளம் மேட்டு நிலக் காணியில் அமைந்துள்ள அறுவைக்குண்டு கிராமத்தில் மேற்படி குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது.

கடந்த 7 ஆம் திகதி குறித்த இடத்தில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் அத்துமீறி மேற்படி குடியேற்றக் காணியில் கொட்டில்களை அமைப்பது, காடுகளை அழிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை அவதானித்த இன்னும் சிலர் இதேபோன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர். மேற்படி செயல்களுக்காக எமது வேதனைகளையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

குடியேற்றம் தொடர்பாக நடைபெறுகின்ற சகல நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் நானாட்டான் பிரதேச மக்களால் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரீசிலித்து காணிக் கச்சேரி நடத்துமாறும் அத்துடன் குடியேற்றத் திட்டம் அமுலாகும் தினம் காணிக் கச்சேரியின் பின் சகலருக்கும் ஒரேநாளாக அமைய வேண்டும் என்பதைத் தங்களின் மேலான கவனத்துக்கு அறியத் தருகின்றோம். அது மட்டுமல்லாது காணியின் அளவு, இட அமைவு ஆகியவற்றைக் குடியேறியவர்கள் தீர்மானிப்பதில்லை. தங்கள் செயலகத்தினாலேயே நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துமீறிய இவர்களின் இந்தச் செயல்கள் தவறு என்று அனைவரும் அறிவர். எனவே அதை நிறுத்த நடவடிக்கை எடுத்துக் காணியை உரிய முறையில் பகிர்ந்தளிக்குமாறு கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஜனாதிபதி, மன்னார் ஆயர், மீள்குடியேற்ற அமைச்சர், வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-601)

## வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள்

வவுனியா,ஒக்.17

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் பதிவு செய்யப்படாத நிலையில் சிறுவர் இல்லங்கள் இயங்கி வருவதாகத் தெரிய வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக 21 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருவதாகவும் இவற்றில் 6 சிறுவர் இல்லங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செட்டிக்குளத்தில் பதிவுகள் எதுவுமின்றி இயங்கும் ஒரு சிறுவர் இல்லத்தில் 40 பெண்பிள்ளைகள் உள்ளனர் எனவும் இந்த இல்லம் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

வேறொரு சிறுவர் இல்லம் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றதால் நீதிமன்றத்தின் உத்தரவுடன் மூடப்பட்டது. இங்கு இருந்த சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆனால் இந்த இல்லம் இன்றும் இயங்கி வருவதாகத் தெரிய வருகின்றது.

மற்றுமொரு சிறுவர் இல்லம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்குள்ள பிள்ளைகளின் விவரங்களை அறியமுடியாமல் உள்ளது.

நான்காவது சிறுவர் இல்லத்தில் 27 பிள்ளைகள் உள்ளனர். ஆனால் ஏனைய தகவல்களைப் பெற முடியவில்லை. சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாத நிலையில் இயங்கி வருகின்றமையால் அவற்றின் செயற்பாடுகளை அவதானிக்க முடியாதுள்ளதாகவும் இத்தகைய நிலையங்களைப் பதிவு செய்யப்படுதல் கட்டாயமாக்கப்பட வேண்டுமெனவும் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-431)

## மாங்குளம் நுழைவாயிலில் திறந்தவெளிச் சந்தை

மாங்குளம் பிரதேசத்தின் நுழைவாயிலில் கூட்டுறவுத் திறந்த வெளிச்சந்தை ஒன்று அமைவது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமாகும். இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.பத்மானந்தன்.

கைதடியில் கடந்தவாரம் நடைபெற்ற கூட்டுறவுக் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்ட அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கு இத்தகைய திறந்த வெளிச்சந்தை அமைவது முக்கியமானது. இந்தக் கூட்டுறவுத் திறந்த சந்தையூடாக எமது உள்ளூர் வளத்தைப் பெருக்கி உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். இதற்குச் சந்தை வாய்ப்புக்கள் அவசியமானது.

எனவே வன்னியின் மாங்குளத்தில் இந்தத் திறந்த வெளிச்சந்தை அமைவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதோடு உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனையையும் அதிகரிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-26)

## பேரணியுடன் நிறைவுற்ற தமிழ் இலக்கிய விழா





மன்னார்,ஒக்.17

வடமாகாணத் தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றன.

அன்றையதினம் பிற்பகல் 1.30 மணியளவில் பண்பாட்டுப் பேரணியொன்று மன்னார்ப் பிரதான பாலத்தில் ஆரம்பமாகி மன்னார் வைத்தியசாலை வீதியூடாகச் சென்று பொது விளையாட்டு மைதான வீதியைச் சென்றடைந்தது.

அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் நின்ற அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மன்னார் மாவட்ட அரச அதிபர், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் பேரணியை அவதானித்தனர். பின்னர் பேரணியுடன் விருந்தினர்களும் நகரசபை மண்டபத்துக்கு நடந்து சென்றனர்.

இந்தப் பண்பாட்டுப் பேரணியில் மன்னார் மாவட்டத்தைப் பிரபலப்படுத்தும் சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. குறிப்பாக மீன்பிடி, விவசாயம், மத ஒற்றுமை என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் நாடகங்களும் இடம்பெற்றிருந்தன.

பிற்பகல் 3 மணியளவில் இந்தப் பேரணி மன்னார் நகரசபை மண்டபத்தைச் சென்றடைந்தவுடன் இ.இளங்கோவன் தலைமையில் இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பெஞ்சமின் செல்வம் புலவர் அரங்கில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வின்போது சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல் மற்றும் ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (க-601)

## முள்ளியவளையில் பாதுகாப்புக்குழு

முள்ளியவளை,ஒக்.17

முள்ளியவளைப் பிரதேசத்தில் பாதுகாப்புக்குழுவைத் தெரிவு செய்வதற்கான கூட்டமொன்று கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முள்ளியவளைப் பகுதிக்கான காவல் துறைப் பொறுப்பதிகாரி கலந்து கொண்டார். இங்கு உரையாற்றிய அவர் இந்தக் கிராமத்தைப் பாதுகாத்து மக்களை ஒற்றுமையாக வைத்திருக்கும் நோக்கிலேயே இந்தக் கூட்டம் நடைபெறுவதாகக் கூறினார்.

கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இந்தக் கூட்டத்தில் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களிடையே குழுவை அமைக்கிறார்கள். இது எங்குபோய் முடியுமோ என்று பேசிக்கொண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (க-433)

## அகலமாக்கப்படும் பன்னங்கண்டி ஆறு

கிளிநொச்சி,ஒக்.17

கிளிநொச்சியில் அமைந்துள்ள பன்னங்கண்டி ஆற்றின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியின் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இந்த ஆறு அமைந்துள்ளது. இந்த ஆற்றின் சில பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் இதன் நீர் கொள்ளளவுப் பிரதேசம் குறைவடைந்து காணப்பட்டது.

தற்போது டெனிஸ் அகதிகள் பேரவை இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆற்றை 10 அடி அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது. (க)

## பனங்காமத்தில் இடிமின்னல் தாக்கியதால் தகரக் கொட்டகை பாதித்து சிறுமி காயம்

துணுக்காய்,ஒக்.17

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தில் சில இடங்களில் இடி மின்னலுடன் கன மழை பெய்து வருவதால் இதுவரை காணப்பட்ட கடும்வெப்பம், வரட்சி என்பன தணிந்து காணப்படுகின்றன.

மேலும் கடந்த 12 ஆம் திகதி மதியம் துணுக்காய்ப் பிரதேசத்தில் உள்ள சில இடங்களில் காற்றுடன் கடும்மழை பெய்துள்ளது.

இதனால் இதுவரை வெப்பத்தையும் கடும் வரட்சியையும் அனுபவித்து வந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த 9 ஆம் திகதி நட்டாங்கண்டல் பகுதியில் இடிமின்னல் தாக்கியதால் பனங்காமத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் இசைவாணி என்ற ஏழு வயதுச் சிறுமி வயிற்றுப் பகுதியில் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவர் மயக்கமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளார்.

பனங்காமத்தில் மீளக்குடியமர்ந்த அநேக மக்கள் தகரக் கொட்டகைகளிலேயே வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சம்பவ தினத்தன்று இந்தச் சிறுமி தமது தகரக் கொட்டகையினுள் விளையாடிக் கொண்டிருந்தபோதே இடி மின்னல் அருகிலிருந்த தென்னை மரத்தில் வீழ்ந்து அது கருகியது.

அதேவேளை தகரக் கொட்டகையையும் இடிமின்னல் பாதித்ததால் இந்தச் சிறுமி எரிகாயங்களுக்கு ஆளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியமர்ந்த மக்களைப் பாதுகாப்பான வீடுகளில் தங்க வைக்காது தகரக் கொட்டகைகளில் அமர்த்தியதால் இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக மீள்குடியமர்ந்த மக்கள் பயத்துடன் [illegible]

(க-435)

## கனமழையால் பாதிப்புக்கள்

முல்லைத்தீவு,ஒக்.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடிமின்னல் மற்றும் கடுங்காற்றுடன் பெய்த மழையால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் கடும்மழை பெய்தது. மேலும் இடிமின்னல் மற்றும் கடும் காற்றினால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பேராறு கிராமத்தில் வர்த்தக நிலையமொன்றில் கூரை தூக்கி வீசப்பட்டதுடன் வீட்டுக் கூரையொன்றும் பாதிக்கப்பட்டது. கடும் மழை மற்றும் காற்றால் மன்னாகண்டல் பகுதியில் ஏற்கனவே வீடு ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடும் மழை காரணமாகக் காலபோக நெல் விதைப்பு வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாதம் 30 ஆம் திகதியுடன் விதைப்பு வேலைகள் யாவும் முடிவடைய வேண்டும். ஆனால் மழை கரணமாக விதைப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் தாம் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவைப் பெண்களை விலக்கி வைக்கலாமா...?



ஆ.வந்தனா,
கரவெட்டி.

காலங்கள் கடந்தாலும் காட்சிகள் மாறினாலும் மனிதர்கள் பழைமையான மூடநம்பிக்கைகள் எனும் கூட்டுக்குள் இருந்து வெளிவரவும் இல்லை; வெளி வர அவர்கள் விரும்புவதாகத் தெரியவுமில்லை. கணினி உலகுக்கு மாறிய பின்னரும் குருட்டு நம்பிக்கைகளுக்குள்ளும் மூடப்பழக்க வழக்கங்க ளுக்குள்ளும் அடிமைப் பட்டுத்தான் கிடக்கின்றனர். இவ்வாறான குருட்டு நம்பிக்கைகளுக்குள் மூழ்கிக் கிடக்கும் மனிதர்கள் மத்தியில் தினம் தினம் சிக்கிச் சீரழிந்து கிடப்பவர்கள் பெண்களே. அதிலும் விதவைப் பெண்களை நம் சமுதாயம் படுத்தும் பாட்டைப் பார்த்தால் கடவுள் கூடக் கண்களை மூடிவிடுவார்.

இளம் வயதில் ஒரு பெண் கணவனை இழந்துவிட் டால் அந்தப் பெண்ணின் மாமியாரும் நாத்தனார்மா ரும் அவள் மீது தான் முழுப் பழியையும் போட்டு விடு வார்கள். ஏற்கனவே கணவனை இழந்த துக்கத்தில் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பவளைக் கொடுமையான வார்த்தைகளால் குத்திக் கிழிப்பார்கள். இவர்களுடன் சேர்ந்து சமுதாயமும் தன்பங்குக்கு ''இவள் வந்த நேரம்தான், தூண் மாதிரி இருந்தவன் பொட்டென்று போய்ச் சேர்ந்துவிட்டான்'' என்று கொஞ்சம் கூட மனதில் ஈவு இரக்கம் இல்லாமல் எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றுவார்கள். அத் துடன் மட்டும் அவர்களின் காரியம் நின்றுவிடுமா? இல்லை. அதன்பிறகு அந்தப் பெண்ணின் தாலியைக் கழற்றி, மெட்டியை உருவி, பொட்டழித்து, பூவைப் பிடுங்கி அவளை உயிருடன் வதைப்பார்கள். ஏன் இந்தக் கொடுமை? கடவுள் மனிதரைப் படைக்கும்போது இவ்வாறான சடங்குகள், சம்பிரதாயங்களையும் படைத்தாரா? மனிதரால் உருவாக்கப்பட்டவைதானே இவை எல்லாம். கணவன் இறந்தபின் இவ்வாறான கொடுமைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தானோ என்னவோ பண்டைய காலத்துப் பெண்கள் கணவன் இறந்த உடனே உடன் கட்டை ஏறித் தம் உயிரை மாய்த்துக் கொண்டார்கள் போலும்.

கணவன் இறந்தவுடன் ஒரு பெண்ணின் வாழ்க்கை முடிந்து போய்விடுவதில்லை. அதன்பின் அவளுக்கு குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு இன்னும் அதிகமாகி விடுகின்றது. அதற்காக அவள் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிவரும். ஆண்களுடனும் கதைக்க வேண்டிய, பழக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். அப்போதெல்லாம் எமது சமுதாயம் அவளை கழுகுக் கண் கொண்டு பார்க்கின்றது. அதுமட்டுமன்றி கண், காது, மூக்கு வைத்துப் பேசி ஒன்றுமே அறியாத அப்பாவி விதவைப் பெண்ணுக்கு ''விபச்சாரி'' பட்டம் சூட்டி விடுவார்கள். இவ்வாறு ஒரு பெண்ணை நோகடித்து வேடிக்கை பார்க்கலாமா?

விதவைப் பெண்களும் உயிரும் சதையும், நரம்பும் உணர்வும் உள்ளவர்கள்தான். இதனை ஏன் நம் சமுதாயம் உணர மறுக்கின்றது? தற்காலத்தில் இளம் விதவைப் பெண்கள் தனித்து வாழ்வது என்பது மிகவும் சிரமமான காரியம். எனவே அவர்கள் தங்களுக்கென ஒரு துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். விதவைப் பெண்களே! உங்களுக்கும் சமுதாயத்தில் மற்றவர்களைப் போல் வாழும் உரிமை இருக்கின்றது. வாழ்ந்துதான் பாருங்களேன்; நிச்சயம் உங்கள் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசும்.

# கடவுள் வருகிறார் ஜாக்கிரதை...!



வதனா,
கரவெட்டி.

பாரதத்துடன் கைகோர்த்து
எம் பாச உறவுகளை
முள்ளி வாய்க்காலில் மூழ்கடித்த
நரகாசுரர்களே-ஜாக்கிரதை
நர வேட்டையாடிய உம் கணக்குதீர்க்க
வேங்கையெனக் கடவுள் வருகிறார்

மலரிலும் மென்மையான
கன்னியவளை
பாலூட்டும் தாயவளை
பெற்றவர், பிள்ளைகள் முன்னால்
துகிலுரித்த கலியுக துச்சாதனர்களை!
துகிலுரித்த உம் கரங்களை
துண்டு துண்டாக்கிட
கடவுள் வருகிறார்-ஜாக்கிரதை!

பெற்ற பாசம் மறந்து
வளர்த்த பாசம் துறந்து
வேலியே பயிரை மேய்ந்ததுபோல்
பெற்றமகளையே
பெண்டாளும் காமுகனே
உன் காமத்துக்கு
நிரந்தர முடிவு கட்ட
காற்றைவிட வேகமாக
கடவுள் வருகிறார்-ஜாக்கிரதை!

அச்சம், மடம், நாணம் விட்டு
பெண்மையின் மேன்மை
களைந்து
தாய்மை எனும்
உணர்வைக் கொன்று
தரம் கெட்டு நீ நடந்து
பெற்றெடுத்த மழலைகளுக்கு
மண்ணில் குழி தோண்டிய
நவீன நங்கையே!
உன்னை
குழிதோண்டிப் புதைத்திட
மண்வெட்டியுடன்
கடவுள் வருகிறார் -ஜாக்கிரதை

கையில் ''செல்லு''டனும்
பையில் பணத்துடனும்
''ஹீரோ கொண்டாவில்''
கட்டாக்காலிகள் என வட்டமிட்டு
பெண்ணைப் பெற்றவர் வயிற்றில்
புளியைக் கரைக்கும்-
ஹீரோக்களே! (ஹீரோக்களே!)
தறி கெட்டோடும் உம் வாலிபத்துக்கு
கடிவாளமிட கடவுள் வருகிறார்
கயிற்றுடன் ஜாக்கிரதை!

# பெண்களையும் வாழவிடுங்கள்



நிகழ்யா,
மானிப்பாய்.

பெண் என்பவள் எத்தனையோ தடைகளைக் கடந்து கல்வியிலே சிறந்து ஒரு நல்ல பதவியில் வந்த பின்பும் அவளுக்குச் சிறப்பான வாழ்வு கிடைக்கிறதா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். எல்லாக் குடும் பங்களிலும் ஆணாதிக்கம் ஒருபுறம். திருமணம் ஆக விருக்கும் பெண்ணுக்குச் சீதனம் என்ற அரக்கன் ஒரு புறம் ஆட்டிப் படைத்துக் கொண்டுதான் இருக்கிறது. பெண்ணை நன்றாக வாழ வைக்கத்தானே நாம் சீதனம் வாங்குகிறோம் என்று சீதனம் வாங்குவதற்கு சிறப்பாக ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளது இந்தச் சமூகம். பெண்ணும் இதே ஆணைப் போல் பட்டங்கள் பெற்றுள்ளாள். அவள் கல்வி கற்கும்போதும் ஆண் எவ்வாறு பணம் செலவிட்டு கல்வி கற்றானோ அதேமாதிரித்தான் இந்தப் பெண்ணும் செலவினைச் செய்து கல்வி கற்று வாழ்விலே முன்னேறுகிறாள். ஆணுக்கு கல்விச் செலவினை வழங்கி நல்ல ஒரு நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம் என்று அதற்கு ஈடுசெய்வதற்காகப் பெண்ணிடம் பணம் என்ற பெயரில் ஒட்டுமொத்தமாகப் பல இலட்சங்கள் சீதனம் என்ற பெயரில் அறவிடுகிறார்கள். எங்கெங்கோ கடன் பட்டு அந்த வேதனத் தொகையை வழங்கினாலும் அந்தப் பெண்ணுக்கு உரிமைகள் சரியாக வழங்கப்படுகிறதா? என்றால் இல்லை. குடும்பங்களிலே ஆணாதிக்கம் மேலோங்கியே காணப்படுகிறது. தான் வைத்ததுதான் சட்டம், தான் விரும்பியதைத்தான் பெண் செய்ய வேண்டும். இப்படியான வற்புறுத்தல்கள் காணப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. பெண் எங்கேயும் அடக்கப்பட்டுத் தான் காணப்படுகிறாள். அவளுக்கு என்று தன்னிச்சையாக முடிவெடுக்கும் சந்தர்ப் பங் கள் வழங்கப்படுவதில்லை. அடக்குமுறைக் கும் ஒடுக்குமுறைக்குள்ளும் இருந்து பெண்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும். பெண்களுக்கும் இவ்வுலகிலே ஆண்கள் போல் சமவுரிமைகள் வழங்கப்பட வேண்டும். இந்த [illegible] வாழ வழிவகைசெய்ய வேண்டும். ''பெண்களே நாட்டின் கண்கள்''

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்களுக்கு தலைமைத்துவ பயிற்சியளிக்கப்பட வேண்டும்



-நித்தியா

எந்தவொரு பெண்ணுக்கும் அவளது வீட்டிலேயே தலைமைத்துவம் வழங்க ஆரம்பித்துவிட வேண்டும். ஆனால் சில வீடுகளில் பெண்களுக்கு தலைமைத்தும் கொடுப்பதற்கு ஊக்குவிப்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. சிறுபிராயத்திலிருந்தே தலைமை தாங்குகின்ற பண்பை வளர்த்தெடுக்கத் தவறிவிடுகின்றனர்.

ஒரு பெண்ணுக்குத் தலைமைத்துவம் என்பது குடும்பத்தில் கணவன் இறந்த பின்னர்தான் வழங்கப்படுகின்றது. இதன்பின் அவள் மீது பெருமளவு பொறுப்புக்கள் சுமத்தப்படுகின்றன. இதனால் அவற்றை சமாளிக்கமுடியாமல் பெண் பல்வேறு உடல் உளத் தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்படுகின்றது. எனவே வீட்டில் நடைபெறும் சின்னச் சின்ன விடயங்களில் கூட பெண் பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

அனைத்துத் தீர்மானங்களிலும் அவர்களின் பங்களிப்பும் விருப்பமும் இருக்க வேண்டும். இதனூடாகப் பெண்களின் வளர்ச்சியை அதிகரிக்க முடியும். ஆனால் இந்த நிலைமை மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

வீட்டுத் தோட்டம் அமைத்தல், பிள்ளைகள் பராமரிப்பு, கல்வி நடவடிக்கைகள் இவற்றுடன் ஏனைய குடும்பப் பொறுப்புக்களும் பெண்களுக்கு இருக்கின்றன.

இவற்றை சரியான திட்டமிடலின் கீழ் செயற்படுத்த பெண்களுக்கு தலைமைத்துவ வழிகாட்டலை சிறுவயதில் இருந்தே ஏற்படுத்த வேண்டும். இது அவர்கள் தங்களது வாழ்வை சிக்கல், சிரமமின்றிக் கொண்டு நடத்த வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாம் அமைந்துள்ள வாகரைக் காணிகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குக!

## யோகேஸ்வரன் எம்.பி. ஜனாதிபதிக்கு மகஜர்



மட்டக்களப்பு, ஒக்.17

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் 233ஆம் படைப் பிரிவு இராணுவ முகாம் அமைந்துள்ள காணியானது, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்த பொதுமக்களின் காணியாகும். இந்தக்காணிகளை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஜனாதிபதிக்கு மகஜரொன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

233ஆம் படைப்பிரிவு இராணுவ முகாம் அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நிலையில் ஊரியங்கட்டுக் கிராமத்தில் 15 பேர்ச் என்ற அடிப்படையில் அம்மக்களுக்கு காணி வழங்கப்பட்டு தொண்டர் நிறுவனம் மூலம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன.

ஊரியங்கட்டுக் கிராமத்தில் வாழ்ந்துவரும் இந்த மக்களின் தொழில் மீன்பிடித் தொழிலாகும். தற்போது இராணுவமுகாம் அமைந்துள்ள பகுதியில் ஒருவருக்கு அரை ஏக்கருக்கு மேற்பட்ட காணி களே முன்பிருந்தன. இந்தக் காணியையே எதிர்காலத்தில் தங்களது பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்து காணி வழங்க இந்தக் குடும்பங்கள் திட்டமிட்டிருந்தன. அதுமட்டுமின்றி, இந்தக் காணிப் பகுதியில் இவர்கள் வசித்தால் தான் கடற்றொழிலை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

ஆனால், தற்போது இந்த மக்களின் காணியிலுள்ள இராணுவ உயரதிகாரிகள் மக்களை அழைத்து இவர்களது காணிகளைத் தங்கள் இராணுவ முகாமுக்கு வழங்குமாறும், இதற்கான சம்மதக் கடிதம் தருமாறும் கேட்டுள்ளனர். முன்பும் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்தக் காணிக்கு நஷ்டஈடு வழங்குவதாகவும் கூறியுள்ளனர். பயத்தின் நிமிர்த்தம் ஒரு சிலர் முன்பும் தற்போதும் கையொப்பமிட்டு சம்மதக் கடிதம் வழங்கினாலும் தமது தொழில், தமது பிள்ளைகளின் எதிர்காலம் என்பவற்றைக் கருத்தில்கொண்டு தங்களுக்கு இந்தக்காணியைப் பெற்றுத் தருமாறு என்னிடம் முறையிட்டுள்ளனர்.

உண்மையிலேயே தற்போது நாட்டில் யுத்தம் ஓய்ந்து அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில், இராணுவ முகாம்கள் மக்கள் காணிகளில் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பது பொருத்தமற்றது என்பதைத் தாங்கள் நன்கறிவீர்களென நான் கருதுகின்றேன்.

ஆகவே, இந்தமக்களிடம் அவர்களது காணிகளைக் கையளித்து இராணுவ முகாமை இந்த விடத்திலிருந்து நீக்கி உதவுமாறு அன்பாக வேண்டுகின்றேன்- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# படுவான்கரையில் மீண்டும் உயிரியல் வாயு உற்பத்தி


மட்டக்களப்பு,ஒக்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரை பிரதேசத்தின் திக்கோடைக் கிராமத்தில் கைவிடப்பட்ட உயிரியல்வாயு உற்பத்தி நடவடிக்கையை மீண்டும் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திக்கோடை கிராமத்தில் உயிரியல்வாயு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இருப்பினும், பின்னர் இதற்கான எந்தவித உதவிகளும் கிடைக்காத நிலையில் இந்த உற்பத்தி நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்த நிலையில், இந்த உயிரியல் வாயு உற்பத்தி நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்வதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை உற்பத்தியாளர்கள் நாடி நிற்கின்றனர். (ச)



கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீயான்கல்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பழமை வாய்ந்த பிள்ளையார் ஆலயத்துக்கு ஒலிபெருக்கி தொகுதி மற்றும் மின்பிறப்பாக்கியை கிழக்கு முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த வியாழக்கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

# 45 லட்சம் ரூபா அபராதத் தொகையை போக்குவரத்துப் பொலிஸார் வசூலிப்பு

மண்டூர், ஒக்.15

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரை போக்குவரத்துப் பொலிஸாரினால் அதேயிடத்தில் தண்டம் விதித்ததன் மூலம் 45 லட்சம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது என்று சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த தஹநயக்கா தெரிவித் துள்ளார்.

போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகள் காரணமாகத் தற்போது குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளன. அத்துடன், சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் வாகனச் சட்டதிட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இதனால் வீதி விபத்துகள் குறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் மோட்டார் சைக்கிளில் செல்வோர்களில் அதிகமானோர் தலைக்கவசம் அணிந்திராத நிலையில் காணப்பட்டார்கள். ஆனால், இந்தநிலை தற்போது மாற்றமடைந்து 95 வீதமானோர்கள் தலைக்கவசம் அணிந்து செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவில் போக்குவரத்துச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் விபத்துக்கள் மூலம் ஏற்படும் உயிரிழப்புக்களும் தடுக்கப்படுகின்றன.

இதற்குப் பொதுமக்கள் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துமாறு மஹியங்கனை பிரதேச வாசிகள் கோரிக்கை

மஹியங்கனை, ஒக்.17

மஹியங்கனைப் பிரதேசத்தில் பங்கரகம பகுதியில் அண்மைக்காலமாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் தாம் பெரும் சிரமங் களையும் உயிர் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியுள்ளனர் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டுள்ள போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லையென்று அவர்கள் விசனிக்கின்றனர்.

பங்கரகம கிராமம் முஸ்லிம்களினால் அடையாளப்படுத்தப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த மற்றும் வரலாற்றுப் பெருமை கொண்ட இடமாகும். இங்கு பெரும் காடுகள் இல்லாதபோதிலும் இரவு வேளைகளில் காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக வந்து வீடுகளுக்குச் சேதம் ஏற்படுத்துவதுடன் பயிர்களையும் துவம்சம் செய்கின்றன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து வனவள மற்றும் ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளபோதிலும் காட்டு யானைகளைக் கட்டுப் படுத்துவதற்கான எந்தவித நடவடிக்கையினையும் இதுவரை அவர்கள் மேற்கொள்ளவில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# புத்தர் சிலை திருட்டு

பிபிலை, கொட்டசர ரஜ மஹா விகாரையிலிருந்த ஐம்பொன் புத்தர் சிலையொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது என்று விகாரையின் பிரதமகுரு பதுளை கம்மன குணரட்ண தேரர் பிபிலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுமார் 28 கிலோ எடைகொண்ட இந்தச் சிலை கடந்த ஒரு வருடத்துக்கு முன்பும் ஒரு முறை திருடப்பட்டுள்ளது என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிலை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட பின் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் திருட்டுப் போயுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# இன்று சத்தியப்பிரமாணம்

அம்பாறை, ஒக்.17

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு இன்று திங்கட்கிழமை கல்முனையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் மாவட்ட தேர்தல் முகவருமான டாக்டர் வில்லியம் தோமஸ் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களும் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர்.

இந்தநிகழ்வு பாண்டிருப்பு- நற்பிட்டிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அரசியல் அலுவலகத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகரசபை தமிழரசுக் கட்சி சார்பின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அ.அமிர்தலிங்கம், அ.விஜயரெத்தினம், என்.ஜெயக்குமார், வி.கமலதாஸன் ஆகிய நால்வருமே சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

இதில் முதன்மை விருப்பு வாக்குப் பெற்றுள்ள உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# புதையல் தோண்டியோர் பொலிஸாரால் கைது

மாத்தளை,ஒக்.17

மாத்தளை,இறத்தோட்டைப் பிரதேசத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த நிலையில் மூவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடுகட்டும் தோரணையில் புதையல் அகழ்ந்து கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக இந்தப் பகுதியில் புதையல் அகழ்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

அதற்கென பூஜைகளும் செய்யப்பட்டன என்று இறத்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

புதையல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன. (ச)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நுவரெலியா, ஒக்.17

நுவரெலியா மாவட்டத்தின் தோட்டப் பகுதிகளின் சமூக மற்றும் பௌதிக செயற்றிட்டங்களுக்கு தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

இந்த வருடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக எனக்கு ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சமூக மற்றும் பௌதிக செயற்றிட்டங்களுக்கு நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். கடனாகக் கொடுத்த பணம் ஒன்றை, அவசரமாகத் திரும்பக் கேட்டு வாங்கலாம். குறுக்கு வழியில் செயற்பட்டு, சிறிய ஆதாயங்களைப் பெறுவீர்கள். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று, கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம்.

**இடபம்:**
பெண்கள் உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். கணவன், மனைவி இடையேயான பாசம், நேசம் அதிகரிக்கும். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். சிலருடன் பொறாமைப் பிரச்சினை உண்டாகும்.

**மிதுனம்:**
நினைத்தது நடக்க வேண்டும் என, இறைவழி பாட்டை மேற்கொள்வீர்கள். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம். தந்தை வழியில் எதிர்பாராத சிரமங்களுக்கு ஆள்படலாம். நிறுத்தி வைத்த வேலை ஒன்றை அவசரமாக முடிக்க வேண்டியக் கட்டாயச் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:**
வேகமாகத் தொடங்கிய சில வேலைகள், பாதியில் நின்று விடலாம். விருந்தினர்கள் வருகையால், வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.

**சிங்கம்:**
சலிப்பு, வெறுப்பு இல்லாமல், வழக்கமான பணிகளை விறுவிறுப்பாகச் செய்வீர்கள். பெண்கள், சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தம்பதியரிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**கன்னி:**
வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டு பேசும் சூழ்நிலை உருவாகும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த வாய்ப்பு ஒன்று தேடி வரலாம். உடன் பிறப்புகள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம்.

**துலாம்:**
பிரியமான சிலரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் கிடைக்காமல் போகலாம். உங்களின் ரகசியமான செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். கௌரவம் பார்ப்பதன் மூலம், சில இழப்புகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம்.

**விருச்சிகம்:**
நண்பர்கள் வழியில், எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் மட்டும் பேசிக்கொண்டிருந்த ஒருவரை, இன்று நேரில் சந்திக்கலாம். சிரமம் இல்லாமல் சில வேலைகளைச் சுலபமாக முடிப்பீர்கள். தம்பதியரிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:**
குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில், நல்ல பலன் கிடைக்கும். உறவினர் ஒருவர் முக்கியமான விடயங்களில் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். சுயநலம் பாராது மற்றவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் உங்களுக்கு பதில் உதவி செய்யலாம். பணவரவுகளைப் பெறலாம்.

**மகரம்:**
அலைச்சல்களில் இருந்து ஓய்வு பெறும் நாள். சுகபோக விடயங்களில் நாட்டம் செல்லும். சிலரிடம் கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம்.

**கும்பம்:**
மற்றவர்கள் சொல்வதைப் பற்றி கவலைப்படாமல், நீங்கள் நினைத்ததே சரியென நினைத்து செய்வீர்கள். சிறிய வேலை ஒன்றுக்காக பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். உறவினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான பணிகளில் மாற்றங்களைச் செய்யலாம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம்.

**மீனம்:**
அனைவரிடமும் அன்பாகவும், பாசமாகவும் நடந்து கொள்வீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். மனைவி, குழந்தைகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர், உங்களைத் தேடி வரலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று, பனிபோல விலகி விடும்.

# மழை வெ
# மூழ்கப் ே
# வன்னி ம

வன்னியில் பருவமழை ஆரம்பித்து விட்டதால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். நிரந்தர வீடுகள் இல்லாத நிலையில் தற்காலிக கொட்டில்களில் வசித்து வரும் மக்கள் நாளாந்தம் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குழந்தைப் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள், நுளம்பாலும், மழைக் குளிராலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். தாழ்வான பகுதிகளில் தற்காலிகக் கொட்டில்களை அமைத்து இருக்கும் மக்கள் மழை தொடர்ந்தால் இடம்பெயர வேண்டிய சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வருடத்துக்குள் வீட்டுத்திட்டம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தற்காலிக கொட்டில்களில் வாழ்ந்த மக்கள் வீட்டுத் திட்டம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர்.

### தொற்றுநோய்களால் பாதிக்கப்படலாம்

பருவமழை ஆரம்பித்துவிட்டதால் தாழ்வான பகுதிகளில் தற்காலிக கொட்டில்களில் வசிக்கும் மக்கள் தொற்று நோய்களுக்கு ஆளாக வேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எந்த வசதிகளும் இல்லாமல் காட்டுப் பகுதிகளில் தற்காலிக கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வரும் மக்கள்தான் கூடுதலாகப் பாதிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான தண்ணீர் வசதி, மலசலகூட வசதி கூட ஒழுங்கான முறையில் கிடைக்கவில்லை. மிக அண்மையில் மீளக்குடியமர்ந்த புதுக்குடியிருப்பு பகுதி மக்கள் எந்தவித அடிப்படை வசதி கூட இல்லாமல் அந்தப் பகுதியில் தற்காலிகக் கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

பருவமழை ஆரம்பித்துவிட்டதால் இந்தப் பகுதி மக்கள் அரசின் உதவி கிடைக்காததால் தொண்டு நிறுவனங்களை எதிர்பார்த்து நிற்கின்றனர். பல மாதங்களாகத் தறப்பாளின் கீழ் வசித்து வருவதால் தற்காலிக கொட்டில் கூட கழன்று விழும் தறுவாயில் உள்ளன. இதனால் தற்காலிக கொட்டில்களைக் கூட மீளப்புனரமைக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். ஆரம்ப நாள்களில் தற்காலிகக் கொட்டில்களை அமைப்பதற்கு காட்டு மரங்களை வெட்டுவதற்குக் கூட அனுமதி இருந்தது. இப்பொழுது அந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கான மரங்களைக் கூடப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து வருபவர்கள் எந்தவித அனுமதியும் இன்றி காட்டுமரங்களை தறித்துச் செல்கின்றனர். ஆனால் காலம் காலமாக வாழ்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த நிலையில் படையினரின் அனுமதி பெறாமல் ஒரு சிறு துரும்பைக் கூட கையில் எடுக்க முடியாத பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இது வேதனையை அளிக்கின்றது.


### சிங்களவரை மீள்குடியேற்ற அரசு காட்டும் அக்கறை

சிங்கள மக்களை வன்னியில் குடியேற்றம் செய்வதில் அதிக அக்கறை காட்டி முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அரசு வன்னிப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களின் அடிப்படை வசதிகளைக் கூட நிறைவேற்றாமல் இருப்பது ஏன்? என்று தெரியாமல் அந்தப் பகுதி மக்கள் துன்பப்படுகின்றார்கள். சகல வசதிகளுடன் வன்னிப் பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றும் அரசு தமிழ் மக்களின் அடிப்படை வசதிகளைக் கூட பூர்த்தி செய்யாமல் உள்ளது.

பருவமழை ஆரம்பித்துள்ளதால் தொற்றுநோய்களுக்கு ஆளாக வேண்டிய சூழலில் மருத்துவ வசதிகள் கூட இல்லாமல் தவிக்கின்றனர். பருவமழை காலத்தில் ஏற்படப் போகும் நோய்களைக் குணப்படுத்த தூர இடங்களில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய சூழலில் அது சாத்தியப் படுமா என்ற நிலையும் உள்ளது. மழை வரப்போகிறது. மழைவரப் போகிறது என்று பல



> தமிழ் மக்களின் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யப் பின்னடித்து வருவதில் இருந்து தமிழர்கள் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பது அரசுக்குத் தெரியவேண்டும். இதனால்தான் தமிழர்கள் அரசை நம்புவதாகத் தெரியவில்லை. அரசு வன்னி மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யுமா? அல்லது சிங்கள மக்களை குடியேற்றுவதில்தான் மும்முரமாக ஈடுபடப் போகிறதா என்ற சந்தேகத்துக்கே இடம் இல்லாமல் போய்விட்டது வெளிப்படையாகவே தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ள்ளத்தில் போகும் மக்கள்!



டவைகள் அந்தப் பகுதி மக்கள் வீட்டு வசதிகளைக் கட்டும் அரச அதி காரிகளிடமும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களிடமும் இருந்து எந்தப் யனும் கிடைக்கவில்லை வீட்டுத் திட்ட வசதி ளைப் பூரணமாக மேற்கொள்ளாமல் அடிப்படை சதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்காமல் எம்மை அரசு கைவிட்டுள்ளது. இது அரசு வன்னியில் இருந்து றறாக மக்களை இடம் பெயரச் செய்வதற்கான ஓர் த்தியே என்று எண்ண வேண்டியுள்ளது.

**டெங்கு ஒழிப்பு வன்னியில் இல்லை**

டெங்கு ஒழிப்புத் திட்டம் என்ற ஒன்று வன்னி ாவட்டத்தில் இல்லாத நிலையில் நுளம்புகள் பருக்கம் அதிகரித்து டெங்கு பரவும் அபாயம் ஏற் ட்டுள்ளது. போர் முடிவடைந்து இரண்டு ருடங்கள் கழிந்த நிலையில் இன்றும் பல இடங்கள் ப்புரவு செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த இடங் ளில் கைவிடப்பட்ட பாவனைக்கு உதவாத பொருள் ள் பல உள்ளன. இந்தப் பொருள்கள் அகற்றப்படா ல் இருப்பதால் அந்தப் பொருள்களினுள் மழை நீர் தங்கி நுளம்பைப் பெருக்கக் கூடிய சாத்தியக் றுகள் காணப்படுகின்றன.

அத்தியாவசிய பொருள்களையே பெற முடியாமல் விக்கும் மக்களால் எப்படி வன்னிப் பெரு நிலப் ரப்பில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டு சுகாதார ான முறையில் சூழலை வைத்திருக்க முடியும்.

அடுத்த கட்ட நகர்வு பற்றி எண்ணவும் சிந்திக்கவும் டியாமல் இருக்கும் வன்னி மக்களை மழை வந்து பரும் துன்பத்துக்குள் ஆழ்த்துகிறது. தமது இருப் டங்கள் நிலையான இருப்பிடமாக இல்லாததால் ற்காலிக கொட்டில்களுக்குள் வெள்ளம் புகுந்து டும் அபாய நிலை தோன்றியுள்ளது என்று கூறு ன்றனர். தொண்டு நிறுவனங்கள் முன் நின்று சயற்பட்டு பெரு மழை வருமுன் அந்த மக்களின் த்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். தாவது முன் ஆயத்த வேலைகளைச் செய்ய வண்டும். அப்பொழுதுதான் இந்த இரு மாதத்துக் ள் பெய்யும் கனமழையில் இருந்து அவர்களைக் ப்பாற்ற முடியும். மழையில் இருந்து அந்த மக்கள் ாப்பாற்றுவதற்கான முன்னாயத்த வேலைகளை ற்போதே செய்ய ஆரம்பிப்பதன் மூலம் நவம்பர் ாதம் பெய்யும் கடும் மழையில் இருந்து அந்த க்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். மழை வந்து பரும் வெள்ளம் ஓடும் மட்டும் பார்த்துக் காண்டிருந்து பின்பு தொண்டு நிறுவனங்கள் தமது தவிகளை மக்களுக்கு செய்ய முன் வந்தால் அந்த தவிகள் போதுமானதாக இருக்காது. எனவே மழை பய்து வெள்ளம் ஓடி தற்காலிகக் கொட்டில்களில் வாழும் மக்கள் இடம்பெயரும் மட்டும் பார்த்துக் கொண்டிருக்காமல் உங்கள் உதவிகளை விரைந்து செய்யுங்கள். அப்பொழுதுதான் எதிர்கொள்ள இருக்கும் மழையின் பாதிப்பில் இருந்து அந்த மக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**அரசை எதிர்பார்க்க முடியாது**

அரசு அந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கும் போது பெரும்மழை வந்து இடப்பெயரும் மக்களுக்கு எப்படி பெரிதாக உதவிகளை செய்யப் போகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கவுள்ளதாக அரசு அறிவித்துவிட்டு வெளிநாடுகளிடம் இருந்து நிதியைப் பெற்று அந்த நிதி வெள்ளப் பாதிப்புக்கு ஒதுக்கப்பட்டுள் ளதாக அறிக்கைவிடும். பின்னர் அந்த நிதி எங்கு போகிறது என்பதே தெரியாமல் மக்கள் வெள்ளப் பாதிப்பில் மீளமுடியாமல் தவிப்பது யாருக்குத் தெரியும். வெள்ள பாதிப்புக்கு இலங்கைக்கு நிதியை வழங்கும் வெளிநாடுகள் முழுமையாக அந்த நிதி மக்களுக்குச் சென்றடைந்துள்ளதா என்பதை பார்க்காததால்தான் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்கள் மேலும் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

வெள்ளப் பாதிப்பு, மண் சரிவு ஏற்படும் தென்பகுதியில் உடனடியாக விரைந்து செயற்படும் அரசு தமிழர் பகுதியில் இடம்பெறும் வெள்ளப் பாதிப்பு பற்றி துளியளவு கூட அக்கறை கொள்வதில்லை. அதாவது போரால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்கு கூடுதலாக சர்வதேச நாடுகள் நிதி வழங்குகின்ற போது அந்த நிதியை முழுமையாகத் தமிழர் பகுதியில் வழங்காமல் தென் பகுதிக்கு வழங்குவது எந்த விதத்தில் நியாயமாகும்.

தேர்தல்களில் அரசுக் கட்சிகள் தோற்றதைக் காரணம் காட்டி தமிழ் மக்களின் அபிவிருத்தித் திட்டங்களில் பின்னடிக்கும் அரசு, ஒரு நாட்டிலும் இடம்பெறாத அரசியல் கோட்பாடுகளை இலங்கை அரசு கொண்டுள்ளது என்பது இந்த நாட்டின் நன்மதிப்பையே இல்லாமல் செய்கிறது.

**இந்திய வீட்டுத் திட்டத்தின் நிலை என்ன?**

ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லும் அரசு தமிழர்களைப் புறந்தள்ளி வைப்பதுதான் ஏன் என்று தெரியவில்லை. இதன் காரணமாகத்தான் ஆரம்ப நாள்களில் தமிழர் ஆயுதப் போராட்டம் வெடித்தது என்று எல்லோருக்கும் தெரியும்.

மீண்டும் தமிழர்களைப் புறந்தள்ளும் அரசு இந்த நாட்டில் எப்படி அமைதியை விரும்புகின்றது என்று சொல்ல முடியும். வன்னியில் வீட்டுத் திட்டத்துக்கு இந்தியா தொடக்கம் சர்வதேச நாடுகள் வரை நிதி வழங்கியுள்ளது. இந்த நிலையில் வீட்டுத் திட்டம் பூரணமாக முடிக்கப்படாதது ஏன்? வீட்டுத் திட்டம் பூரணமாக முடிக்கப்பட்டிருந்தால் அந்த மக்கள் மழையில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடிந்திருக்கும்.

வீட்டுத்திட்டம் முழுமையாக முடிக்கப்படாததால் தற்காலிகக் கொட்டில்களில் வாழும் மக்கள் இந்த மழையில் பெரும் துன்பங்களை அனுபவிக்கவுள்ளனர். தேர்தல் காலத்தில் ஒரு குச்சொழுங்கைக்குக் கல்லுப் போட வந்த அமைச்சரால் எப்படி இந்த மக்களின் முழுமையான தேவைகள் பூர்த்தி செய்ய முடியும்.

எதிர்வரும் நாள்களில் பெய்யும் கன மழையில் ஏனைய மாவட்டங்களை விட வன்னி மாவட்ட மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கப் போகின்றனர். இலங்கையில் சிங்களவர்களை விட தமிழர்கள் கூடுதலான துன்பங்களை அனுபவிக்கின்றனர். தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர். இந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் இருக்கும் அரசு எதைத்தான் எதிர்பார்க்கிறது.

■ துன்னாலைச் செல்வம்

சிங்கள மக்களை குடியமர்த்தி வன்னியில் தமிழர்களின் வாழ்விடங்களை இல்லாமல் செய்வதற்கான முன்னேற்பாடாகவும் இருக்கலாம். சிங்கள மக்களை வன்னியில் குடியேற்றம் செய்யும் அரசு அந்தப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து தமிழ் மக்களின் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யப் பின்னடித்து வருவதில் இருந்து தமிழர்கள் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பது அரசுக்கு தெரிய வேண்டும். இதனால்தான் தமிழர்கள் அரசை நம்புவதாகத் தெரியவில்லை. அரசு வன்னி மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யுமா? அல்லது சிங்கள மக்களை குடியேற்றுவதில்தான் மும்முரமாக ஈடுபடப் போகிறதா என்ற சந்தேகத்துக்கே இடம் இல்லாமல் போய்விட்டது வெளிப்படையாகவே தெரிகிறது. பெரும்பான்மை இனமாக சிங்களவர்தான் இந்த நாட்டின் உரிமையுள்ள மக்கள். தமிழர்களின் போராட்ட சக்தி வீழ்ச்சி கண்டதில் இருந்து இது தொடரப் போவது நன்கு தெரிகிறது. எது எப்படியிருந்தாலும் இந்தப் பெரு மழை வன்னி மக்களை முள்ளிவாய்க்கால் அவலம் போன்ற பெரும் துன்பத்துக்குள் ஆழ்த்தவுள்ளது என்பது பெரும் வேதனைமிக்கதாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலகினால் நெருங்கலாம்!



ஒரு மனிதனுக்குக் கடவுளைக் காண வேண்டும் என்று ஆசை. அவரை எப்படிச் சந்திப்பது? என்று மக்களிடம் கேட்டான். ''கோயிலுக்குப் போ!'' என்றார்கள். உடனே புறப்பட்டான். போகும் வழியில் ஒரு ஞானியைச் சந்தித்தான். அவர் கேட்டார். ''எங்கே போகிறாய்?'' ''கடவுளைக் காணப் போகிறேன்!'' ''எங்கே?'' ''கோயிலில்!'' ''அங்கே போய்..?'' ''அவரை வழிபடப் போகிறேன்!'' ''அவரை உனக்கு ஏற்கெனவே தெரியுமா?'' ''தெரியாது!''

''எந்த வகையிலும் நீ கடவுளை அறிந்திருக்கவில்லை. அப்படி இருக்கும் போது எப்படி நீ அவரை வழிபட முடியும்?'' ''அப்படியென்றால்...?'' ''உன்னுடைய வழிபாடு வெறும் சடங்காகத் தான் இருக்க முடியும்!'' மனிதன் குழம்பிப் போனான். ஞானி தெளிவுபடுத்தினார்.

''ஏ, மனிதனே... நீ செய்யப்போவது உண்மையான வழிபாடு அல்ல... இன்றைக்கு மனிதர்கள் 'வழிபாடு' என்ற பெயரில் ஆண்டவனிடம் தங்கள் ஆசைகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களது கோரிக்கைகளைக் குரல் மூலம் பட்டியலிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது முறைப்பாடுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான்.''

''நான் கடவுளிடம் அன்பு செலுத்த விரும்புகிறேன்...''

'நீ அறியாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்?''

''அப்படியானால்... ஆண்டவனைச் சந்திக்க என்னதான் வழி?''

''அவரை நீ சந்திக்க முடியாது. உணர முடியும்!'' ''அதற்கு வழி?'' ''தியானம்.'' ''தியானத்துக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் உண்டா?'' ''இல்லை!'' மனிதன் வியப்போடு நிமிர்ந்தான். அவர் சொன்னார்.

தியானம் உன் மனத்தோடு சம்பந்தப்பட்டது. அது உனக்குள் ஓர் ஆழ்ந்த மௌனத்தை உண்டு பண்ணும், அப்படிப்பட்ட ஒரு மௌன நிலையில், கடவுள் இருப்பதை நீ உணரத் தொடங்குவாய். உண்மையான தியானத்தின் பின் விளைவே வழிபடுதல் ஆகும். தியானம் செய்பவன் மட்டுமே கடவுளை உணர முடியும்.''

அந்த மனிதனும் ஞானியும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, வெளிநாட்டுக்காரர் ஒருவர் அங்கே வந்தார். ஞானியின் முன்னால் வந்து பணிவோடு நின்றார். தன்னுடைய தேவையைச் சொன்னார். ''நான் விரும்புவது அமைதி''.

ஞானி சொன்னார், ''முதல் இரண்டு வார்த்தைகளை விட்டு விலகு, மூன்றாவது வார்த்தையை நெருங்கலாம்!'' எனக் கூற, வந்தவர் யோசித்தார்.

'I' 'Want' இரண்டையும் விட்டு விலகினால் 'Peace' நெருங்கி வருகிறது! 'நான்' என்கிற அகங்காரத்தை விலக்குங்கள். என்னுடையது என்கிற ஆசைகளை விலக்குங்கள். ''அமைதி'' என்கிற இறை நிலையை நீங்கள் நெருங்கி விடுவீர்கள்.

வெளிநாட்டுக்காரருக்கு விளக்கம் கிடைத்தது. மன நிறைவோடு திரும்பிச் சென்றார். சிறிது நேரத்தில் இன்னொரு மனிதன் அங்கே வந்தான்.

''சுவாமி! இப்பத்தான் கோயிலில் சாமி கும்பிட்டுட்டு வாறேன். அருமையான தரிசனம்! அந்த அளவுக்கு வேறு யாருக்கும் கிடைச்சிருக்காது!'' ''எப்படி அது?'' ''விசேட தரிசனம்! 50 ரூபா டிக்கெட்! சுவாமிக்கு நெருக்கமாகப் போய் சந்நிதியிலே கொஞ்ச நேரம் உட்கார முடிஞ்சிது!''

அவன் முகத்திலே கடவுளை நெருங்கிவிட்ட பெருமிதம்! ஞானி கேட்டார். ''அப்படி என்றால் உனக்கும் கடவுளுக்கும் எவ்வளவு தூரம்?'' ''பத்தடி தூரம் இருக்கும். அவ்வளவுதான்!'' உற்சாகமாகச் சொன்னான். ''உன் அளவுக்கு வேறு யாரும் நெருங்கலையா?'' ''இல்லை!''

''அந்த வகையில் பார்த்தால் உன்னைவிட கடவுளுக்கு நெருக்கமானவரும் வேறொருவர் உண்டு!'' ''யார் அவர்?''

''அங்கே இருக்கிற அர்ச்சகர்!''

வந்தவன் முகத்தில் ஒரு சிறு ஏமாற்றம்.

''சரி, சுவாமி. நான் போய் வருகிறேன்!''

சோர்வோடு நடந்து போனான்.

அதன் பிறகும் விவாதம் தொடர்ந்தது. இறுதியில் மனிதன் எழுந்தான். ஞானியிடம் விடைபெற்றான். திரும்பி நடந்தான். ஞானி கேட்டார்.

''எங்கே போகிறாய்?'' ''வீட்டுக்கு!'' ''கோயிலுக்குப் போகவில்லையா?'' ''இல்லை!'' ''அங்கே போக வேண்டும் என்று தானே புறப்பட்டு வந்தாய்?'' ''ஆண்டவனை உணர்ந்த பிறகுதான் அவரை வழிபட முடியும் என்பதைப் புரிந்து கொண்டேன். 'நான்', 'என்னிடம்' இருந்து விலகினால் இறைவனை நெருங்கலாம் என்கிற உண்மையைத் தெரிந்து கொண்டேன்.'' ஞானி கைகளை உயர்த்தினார். ''ஆன்மிகம் என்பது நெருங்குவது அல்ல, விலகுவது! எவ்வளவு தூரம் விலகியிருக்கிறீர்களோ, அவ்வளவு தூரம் நெருங்கியிருக்கிறீர்கள் என்பது பொருள்!''

**கோ.சுவாமிநாதன்**



வலி.தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசமும் முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய ஆசிரியர், சிறுவர் கௌரவிப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த விருந்தினர்களை சிறுவர்கள் பாண்ட் வாத்திய சகிதம் வரவேற்கின்றனர்.

ம–100)

# ஆன்றோர் உருவாக்கிய பாடசாலைகளை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டும்

## இலங்கை வங்கிக் கிளை உதவி முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

சைவத்தையும் தமிழையும் செம்மைப்படுத்தும் நோக்கில் ஆன்றோர்கள் பலர் உருவாக்கிய பாடசாலைகள் பல யாழ். மாவட்டத்தில் உள்ளன.

இத்தகைய பாடசாலைகளை அழியவிடாது அவற்றை வழிநடத்தி சீர்பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு இன்றைய தலைமுறையினரின் பொறுப்பாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் லேக் ஹவுஸ் கிளையின் உதவி முகாமையாளர் மு.சதானந்தன்.

கந்தரோடை ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

கால காலமாகத் தமிழர்கள் போராட்டங்களைச் சந்தித்து வந்தனர். இத்தகைய காலங்களில் கல்வியின் தனித்துவத்தையும் மதங்களின் தார்ப்பரியங்களையும் பாதுகாப்பதற்கு ஆன்றோர்கள் பலர் தம்மை அர்ப்பணிப்புச் செய்துள்ளனர்.

அத்துடன் சைவ சமயத்தையும் தமிழையும் செம்மைப்படுத்தி அதன் வழி மக்கள் செல்ல வேண்டும் என்று வழிகாட்டியவர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஒருவராவர்.

இத்தகைய ஆன்றோர்கள் பலரால் உருவாக்கப்பட்ட சைவக் கல்லூரிகள் இன்றும் அழிந்து விடாமல் யாழ்.மாவட்டத்தில் உள்ளன.

ஏழை மாணவர்களின் கற்றல்களை முன்னிலைப்படுத்தி உருவாகிய இத்தகைய பாடசாலைகளை நாம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

இவை கல்விச் சமூகத்தின் தற்போதைய கடமையாகவும் உள்ளது. பாடசாலைகளை முன்னேற்றுவது மட்டுமல்லாமல் ஆன்றோர்களில் நற்சிந்தனைகளை நிலைநாட்டி மாணவர்களை அதன் வழி பின்பற்ற உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவை எமது பழைமையான சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக தூண்டுகோலாகவும் அமையும். - என்றார். (ம-36-313)

# மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர், பெற்றோருக்கு சம பங்குள்ளது

## உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உரை

வலிவடக்கு, ஒக்.17

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்கும் பெற்றோர்களின் பங்கும் சரிசமனாக இருக்க வேண்டும். இவர்கள் பிள்ளைகளின் மீது காட்டும் கவனமும் அக்கறையுமே மாணவர்களின் எதிர்காலத்தை வளம்பெறச் செய்யும்.

உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் த.வாமதேவன் தலைமையில் பாடசாலை முன்றிலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பாடசாலை இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து மீண்டும் இயங்க ஆரம்பித்து எட்டு வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் பெற்றோர்கள் ஆர்வலர்களின் உதவியுடன் வளர்ச்சி கண்டு வருகின்றது. இது பாராட்டுக்குரியது.

இன்று பெற்றோர்களும் பிள்ளைகளும் கல்வியில் காட்டும் ஆர்வம் குறைவடைந்து காணப்படுகின்றது. ஏனைய செயற்பாடுகளில் காட்டும் ஆர்வத்தைக் கல்வியில் காட்ட முன்வராமை கவலைக்குரியதாகும்.

மாணவர்களிடையே கல்வியை ஊட்டிச் சமூக மட்டத்தில் உயர்வடையச் செய்ய வேண்டும். எமது கல்வி கலாசார பண்பாட்டை வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் இன்று கஷ்டப்பட்டாலும் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியை வழங்கி முன்னுக்குக் கொண்டு வரவேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளது.- என்றார். (ம-86)

## மனனப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.17

வேலணைக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற வாய்ப்பாட்டு மனனப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியாகியுள்ளது.

தரம்-3- பரமேஸ்வரன் அம்சவர்தன்- வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், சத்திய மூர்த்தி யதுர்சிகா- செட்டிப்புலம் அ.த.க.பாடசாலை.

தரம்- 4- சிதம்பரநாதன் பிரியந்தி- வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், பரமேஸ்வரன் சுஜீபா - நயினை நாகபூஷணி வித்தியாலயம்.

தரம்-5 - சிவலிங்கம் சுலக்ஷி- புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம், சிவராசா கீர்த்தனா- அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

(ம-267)

## முல்லைத்தீவு வலய போட்டி முடிவுகள்

முள்ளியவளை, ஒக்.17

முல்லைத்தீவு வலய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவானோர் விவரம் வெளியாகியுள்ளன.

**திருக்குறள் மனனம்**

தரம்- 1 சி.பவித்திரா- குமுழமுனை ம.வி.

தரம்- 2 செல்வன் ம.தில்ஷாக்- முல்லைத்தீவு இ.த.க. பாடசாலை.

தரம்- 3- ப.கவிஷன்- தண்ணீரூற்று சீ.சீ.

தரம்- 4 எஸ்.கிருஷாளினி- காமினி நலன்புரி பாடசாலை.

தரம்- 5 யோ.சங்கவி- குமுழமுனை ம.வித்தியாலயம்.

**துரித கணிதப் போட்டி**

தரம்- 2 ப.இந்துஷா- கலைமகள் வித்தியாலயம்.

தரம்- 3 செ.சாரங்கன் - கலைமகள் வித்தியாலயம்.

தரம்- 4 ஜெ.கிரியானன்- தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை.

தரம்- 5 ப.சேதுராகவன்- நெத்தலியாறு த.வித்தி.

**வாய்ப்பாடு மனனப் போட்டி**

தரம்-3 க.சாருஜா- தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை.

தரம்- 4 நா. திலக்சனா- உடையார்கட்டு ம.வித்தி.

தரம்- 5 வி.தாட்சாயினி- தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை. (ம-433)

# சிறுவர் தின சித்திர, பேச்சுப் போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய வாரியாக சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**இளவாலை பொலிஸ் நிலையம்**

10 வயதுக்கு உட்பட்டோர்: கிருஷ்ணராசா றொசான்ஸ் - மாதகல் சென்.ஜோசேப் வித்தி., சந்திரகுமார் திரேசா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஜங்கரன் சுபாஜின் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

14 வயதுப் பிரிவு- சிவகுமார் துஷாந்தன்- பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தி., கருணன் கபிலன்- இளவாலை மெய்கண்டான் மகா வித்தி., அன்ரனி ஜோன்ஸன் டக்சனா- இளவாலை கன்னியர்மடம்.

18 வயதுப் பிரிவு மாணவர்- கிருத்திகா சிவகுமார்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, கருசாளினி செல்வநாயகம்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அன்ரன் யூட் கபிலன்- பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தி.

**பேச்சுப் போட்டி**

சவரியப்பு குவிந்தன்- இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி, பாக்கியநாதன் வக்ஸன்- இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி, யோகசுந்தரம் அஜந்தன்- இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி.

**அச்சுவேலி பொலிஸ் நிலையம்**

10 வயதுக்கு உட்பட்டோர்- முரளிதரன் நிதுஜன்- அச்சுவேலி மத்திய கல்லூரி, எஸ்.ஜீவகரன்- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி., எஸ்.லவன்சியா- சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

14 வயதுப் பிரிவு - தர்மரத்தினம் றதுஷன்- அச்சுவேலி [illegible] பாடசாலை, பி.தனுஷன்- இடைக்காடு மகா வித்தி.

18 வயதுப் பிரிவு- பி.சந்துஜன்- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி, பி.நிதர்சன்- ஆவரங்கால் மகாஜன வித்தி, ஏ.அனட்லோறெனா- அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி.

**பேச்சுப் போட்டி**

கு.நேருஷன்- அச்சுவேலி மத்திய கல்லூரி, கே.தர்சிகா- இடைக்காடு மகா வித்தி, ஏ.கபிலவேணி- அச்சுவேலி மத்திய கல்லூரி.

**பலாலி பொலிஸ் நிலையம்**

10 வயதுக்கு உட்பட்டோர்- ஏ.அகிம்ஸன்- வயாவிளான் மத்திய மகா வித்தி, எம்.இராகுலினி- வயாவிளான் மத்திய மகா வித்தி, ஆர்.இராகுல்- வயாவிளான் மத்திய மகா வித்தி.

14 வயதுப் பிரிவு - ரி.நிசான் கொன்ஸன் - வயாவிளான் மத்திய மகா வித்தி, கே.கனீஸ்டன்- வயாவிளான் மத்திய மகா வித்தி, பி.சுரேந்திரன்- வயாவிளான் மத்திய மகா வித்தி.

18 வயதுப் பிரிவு- எஸ்.துவாரகன்- வயாவிளான் மத்திய மகா வித்தி, பி.சிந்துபன்- வயாவிளான் மத்திய மகா வித்தி, ஏ.குலக்ஸன்- வயாவிளான் மத்திய மகா வித்தி.

**பேச்சுப் போட்டி**

எஸ்.எல்.ஸ்ரீரங்கநாதன்- வயாவிளான் மத்திய மகா வித்தி, ரி.இராஜகுமார்- வயாவிளான் மத்திய மகாவித்தி, வை.நிதுர்சிகா- வயாவிளான் மத்திய மகா வித்தி.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் வடிகிறது இரத்தம்



உயிரைத் தூரிகையாக்கி உதிரத்தை வர்ணமாக்கி ஓவியம் வரைந்த யாழ்ப்பாண மண்ணில், ஓவியக்கலை உணர்வுகள் இன்று மக்களிடத்தே அருகி வருகின்றன. இது ஏன்? புரியாத புதிராகவே இருக்கின்றது. கலைகள் பல உருவான யாழ்.மண்ணில் நடக்கும் இத்தகைய செயல்கள் ஓவியக் கலையை மதிப்பவர்களின் கண்களில் கண்ணீரை உற்பத்தி செய்கின்றன. தமிழரின் பண்பாட்டுக் கலையை யாழ்.மண்ணில் வலை வீசித்தான் தேடவேண்டும். இன்று யாழ்ப் பாணத்தில் காணும் காட்சிகள் வருந்தத் தக்கன. திருமண வீடுகளை அலங்காரம் செய்யப் போகும் பந்தலில்கூட டிஜிற்றல் திரைகளே ஆக்கிரமிக் கின்றன. இதற்கு கலாசாரம் பேணும் ஆலயங்கள் கூட விதிவிலக்கல்ல. அங்கும் டியிற்றல் திரைச் சீலைகள் புகுந்துவிட்டன. உண்மையான ஓவியக்கலை உணர்வை மறைக் கின்றன; சாகடிக்கின்றன.

மேலைத்தேயக் கலாசாரத்துக்கு யாழ்ப்பாணம் மாறி வருகின்றது. ஆயகலைகள் அறுபத்து நான்கி னையும் யாழ். மக்கள் தெரிந்திருக்க வேண்டி யதில்லையா? எமது மக்கள் இவை எல்லாவற்றையும் அறிந்தி ருந்தும் புரிந்து இருந்தும் ஓவியக்கலை உணர்வை முக்கியப்படுத்த ஏன் மறுக்கின்றனர்?

தென்னிலங்கையில் ஓவியக் கலைக்கும் உணர்வுக்கும் அளிக் கப்படும். மதிப்பை கூட யாழ்.மண் ணின் மக்கள் தரத் தவறுகின்றனர். தென்னிலங்கையில் சிறிய வீடாக இருந்தாலும் கலை ஆக்கங்களை முதன்மைப்படுத்தி அழகுபடுத்துகின் றனர். யாழ்ப்பாணத்தில் மாடி வீடுகளைக் கட்டினால் கூட அவற் றில் கலை உணர்வைக் காண முடிய வில்லை. பிளாஸ்ரிக் பூச்சாடி களைத் தொங்கவிட்டு அழகை அழிக்கிறார் கள்.

யாழ்ப்பாணத்தில் ஓவியக்கண் காட்சிகள் இலவசமாக நடத்தினால் ஒரு சிலரே அதைப் பார்க்க வருகிறார் கள். அவர்களும் ஓவியக் கலைஞர்கள் மட்டும்தான். ஏன் இப்படி? எங்கள் மக்களுக்கு ஓவியக்கலை உணர்வு இல்லையா? இருந்தாலும் அதற்கு மதிப்பளிக்கத் தவறுகின் றனரா? யாழ்ப்பாணத்தில் எமது கலைஞர்களின் படைப்பை யாழ். மக்கள் யாரும் வாங்குவதில்லை. ஆனால் எமது கலைஞர்களின் படைப் புக்களை தென்னிலங்கை மக்களும் மேலை நாட்டு சுற்றுலாப் பயணிகளும் வாங்கிச் செல்கிறார்கள். இவர்களுக்கு இருக்கும் கலை இரசனை, பண் பாட்டையும் கலையையும் பேணிய யாழ்ப்பாண மக்களிடம் அருகி வருகின்றது.

தென்னிலங்கைக்கு நாம் சென்று பார்த்தால் எங்களுடைய மனங்களில் உதிரம் வெளியேறும் அளவுக்கு வலிக்கிறது. காரணம் அங்கு வீதி யோரங்களில் கண்காட்சி நடக்கிறது அதனைப் பார்வையிடவும் கொள் வனவு செய்யும் ஏராளமான மக்கள் கூறுகிறார்கள். இவ்வாறான நிலைமை யாழ்ப்பாணத்திலும் ஏற்படவேண்டும். இன்று பாடசாலைகளில் கூட சித்திரம் எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. பெறு பேறுகள் குறை வடைகின்றது. மாணவ சமுதாயத்துக்கு கூட கலையின் பெறு மதி தெரியவில்லை என்று நினைக்கும் போது வேதனை வருகிறது. உடையும் பிளாஸ்ரிக் பொருள்களுக்கும் வழங்கும் மதிப்பைக் கூட உருவாக்குகின்ற கலைக்கு அளிக்க இவர்கள் மறுக்கின் றனர். எமது மக்கள் அனைவரும் ஓவியக்கலை உணர்வும் இரசனையும் உடையவர்களாக மாற வேண்டும். யாழ்ப்பாண ஓவியர்கள் சாதாரண மானவர்கள் அல்லர். அவர்களிடம் இருக்கும் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். ஓவியக்கலை உணர்வுகள் தூண்டப்பட வேண்டும். எமது ஓவியக் கலை ஆண்டுகள் பல கடந்தாலும் தூரிகை வீச்சில் உயிர்வாழ வேண்டும். இது எனது உருக்கமான வேண்டு கோளும் உணர்வுகளின் அன்பான தழுவல்களும். ★

**க.பிரகாஷ்**
*யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை*


## வாழ்த்துகின்றோம்



செஞ்சொற் செல்வர்
**ஆறு.திருமுருகன்**
அவர்கள் நலமுடன் சிறப்புக்கள் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து அவரது சமூகப் பணியும், கல்விச் சேவையும் ஆன்மிகத் தொண்டும் மேன்மையுற அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

*ஏழாலை ஆத்ம ஜோதி தியான மணிமண்டப சபையினர்.*




குறைந்த விலையில் குவளைகள்
www.titusstores.com
**டைட்டஸ் ஸ்டோர்ஸ்**
புறக்கோட்டை 2439422 லிபர்டி பிளாஸா

## 7 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் கிருஸ்ணதாசன் தேனுஷான்**

கரணவாய் கிழக்கு,
கரவெட்டியைச் சேர்ந்த
*கிருஸ்ணதாசன் தேனுஷான்*
இன்று (17.10.2011) திங்கட்கிழமை
தனது 7 ஆவது பிறந்த நாளை
கொண்டாடுகின்றார்.
தேனுஷான் கல்வியிலும்,
வாழ்விலும் பல சிறப்புக்களையும்
பெற்று நோய்கள் இன்றி பல்லாண்டு
காலம் மகிழ்வாக வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள்.**

**குரு சேத்திரம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**


## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்
## நெடுந்தீவு அஞ்சல் அலுவலக திருத்த வேலைக்கான கேள்வி அறிவித்தல்

எமது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் பின்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | வேலைத்திட்டத்தின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு ரூபா | மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு ரூபா | ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 1. | Renovation of Delft Post Office Building | 17,000.00 | 1000.00 +VAT 12% | C-9 |

1.கேள்விப் பத்திரங்கள் எதிர்வரும் 17.10.2011 ஆம் திகதி தொடக்கம் 31.10.2011 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும்.

2.கேள்விப் பத்திரங்களை பெறவரும்போது ICTAD பதிவுப் புத்தகம், VAT . சான்றிதழ் மற்றும் அவற்றின் பிரதிகளையும் கொண்டு வருவது மிகவும் அவசியமானதாகும்.

3.கேள்விப் பத்திரங்கள் 02.11.2011ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

4.கேள்விகள் யாவும் 02.11.2011 ஆம் திகதி மு.ப 10.30 மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்விகளைப் சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதி நிதிகளோ சமூகமளிப்பது மிகவும் அவசிய மானதாகும்.

5. பூரணப் படுத்தப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்களை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு இடதுபக்க மேல் மூலையில் ''நெடுந்தீவு அஞ்சல் அலுவலக திருத்த வேலைக்கான கேள்வி'' எனக்குறிப்பிட்டு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது இவ்வேலைக்கென பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம்.

மேற்படி வேலை ஒப்பந்தம் கைச்சாத்தான திகதியில் இருந்து ஒரு மாதத்தினுள் முற்று முழுதாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

*திரு.மரியதாசன் ஜெகூ
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.*


## Jaffna College Institute of Technology

**கணினிப் பிரயோக உதவியாளர் பாட நெறிக்கு விண்ணப்பிக்கவும்.**

*Computer Application Assistant

தமிழ் மொழி மூலம்

1. Maintenance files Folder
2. Perform word processing
3. Prepare spread sheets
4. Prepare Presentation
5. Maintenance Data bases
6. Create electronic files
7. Apply IT for Communication
8. Perform General Maintenance




A training Institute registered with the (TVEC) Under P25/0014

More Information
Director,
Jaffna College Institute of Technology Vaddukoddai, Jaffna, Sri Lanka.
T.P No.321221 3139 021 222 8275 E-Mail jcit@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியுடைய கனகசபாபதி சபாநாதன் என்பவரது தே.அ.அட்டை (811714232V) யாழ்.நகர் பகுதியில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட விலாசத்தில் அவரது 0776524296 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்குமடத்துப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், 3¼ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0750413314

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய்க்கும்-சுன்னாகம் சந்திக்கு அருகிலும் 11½ பரப்புக் காணி விற்ப னைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை

தொடர்பு: 0777252159

# பதவி வெற்றிடம்

## இலங்கையில் வேகமாக முன்னேறிவரும் நிறுவனத்துடன் இணையுங்கள்

Chesmi Consoliclated (PVT) Ltd. நிறுவனமானது இலங்கையின் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையில் வேகமாக முன்னேறிவரும் ஒரு நிறுவனமாகும். எமது நிறுவனம் தனது கிளைகளை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அகல விரித்து ஆலோசனை வழங்கியும் இலங்கையின் உட்கட்டுமானப் பணிகளுக்கு தனது சேவையை வழங்கி வருகின்றது.

எமது நிறுவனத்தின் வெற்றிக்காகவும் வளர்ச்சிக்காகவும் தங்களை அர்பணித்துப் பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்களை இணைத்துக் கொள்ள நாம் முன்வந்துள்ளோம்.

I. **கணக்கு உதவியாளர்:** (Accounts Assistants - Kilinochchi)

* **தகைமை:-** ICASL / CIMA / AAT / ACCA பாடநெறிகளில் பகுதியளவு தேர்ச்சி
* **கணினி அறிவு:** Ms Office, Quick book, Internet & E-mail ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சி
* ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பேசவும், எழுதவும் கூடிய ஆற்றல் இருத்தல்
* நீண்ட நேரம் வேலைசெய்தல் மற்றும் தேவைப்படுமிடத்து வார இறுதி நாள்களிலும் வேலை செய்ய விரும்பமுடையோர். (தங்குமிட வசதியுண்டு)

II. **விற்பனை பிரதிநிதிகள்** (Sales Officers - Kilinochchi)

* தகைமை:- க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் பாடங்களில் சிறப்பு சித்தியுடன் கூடிய தேர்ச்சி
* ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளிலும் பேசவும் எழுதவும் கூடிய ஆற்றல்
* ஆளுமை கொண்ட விளையாட்டு வீரராக இருத்தல்
* மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருத்தல்
* நீண்ட நேரம் வேலைசெய்தல் மற்றும் தேவைபடுமிடத்து வார இறுதி நாள்களிலும் வேலை செய்ய விருப்பமுடையோர். (தங்குமிட வசதியுண்டு)

30 வயதுக்குட்பட்ட பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரக் கோவையை இவ்விளம்பரத் திகதியில் இருந்து 10 நாள்களுக்குள் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.


தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவியை குறிப்பிடவும்.

மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பிக்க விரும்புவோர் Careers @ Chesmi. Com. விண்ணப்பிக்கவும் பதவியை தலைப்பிட்டு மின்னஞ்சல் அனுப்பவும்.

Human Resources Division
Chesmi Consolidated (Pvt) Ltd.
No.21, Siebed Avenue,
Colombo - 05.

# மரண அறிவித்தல்

## சின்னப்பு இராசரத்தினம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இராசரத்தினம் நேற்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - கதிராசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்து - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தி (இந்திரா), இந்திரன் (பிரான்ஸ்), சந்திரன் (பிரான்ஸ்), சாந்தி (சந்திரா - கனடா), ஜெயந்தி (சித்திரா - பிரான்ஸ்), தமயந்தி (ஆசிரியை, யா/ வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருந்தவராசா (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை), சந்திரோதயா (பிரான்ஸ்), ஜெயமாலினி (பிரான்ஸ்), செல்வரத்தினம் (கனடா), நவேந்திரன் (பிரான்ஸ்), ஜெயமுகுந்தன் (செலான் வங்கி) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனதன் (யா/ பரியோவான் கல்லூரி), ஜனனி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), இந்துஜா, வினோத், அஸ்வினா, துவாரகா, பிரதீப், பிரவினா, விதுஷா, அஜனன், பிரதீஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் பவளம், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பூரணம், செல்லக்கண்டு, அன்னமயில், தங்கராசா, மணி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நல்லம்மா, கந்தையா, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சின்னத்தங்கம், செல்லர், செல்லமணி, கந்தையா, பண்டாரி அகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சு வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

(9189)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# அதிர்ஷ்டலாபச் சீடிழுப்பு முடிவுகள்

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினால் உற்சவகாலங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வீதியிலுள்ள மோகன் அரங்கில் நடைபெற்ற சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வின் போது வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றியாளர்கள் வெற்றி இலக்கங்களை உறுதிப்படுத்தி யாழ். விழிப்புலனற்றோர் சங்கக் காரியாலயத்தில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 10.00 - 2.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் எதிர்வரும் November 15 ஆம் திகதிக்கு முன்பதாக பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வெற்றி இலக்கங்கள்:**

முதலாவது 62124, 2ஆவது 15627,
3ஆவது 20493, 4ஆவது 61722, 5ஆவது 57562.

**ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:**

* 50083
* 67293
* 54315
* 68799
* 69395

இந்த வளர்ச்சி நிதிக்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்

## திருமதி லோகரஞ்சினி தவச்செல்வம்



துணுக்காய் கல்வி வலயத்தில்
நல்லாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு
ஜனாதிபதியால்
"பிரதீபா பிரபா" விருது வழங்கிக்
கௌரவிக்கப் பெற்ற எமது
பாடசாலையின் ஆரம்பக்கல்வி
ஆசிரியையான
**திருமதி லோகரஞ்சினி தவச்செல்வம்**
அவர்களை மனதார வாழ்த்துவதோடு
இன்னும் பல உயர்வுகளைப் பெற்றுச்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நலன்புரி சங்கம்,**
**மு/பாலிநகர் மகாவித்தியாலயம், வவுனிக்குளம்.**




HIGHER NATIONAL DIPLOMA IN
Business Management



மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

முகாமைத்துவத் துறையில் நாளை
நீங்களும் ஓர் பட்டதாரி.....

முகாமைத்துவத்துறையில் உங்கள் தகுதியையும் ,தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்கின்றீர்கள். இவ் HND கற்கை நெறியை வெற்றி கரமாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் இத்துறையிலேயே அதிக வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும். இறுதியாண்டை பூர்த்தி செய்ய விரும்பும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ,கொழும்பில் அல்லது இங்கிலாந்தில் மேற்படிப்பை பூர்த்தி செய்யக்கூடிய ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

Duration
2 years

Entry Requirement
Minmum 2 Passes in A/L


கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 021 222 8060 Fax: 021 222 6933
Web: www.iis.edu.lk Email: info@iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 வருடங்களுக்கு முன் யாழ். தாதியர் கல்லூரி சந்தித்த மறக்க முடியாத மாபெரும் இடப்பெயர்வு

(சென்றவாரத் தொடர்ச்சி)




1987 ஆம் ஆண்டு கல்லூரி மீது இடம்பெற்ற எறிகணை வீச்சு சம்பவத்தை அடுத்து கல்லூரியின் பயிற்சி நெறிகள் முற்றாகத் தடைப்பட்டன. இதனால் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது.

கல்லூரியின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்ததால் கல்லூரி ராணுவத்தின் தங்கு இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூன்று மாத காலத்தின் பின்னர் பலருடைய அயராத முயற்சியால் கல்லூரி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பயிற்சி நெறிகளும் மீளத் தொடங்கின.

எறிகணை வீச்சால் பெரும் சேதத்துக்குள்ளான கல்லூரி இராணுவத்தின் தங்ககமாகப் பயன்படுத்தப்பட்டதால் ராணுவத்தினரே அதனைப் புனரமைப்புச் செய்தனர். இதனால் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் நடைபெற்றன.

அத்துடன் கல்லூரியில் நிலவிய போதனாசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு போதனாசிரியர்கள் பயிற்சிக்காக வரவழைக்கப்பட்டனர்.

போதனாசிரியர்களான வெங்கட்ரமணன், சந்திரலக்சுமி கோபிநாத் ஆகியோர் இந்தியாவிலிருந்து வருகை தந்து கல்லூரியில் போதனாசிரியர்களாகக் கடமையாற்றினார்கள்.

இந்தியப் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர் நாட்டில் அமைதியான சூழல் நிலவினாலும் மீண்டும் குழப்பநிலை உருவாகியது.

இதனால் 1990 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலை மானிப்பாய் வைத்தியசாலைக்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டது.

இதனால் கல்லூரியில் பெருமளவு வளப்பற்றாக்குறை நிலவியதால் கல்லூரியை மீண்டும் மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கல்லூரியின் பயிற்சி நெறிகள் 6 மாத காலங்கள் தடைப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய கல்லூரி மாணவர்கள் தாதிய சேவை புனிதத்துக்கும் மகத்துவத்துக்கும் மதிப்புக் கொடுத்து தாதிய சேவையில் ஈடுபட்டனர்.

1990 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பொதுமக்களின் சேவையை யாழ். நகரில் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் தற்காலிகமாக மானிப்பாய் வைத்தியசாலையில் இயங்கிய யாழ். போதனா வைத்தியசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ். போதனா வைத்தியசாலையும் அதனுடன் இணைந்திருந்த யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியும் பெருமளவிலான இடப்பெயர்வை சந்திக்க நேர்ந்தது. இதனால் வைத்தியசாலையில் ஆளணி மற்றும் ஏனைய வளங்களும் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டது.

இத்தகைய காலப்பகுதியானது கல்லூரியின் வரலாற்றில் மிகவும் இருண்ட காலமாகக் கருதப்பட்டது. ஏனெனில் கல்லூரியில் ஆளணி வளங்கள் மாற்றப்பட்ட போதும் கல்லூரியின் ஏனைய வளங்கள் பாதுகாப்பற்றுக் காணப்பட்டன.

அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற சூழ்நிலைகளால் கல்லூரியின் ஏனைய வளங்களை இடமாற்றம் செய்வதற்கு போதுமான போக்குவரத்து வசதிகள் காணப்படவில்லை. இந்த துன்பியல் சம்பவத்தை கல்லூரியில் பயின்ற 95 'ஏ' அணி மாணவர்கள் சந்திக்க நேர்ந்தது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கி வந்த யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராகக் கடமையாற்றிய செல்வி ந. கனகரத்தினம் மற்றும் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியின் போதனாசிரியர்கள், கல்லூரியின் மாணவர்கள்,பெற்றோர்கள், சமூக நலன்விரும்பிகள் ஆகியோர் ஒன்றிணைந்து ஒரு கலந்துரையாடலை நடத்தி கல்லூரியை மீண்டும் தற்காலிகமாக நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

**சோபனா**

இதனால் கல்லூரியின் கற்றலுக்கு ஏற்றாற்போல் ஓர் இடத்தை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான மண்டபம் ஒன்றில் 1996 ஆம் ஆண்டு கல்லூரி மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டதால் அந்தக் காலப்பகுதியில் கற்றல் செயற்பாடுகளில் தாதிய மாணவர்கள் பெருமளவு நன்மை பெற்றனர்.

தாதிய மாணவர்கள் கல்லூரி வளாகத்துக்கு அண்மையில் உள்ள வீடுகளில் தங்கியிருந்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

எனினும் அந்தக் காலப்பகுதியில் போதனாசிரியராக இருந்த இளங்கோதை தம்பிப்பிள்ளை தனது சொந்த ஊரான மட்டக்களப்புக்குச் சென்றபடியால் கல்லூரியில் போதனாசிரியர் பற்றாக்குறை நிலவியது.

(தொடரும்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



UK இல் 100 முதல் தர பாடசாலைகளில் ஒன்றான *Townle Grammar School* மாணவி செல்வி துஷ்ஷிகா மகேந்திரம் UK இல் 2011 மே மாதம் இடம்பெற்ற G.C.S.E பரீட்சையில் 12 பாடங்களில் 9A+, 3A சித்திபெற்று பாடசாலை மட்டத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளார். இவர் மேலும் கல்வித்துறையில் பல சாதனை புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஈஸ்வரனை வேண்டிக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பம்மா, அப்பா-மகேந்திரம், அம்மா - வசந்தராணி, அண்ணா-கணிஸ், சறாஸ், பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், ஆசை தாத்தா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார்.

மு.இராசேந்திரம் (மாமா)
அறிவொளி, புத்தூர் கிழக்கு.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த



செல்வி இ.சசி
159 புள்ளிகள்



செல்வி அ.றம்மியா
158 புள்ளிகள்



செல்வன் செ.தரணிஜன்
151 புள்ளிகள்

ஆகிய மாணவர்களைப் பாராட்டுவதோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| ஜெ.கயல்விழி 147 | உ.பிரியங்கன் 137 | த.கிருத்திகா 120 | ஜெ.கயானன் 107 |
| இ.திலக்சிஜா 142 | த.கனிஸ்ரன் 137 | அ.கஜன் 117 | அ.பவிர்த்தனா 106 |
| ம.கீர்த்திகா 142 | ச.டினுஜன் 132 | ஜி.தர்சிகா 117 | வி.லவன்ஜா 105 |
| ர.வருனேசன் 141 | க.சதீசன் 128 | ஜெ.பிரியா 112 | ச.சங்கீர்த்தனா 104 |
| சி.லாவண்யா 140 | ச.வியூட்டிகா 125 | ர.விபூஜனா 109 | க.யதுர்சனா 103 |
| கு.குவிந்தன் 139 | வி.விதுனா 123 | ச.டிலைக்சன் 109 | செ.நிவேதியன் 101 |
| சா.பிரசன்னா 138 | கு.யதுசன் 121 | க.திலக்சன் 108 | |

ஆகிய மாணவர்களையும் பாராட்டுவதோடு அவர்கள் மேலும் கல்வியிலே உயர்வடைந்து சாதனைகள் செய்ய வாழ்த்தி இவர்களது திறமைகளை வளரச்செய்த அதிபர் அவர்களையும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும் நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம், யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
•வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட




DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 38, பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதைக் குறைத்து வெளிநாடு செல்வோர் கட்டுநாயக்காவில் கைது செய்யப்படுவர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக.17

போலி ஆவணங்கள்மூலம் வயதைக் குறைத்துக்காட்டி வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்வோரைக் கைதுசெய்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைமூலம், வெளிநாடு செல்லவிருந்த வயதுகுறைந்த இரண்டு யுவதிகள் விமான நிலையத்தில் வைத்து அண் மையில் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் நெருங்கிய நபரொருவரூடாகப் பெற்றுக்கொண்ட விஸாவை எடுத்துக் கொண்டு விமானநிலையத்துக்கு வருகை தந்திருந்தார். அவரிடம் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து அவரது பயணம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்த யுவதி தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பொறுப்பில் கட்டு நாயக்கவில் அமைந்துள்ள காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறு வயதுகுறைந்த யுவதிகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் குழுக்கள் மற்றும் நபர்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் என்று பணியகம் தெரிவிக்கின்றது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் போலியான ஆவணங்கள்மூலம் கட்டார் சென்ற யுவதியொருவர் திரும்பிவரும்போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

எனவே, இவர்கள் போன்ற யுவதிகள் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)




உடுப்பிட்டி கலைமகள் சர்வதேச சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பாடசாலையின் பணிப்பாளர் எஸ்.கௌரிபாலன் மாணவி செ.செந்துஜிக்கு பரிசில் வழங்குகின்றார். (ச-236)

# 89 வர்த்தகர்களுக்கு அபராதம்

களுத்துறை, ஒக்.17

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வியாபார நிலையங்களில் நுகர்வோர் சட்டங்கள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை என்று மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து அதிகாரசபையின் செயலாளர் கமல் பத்மசிறியின் பணிப்பின்பேரில் களுத்துறை மாவட்டத்தில் பல பகுதிகளிலும் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட சோதனையின்போது விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்காத 54 பேரும், கூடிய விலைகளில் பொருள்களை விற்பனை செய்த 25 பேரும், காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 17 பேரும், அரிசியை கூடிய விலைக்கு விற்ற 9 பேரும், பொருள்களைப் பதுக்கி வைத்திருந்த ஒருவரும், பொருள்களை விற்பனை செய்தமைக்கான சிட்டை கொடுக்காத இருவரும், பைக்கட்டுகளில் விலைகள் குறிப்பிடப்படாத பொருள்களை விற்பனை செய்த 5 பேரும், கைவசம் உள்ள பொருள்களை விற்பனை செய்ய மறுத்த இருவருமாக மொத்தம் 115 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்களில் 89 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ரூபா 3,29,600 ரூபா அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

# கைதிகளால் சிறைச்சாலைக்கு 75 லட்சம் ரூபா வருமானம்

கொழும்பு, ஒக்.17

சிறைக்கைதிகளால் சிறைச்சாலை திணைக்களத்துக்கு கடந்த வருடம் சுமார் 75 லட்சத்து 12 ஆயிரம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் லக்ஷ்மன் சில்வா தெரிவித்தார்.

நீண்டகாலப் பணிச் சலுகைத் திட்டத்தின் கீழ் 43 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், குறுகியகாலத் திட்டத்தின் கீழ் 21 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவும், நாட்டிய நிகழ்ச்சிகள் மூலம் 10 லட்சத்து 47 ஆயிரம் ரூபாவும் வருமானமாகக் கிடைத்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

1973 ஆம் ஆண்டின் இலக்கம் 18 சட்ட ஷரத்தின் கீழ் இந்த வருமானத்தில் சிறைக்கைதிகள் சேமநலன் நிதியத்துக்கு 40 வீதமும், அரசின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு 10 வீதமும், கைதிகளின் கணக்குகளுக்கு 25 வீதமும் செலுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஒக்.17

சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலை துரிதமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் 250 தொடக்கம் 300 ரூபா வரை விற்பனையான ஒரு போத்தல் எண்ணெயின்விலை 140 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

போத்தல்களில் ஏற்கனவே அடைக்கப்பட்டுள்ள எண்ணெய் இன்னும் 380 தொடக்கம் 450 ரூபா வரை விற்கப்படுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். தேங்காய் எண்ணெயின் விலை வீழ்ச்சி அடைந்தபோதும் தேங்காய் இன்னும் 40 ரூபாவுக்கு மேலேயே விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## எயிட்ஸ் நோயாளிகள் அதிகரிப்பு

இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நாள்தோறும் குறைந்த பட்சம் ஒருவர் எச்.ஐ.வி நோய்த்தொற்றினால் பீடிக்கப்படுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் 71பேர்எயிட்ஸ்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 17பேர் உயிரிழந்துள்ளனர். 2009 ஆம் ஆண்டில்மூவாயிரமாகக் காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 3,757 ஆக அதிகரித்துள்ளது. இந்நோயால் அதிகளவில் பெண்களே பாதிக்கப்படுகின்றனர். (ச)

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இன்றும் நாளையும் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19.20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள் ளுங்கள்!

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

# 8 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் நாகேந்திரம் முருகையா



மலர்வு:
1948.11.02

உதிர்வு:
2011.10.10

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயர்கொண்டு 8 ஆம் நாள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்
அன்னாரின் மறைவையொட்டி நினைவு கூருகின்றோம்

டச்றோட், உடுவில்.

பற்றிக் ராஜா
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் அந்தோனியாப்பிள்ளை (அன்னம்) சின்னத்துரை



தோற்றம்: 1928.08.13
மறைவு: 2011.09.17

கபடமில்லா உம் பேச்சும்
களங்கமில்லா புன்சிரிப்பும்
அன்பான அரவணைப்பும்
அழகான உம் முகமும் நாம்
அகிலத்தில் உள்ளவரை அழியாது

பிரிவால் துயருறும்:
சின்னத்துரை (கணவன்)
பிறேமன் குடும்பத்தினர்,
ஸ்ரீபன் குடும்பத்தினர்,
ஸ்ரலின் குடும்பத்தினர்,
சுகுணா குடும்பத்தினர்,
கொன்சன்ரைன் குடும்பத்தினர்,
பேபின் குடும்பத்தினர்,
றொபின்சன் குடும்பத்தினர்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

16/1, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic

முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



இன்றும் நாளையும் யாழ் கிளையில்
மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19.20 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288.

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று 40 ஆவது ஆண்டில் கால் பதிக்கிறது அ.தி.மு.க.

## தமிழகத்தில் தீய சக்திகளுக்கு இடமில்லை உறுதி பூணுகிறார் ஜெயலலிதா

தமிழகத்தில் இனி எந்தக் காலத்திலும் தீய சக்திகள் கொள்ளையடிக்க முடியாத வகையில் மக்கள் பணியாற்றுவோம் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. 40ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்ட மக்கள் இயக்கமான அ.தி.மு.க. தனது 39 வருட வெற்றிப் பயணத்தை நிறைவு செய்து, இன்று 40 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நன்னாளில் எமது இயக்கம் கடந்து வந்த வெற்றிப் பாதைகளின் பெருமிதங்களையும், எதிர் கொண்டு இடர் சாய்த்த வரலாற்றையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்து மக்களெல்லாம் ஒருசேர கிளர்ந் தெழுந்து கருணாநிதி என்னும் தீய சக்தியைத் தூக்கி எறிய கண்டுபிடித்த பேராயுதம் தான் அ.தி.மு.க. 1972 இல் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆறு மாதத்தில் 1973 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மண்ணில் நாடாளுமன்ற இடைத் தேர்தலைச் சந்தித்து இந்த இயக்கத்தால் வெற்றி பெற முடிந்தது. அதன் தொடர்ச்சியாக, 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அமோக வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தார்.

ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஐந்தே ஆண்டுகளில் ஆதிக்க சக்தியை, குடும்ப ஆதிக்கத்தை, கொள்ளைக் கும்பலின் அராஜகத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்த்தது என்றால், அது இந்திய அரசியல் வரலாற்றில் அ.தி.மு.க. என்ற இயக்கம் மட்டும் தான்.

எத்தனை முறை முயன்றும் கருணாநிதி என்னும் தீய சக்தியால் வெற்றி பெற முடியாத, வீழ்த்த முடியாத இயக்கம் அ.தி.மு.க. என்பதை, 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலும் உலகுக்கு உணர்த்தியது.

திமுக-வினராலும், சமூக விரோத சக்திகளாலும் அபகரிக்கப்பட்ட ஏழை, எளியோரின் நிலங்கள் சட்டப்படி மீட்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் மகத்தான பணி நாடே வியக்கும் வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மகிழ்ச்சி தொடர, நாம் அனைவரும் அ.தி.மு.க. தோன்றிய இந்தப் பொன்னாளில் உறுதி மேற்கொள்ள வேண்டும். இனி, எந்தக் காலத்திலும் தீய சக்திகள் தமிழ் நாட்டை கொள்ளையடிக்க முடியாத வகையில் மக்கள் பணியாற்றுவோம் என்பது தான் நாம் மேற்கொள்ள வேண்டிய உறுதிமொழி.

இந்தப் பொன்னாளில் ஊரெங்கும் கட்சிக் கொடிகளை ஏற்றுங்கள்! எல்லோருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழுங்கள்! என்ற அந்த அறிக்கையில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# தமிழக உள்ளூராட்சித் தேர்தல்; இன்று வாக்களிப்பு ஆரம்பம்

சென்னை உள்ளிட்ட 10 மாநகராட்சிகள் மற்றும் பல நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றுக் கான உள்ளூராட்சித் தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது.

இன்று நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியுடன் ஓய்ந்தது. இன்று காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகிறது.

பத்து மாநகராட்சிகள், 60 நகராட்சி, 259 பேரூராட்சி, 191 ஊராட்சி ஒன்றியங்களுக்கு முதல் கட்டமாக இன்று மின்னணு இயந்திரங்கள் மூலம் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்து நேற்றுமுன்தினம் சென்னையில் நிறைவு செய்தனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 25 நாள்களாக பிரசாரம் தீவிரமாக நடந்தது. நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது.

முதல் கட்ட தேர்தல் நடைபெறும் இடங்களில் 80 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்து 3 ஆயிரம் பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

சென்னையின் 200 வட்டாரங்களில் உள்ள 4876 சாவடிகளிலும் வாக்குப் பதிவை வீடியோ பதிவு செய்யவும் இணையக்கமரா மூலம் கண்காணிக்கவும் கூடுதல் பொலிஸாரை பணியில் அமர்த்தவும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தலை நீதிமன்றம் கண்காணிப்பதால் அமைதியான முறையில் வாக்குப் பதிவு நடக்க அனைத்து ஏற்பாடுகளையும் மாநில தேர்தல் ஆணையம் செய்துள்ளது. இன்று காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடைகிறது. 2 ஆம் கட்ட வாக்களிப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும். (வ)

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்:

# மன்மோகனின் கருத்துக்கு அத்வானி கடும் கண்டனம்

ஜபல்பூர், ஒக்.17

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கூறுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் விதமாகப் பிரதமர் கூறிய கருத்துக்கு பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபில்பூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை எவ்வித மறு ஆய்வுக்கு உட்படுத்துவதையும் பா.ஜ.க. எதிர்க்கிறது. ஏனெனில், அரசு வெளிப்படைத் தன்மையுடன் இருப்பதற்கு இந்தச்சட்டம் ஆற்றல் மிக்க கருவியாக இருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

அண்மையில்தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இந்த அரசு புகழ்ந்து பேசியது. இந்தச் சட்டத்தின் மூலம் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவந்து விட்டதாகக் கூறிக் கொண்டது. ஆனால், எவருமே இந்தச் சட்டம் குறித்து முறைப்பாடு சொல்லாத நிலையில் இப்போது பிரதமர் மறு ஆய்வு பற்றிக் கூறியிருக்கிறார்.

இந்த அரசு போல் ஊழல் மிகுந்த, செயற்படாத ஓர் அரசை நான் எப்போதும் கண்டதில்லை. காஷ்மீர் விடயமாக பிரசாந்த் பூஷண் கூறிய கருத்திலிருந்து அன்னா ஹசாரே முரண்பட்டிருப்பது எனக்குப் பிடித் திருக்கிறது. அன்னா ஹசாரே குழுவில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு எனக்குப் பிடித்திருப்பதாகத் திரித்துக் கூறப்பட்டு விடலாம் என்பதால், இந்தக் கருத்தை நான் முன்பே கூறவில்லை-இவ்வாறு அத்வானி கூறினார். (வ)

# தெலுங்கானாவில் இன்று ஹர்த்தால்

தனித்தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை தீவிரம் அடைந்து வருகிறது. தெலுங்கானாவில் அடங்கிய 10 மாவட்டங்களில், தற்போது 3 நாள் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த ரயில் மறியல் போராட்டம் இன்றுடன் முடிவடைகிறது.

நேற்றுமுன்தினம் ரயில் மறிப்புப் போராட்டத்தில் விஜயசாந்தி கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இன்று திங்கட்கிழமைதெலுங்கானா முழுவதும் ஹர்த்தால் நடைபெறும் என்று தெலுங்கானா போராட்டக்குழு அறிவித்துள்ளது.



பசும்புலரி சுற்றுச்சூழல் அமைப்பின் சார்பில் வீதிகளில் பசுமை விழா, கோவை நண்டங்கரை தடுப்ப ணையில் நடந்தது. முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மரக்கன்று நட்டார். சிறுதுளி தலைவர் பாலசுப் ரமணியம், நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# பேரறிவாளன், சாந்தன், முருகனின் கருணை மனு மத்திய அமைச்சரவையில் பரிசீலனைக்கு வந்ததா?

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவருக்கும் விதிக் கப்பட்ட தூக்கு தண்டனைக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த எட்டு வார இடைக் காலத் தடை வெகுவிரைவில் முடிவடையப் போகின்றது.

மத்திய, மாநில அரசுகள் பதில் மனுத்தாக்கல் செய்யத் தயாராகி வரும் நிலையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அதிமுக்கிய விவகாரத்துக்கு விடை கண்டு இருக்கிறார் காங்கிரஸ் புள்ளியான திருச்சி வேலுசாமி. இந்த மூவரின் கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் நிராகரித்தது ஏன்? மத்திய அமைச்சர்கள் யார், யார் கலந்து பேசி கருணை மனுக்களை நிராகரிக்க ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தார்கள்? எனப் பல கேள்விகளை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பினார் வேலுசாமி.

பலத்த இழுத்தடிப்புக்குப் பிறகு, இப்போது பதில் வந்துள்ளது. மூவர் தூக்கு விவகார விசாரணை நெருங்கி வரும் நிலையில் உள்துறையின் பதில் குறித்து வேலுசாமியிடம் பேசிய போது, ''ராஜீவ் கொலை வழக்கு விசாரணை யில் ஆரம்பத்தில் இருந்தே ஆயிரக்கணக்கான குழப்பங்கள். இந்தியாவின் மாபெரும் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் சில விஷமிகளைத் தப்பவைப்பதற்காகவே பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை விசாரணை அதிகாரிகள் பலிகடா ஆக்கினார்கள், ராஜீவ் கொலை வழக்கு விவகாரத்தை விசாரிக்கும் பல்முனைநோக்கு விசாரணைக் குழுவிடம் நான் ஆரம்பம் தொட்டே பலவிதமான சந்தேகங்களையும் சொல்லி வருகிறேன்.

ஆனால், விசாரணை முற்றுப் பெறாத நிலையிலேயே இந்த மூவரையும் தூக்கு மேடையை நோக்கித் துரத்தும் விதமாக கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதன் பின்னணியில் யாருடையகைங்கரியம் இருந்தது என்பதை வெட்டவெளிச்சமாக்க நினைத்தே என் மனதில் எழுந்த கேள்விகளுக்குப் பதில் கேட்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி 13.08.2011 அன்று மத்திய அரசுக்கு அனுப்பினேன்.

மூன்று பேருடைய தூக்குக்கு திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், இது சம்பந்தமான கேள்விகளுக்கு விடை தெரிந்து பதில் அளித்திருக்க வேண்டிய மத்திய அரசு திட்டமிட்டுத் தாமதம் செய்தது. அதனால் உரிய பதில் வராவிட்டால் நீதிமன்றத்துக்குச் செல்வோம் என நாம் நினைவூட்டுக் கடிதம் அனுப்பிய பிறகே கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி பதில் வந்துள்ளது.

அதில், உச்ச நீதிமன்றம் தீர்ப்புச் சொன்ன பிறகு கருணை காட்டுங்கள் எனச் சொல்வது சரியான அணுகுமுறை அல்ல என்றும், மூவருடைய தூக்குக் குறித்து பலவிதமான ஆலோசனைகளை நடத்திய பிறகே, உள்துறை அமைச்சகம் கருணை மனுக்களை நிராகரிக்க இந்திய ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இதில், மிக முக்கியமான தகவல், மத்திய உள்துறை அமைச்சரான ப.சிதம்பரம், கருணை மனு நிராகரிப்பு குறித்து மத்திய அமைச்சர்கள் யாரிடமும் கலந்து பேசவில்லை. ஒன்றுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் கலந்து பேசித்தான் கருணை மனு நிராகரிப்பு குறித்து ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்ய முடியும். ஆனால், தன்னிச் சையாகவே ப.சிதம்பரம் கருணை மனு நிராகரிப்புக் குறித்து ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்து இருக்கிறார். மத்திய அமைச்சரவையில் உள்ள வேறு யாரையும் கலந்து ஆலோசிக்காமல் இப்படி அவர் செய்ததே தவறு. மூன்று பேர் தூக்கு குறித்த நீதிமன்ற விசாரணைகள் வேகமாகி வரும் நிலையில், உள்துறை செய்த இந்தக் குளறுபடியை மிக முக்கிய ஆவணமாகப் பதிவு செய்யலாம்!'' என்று சொல்கிறார் வேலுசாமி.

மூவருக்குமான தூக்கு குறித்த அடுத்த கட்ட விசாரணைகளில் வேலுசாமிக்கு வந்திருக்கும் கடிதத்தையும் முக்கிய ஆவணமாகக் கையில் எடுத்திருக்கிறார்கள். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# தரமான சமூகம் நோக்கிய நகர்வுக்கு கல்வி முகாமைத்துவம்

(13ஆம் திகதிய தொடர்ச்சி )

எட்வேட் டேமிங்கின் கருத்துப்படி கல்வியியலாளர்கள் முழுநிலைத் தரத்தைப் பாடசாலையில் பிரயோகிப்பதனூடாக பல நேரான கல்வி இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். குறிப்பாகக் குழுக் கற்பித்தல் களமுகாமைத்துவம் கூட்டு முறையிலான கற்றல் என்பவற்றோடு வெளியீட்டை மையமாகக் கொண்ட கல்வி செயற்பாட்டையும் அடைந்து கொள்ள முடியும். கல்வியில் முழுநிலைத் தரம் நோக்கிய நகர்வுக்கு பின்வருவன அவசியமானதாகவுள்ளது.

1. தரமான கற்போன் தரமானவனாக விளங்குவதற்கு அவரிடம் சிறப்பான தேகாரோக்கியம் காணப்படுவதோடு பிள்ளைப் பருவத்துக்குரிய உளநிலை அபிவிருத்தி ஏற்பட்டு இருக்க வேண்டும். பாடசாலைக்கான வரவானது ஒழுங்கானதாக இருப்பதோடு கற்பதற்கான பெற்றோரின் ஆதரவும் அவசியமானதாகும்.

2. தரமான கற்றல் சூழல் இதனுள் கற்றலுக்குச் சாதகமான பௌதீகவியல் உளவியல் சூழல்கள் அவசியமானவையாகும். பௌதீகம் சார் விடயங்களுள் தரமான பாடசாலை வசதிகள் பாடசாலையின் அடிப்படைக் கட்டுமானங்களுக்கும் தரம் தொடர்பான ஏனைய பரிமாணங்களுக்குமிடை யிலான இடைத் தொடர்பு வகுப்பறையின் பருமன் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

உளவியல்சார் விடயங்கள் என்பதனுள் அமைதியானதும் பாதுகாப்பானதுமான சூழல் ஆசிரியர்களின் நடத்தைப் பாங்குகள் வினைத் திறனான பாடசாலை ஒழுங்கு விதிகள் வன்முறையற்ற சூழல் என்பன முக்கியத்தவம் பெறுகின்றன.

3. தர உள்ளடக்கம் என்பதனுள் மாணவர் மையமானதும் பாரபட்சமற்றதுமான தரமான கலைத்திட்டம் வாழ்க்கைத் தேர்ச்சிகளை உள்ளடக்கிய கற்பித்தல் செயற்பாடுகள் கல்வியறிவின் உயர் மேம்பாடுகள் உள்நாட்டுக்கும் வெளி நாட்டுக்குமான ஒப்பற்ற கல்வி நிலை என்பன முக்கியத்துவ முடையதாகவுள்ளன.

இங்கு தரமான கல்விச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர்களை உயர் வாண்மைக் கற்றலுக் குட்படுத்துதல் அவசியமானதாகும். ஆசிரியர்களின் தேர்ச்சி நிலைகள் வளர்க்கப்படுவதனூடாக பாடசாலையின் செயற்பாடுகள் வினைத் திறனுடையதாக்கப்படும். இதுதவிர மாணவர் மையக் கற்பத்தலுக்குத் தொடர்ச்சியான ஊக்கம் வழங்கப்படுதல் அவசியமானதாகும்.

முழுநிலைத்தர முகாமைத்துவச் செயற்பாடுகளைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல்

1. பாடசாலையின் நோக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்பதோடு பங்குதாரர்கள் பாடசாலைச் சபை உறுப்பினர்கள் நிர்வாகிகள் ஆசிரியர்கள் பெற்றோர் சமூகம் மாணவர்கள் என்போருடன் பகிரப்பட வேண்டும்.

கல்வி இலக்குகளைத் தீர்மானிக்கும் போது சேவை பெறுநரின் தேவைகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். கல்வி எல்லா மாணவர்களுக்கும் வழங்குவதை நோக்காகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

2. பாடசாலையின் பணியொழுங்கு பற்றி மீளச் சிந்திக்க வேண்டியதோடு அதனை முன்னுரிமைப் படுத்தலும் அது தொடர்பான உடன்பாடான நிலையை எல்லோரிடத்திலும் ஏற்படுத்துதல் அணி முறைகள் உள்ளீடுகள் சூழல் நிலமைகள் என்பன புதிய கற்றல் கற்பித்தல் நிலமைகளுக்கேற்ப மீள ஒழுங்குபடுத்தப்படல். இங்கு ஒவ்வொரு மாணவனின் வெற்றியும் இலக்காகக் கொள்ளப்படுவதோடு. மாணவனின் தனியாள் வேறுபாடு களும் நோக்கப்படும்.

3. தலையீட்டுத் தந்திரோபாயங்களைக் கையாள்வதனூடாக மாணவர்களின் கற்றல் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணப்படும். இங்கு தரத்தை அடைவதற்கு கண்காணித்தலில் தங்கியிருத் தலை குறைத்தல்

4. பாடசாலைக்கு உள்ளீடுகளை வழங்குவோருடன் விசுவாசமும் உண்மைத் தன்மையும் பேணப்பட வேண்டும் . இதனூடாக நீண்டகால அபிவிருத்தியை அடையலாம்.

5. ஒவ்வொரு செயற்பாடுகளையும் தொடர்ச்சியானதாக முன்னோக்கி நகர்த்துவது தொடர்பில் முன்னேற்றமடையும் போது தரத்தையும் வெளியீட்டையும் அதிகரிக்க முடியும். செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது இறுதியான ஆய்வு முடிவுகளையும் தந்திரோபாயங்களையும் மீள நெறிப்படுத்தப்படல் அவசியமானதாகும்.

கற்றல் முறைசார் கோட்பாடுகள் ஆபத்து விளிம்பிலுள்ளோருக்கான கல்வி வழங்கும் செயற்பாடுகளைப் பாடசாலையில் துரிதப்படுத்துதல் என்பன மீள் வடிவமைக்கப்பட வேண்டும். இதனூடாக அவர்களை வெற்றியடையச் செய்தல் வேண்டும். இதன் மூலம் சர்வதேச நியமங்களுக்கேற்ற அடைவு மட்டத்தை எல்லா மாணவர்களும் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முன்னர் அடைந்து கொள்வது உறுதிப்படுத்தப்படும்.

6. தொழில் தொடர்பான நிறுவனப் பயிற்சியும் கல்வியியலாளர்களுக்கு மூன்று புலங்களில் வழங்கப்பட வேண்டும்.

புதிய கற்றல் கற்பித்தல் செயலொழுங்குகள் தொடர்பானது , புதிய கணிப்பீட்டுத் தந்திரோபாயங்கள் தொடர்பானது, கல்வி முகாமையளர்களுக்கான புதிய முகாமைத்துவத் தந்திரோபாயங்கள்.

பாடசாலைகளில் இவை தொடர்ச்சியாக பாடசாலை நிர்வாகிகள் ஆசிரியர்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

7. பாடசாலையின் நிறுவனத் தலைமைத்துவமானது எல்லோருக்கும் கல்வி கிடைக்கச் செய்வதில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மொத்தக் கற்போரின் அடைவு இடைவெளியைக் குறைக்க முடியும் என்பதோடு கல்வியில் சமத்துவமேற்பட வாய்ப்புருவாகும்.

8. பிள்ளைகள் தம்மால் ஆற்றக்கூடிய உயர்ந்தபட்ச செயற்பாடுகளை மேற்கொள்ள வேண் டும் முன்னேற்ற முயற்சியானது செயற்பாடுகளாலும் ளியீடுகளாலும் குவியப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு தவறுகளுக்குத் தனியாள்கள் மீது பழி சுமத்துதல் கூடாது. தரம் இழக்கப்படுமானால் செயன்முறையிலேயே தவறுள்ளது. ஏன டேமிங் கூறுகிறார். முகாமைத்துவமானது தனது அங்கத்தவரின் வேலைச் செயன்முறையில் சிறப்பான முறையில் செயற்படுவதற்குத் தடையாகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. பாடசாலையில் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு ஆசிரியர்கள் நிதமும் பயமுடையவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் நிந்திக்கப்படலாம் என்ற அச்ச உணர்வேயாகும். எனவே பாடசாலைத் தலைவர்கள் தமது பணியா ளர்களின் பிரேரணைகளைப் பெறுமதியானதும் வெகுமதிக்குரியதாகவும் நோக்க வேண்டும்.

உலகமயமாதலானது பொருளாதாரம் கலாசாரம் தகவல் பரிமாற்றம் என்பவற்றில் சவால்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குவதாயுள்ள நிலையில், கல்வியிலும் பாடசாலைச் செயலொழுங்கிலும் மீள் பொறிமுறைகள் தோற்றுவிக்கப்படுதல் அவசியமாயுள்ளது.

மாற்றங்களை களநிலமைகளில் செயற்படுத்துபவராகவுள்ள ஆசிரியர்களின் செயலொழுங்கிலும் மாற்றங்கள் அவசியமானதாக மாறியுள்ளது. இந்த வகையில் ஆற்றலுள்ள திறனுள்ள ஆசிரிய வாண்மையாளர்கள் தோற்றுவிக்கப்படுதல் அவசியமானதாகும். இதற்காக அவர்களுக்கு தரமான முன்சேவைப் பயிற்சி வழங்குதல் ஆசிரியர் கல்வியைச் சிறப்பான வகையில் வழங்குதல் ஆசிரிய ஆளனி நகர்த்துகைகளைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளுதல் ஆசிரியர்கள் அவர்களது ஆற்றல்களையும் திறன்களையும் வாண்மைக்காலம் முழுவதும் தொடர்ச்சியான முறையில் பெறுவதை உறுதிப்படுத்துதல் அவர்களது அந்தஸ்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் ஆசிரியர்களை ஊக்குவிக்கத்தக்க வகையிலான சம்பளத் திட்டங்கள் வேலை நியமங்கள் சுயமாக இயங்கும் திறன் வகைகூறல் நிலமைகளை உருவாக்குதல் என்பன ஆசிரியரைப் பொறுத்தவரையில் அவசியமாயுள்ளது. இதுதவிரக் கல்வி முகாமையாளராக விளங்குவோரிடம் நேர்மனப்பாங்கு ஊக்கல் கொள்கைகளை களநிலமைகளுக்கேற்ப பிரயோகிக்கும் திறன் தந்திரோபாயத் திட்டமிடல் நுட்பங்கள் உயர் கல்வித் தகைமைகள் புதிய முகாமைத்தவ நுட்பங்களை உள்வாங்கும் திறன் ஒவ்வொரு நிலமைகளிலும் பொருத்தமான தரக் குறிகாட்டிகளை இனங்காணும் திறன் தமது விருப்பு வெறுப்பக்களுக்கு அப்பால் செயற்படக் கூடிய முகாமைத்தவப் பாங்குகளைக் கட்டியெழுப்புதல் என்பன தரமான கல்வி என்பதனை அடைவதற்கு அவசியமானதாயுள்ளது. இவற்றை நோக்கிய பார்வை புலம் ஆசிரியர்கள் அதிபர்கள் கல்வியியலாளர்கள் கல்வி நிர்வாகிகள் என்போரிடம் தோற்றுவிக்கப் படுவதனூடாகவே சமூகத்தின் தரமான வாழ்வுக்கவசியமான தரமான கல்வியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முற்றும். ✱

நடேசு தயாளனி, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

# எரிபொருள் விலைகள் உயர்வடையும் வாய்ப்பு

கொழும்பு, ஒக்.17

சில தினங்களுக்குள் எரிபொருள்களின் விலைகள் உயர்வடைய வாய்ப்புகள் உள்ளதாக அரசின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலத்தில் மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் அதிகரித்துச் சென்றதன் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெரியளவில் நிதி இழப்பொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குத்துமதிப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கணிப்பீடொன்றுக்கு அமைய, இந்த ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 50 மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்படக் கூடும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நிலைப்பாட்டின் மீது இவ்விதம் எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள்களின் விலை மட்டங்களை அதிகரிக்கும் போது பெற்றோல் லீற்றரொன்றுக்கான விலை கூடிய விகிதாசாரம் ஒன்றால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யின் விலை அதிகரிப்பு அதைவிடச் சற்றுக் குறைந்த மட்டத்தில் அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

# வடக்கு, கிழக்கில் விரைவில் 7 ஆடைத்தொழிற்சாலைகள்

கொழும்பு, ஒக்.17

வடக்குக் கிழக்கு பொருளாதார அபிவிருத்திச் செயற் திட்டத்தின் கீழ் ஏழு ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அச்சுவேலிப் பிரதேசங்களிலும் அதே போன்று கிழக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களிலும் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக கலாநிதி ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இவற்றுள் வவுனியாவில் ஒமேகா இன் ஆடைத்தொழிற்சாலை இத்தாலி நாட்டின் சர்வதேச முதலீட்டு நிறுவனம் ஒன்றால் நிர்மாணிக்கப்படவுள்ளது. அது இந்த ஆண்டு முடிவடையும் போது தனது உற்பத்திகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் அமையும் இந்தத் தொழிற்சாலையின் மூலம் மாத்திரம் ஆயிரம் வரையிலான புதிய வேலை வாய்ப்புக்கள் கிட்டும் எனவும் ஏனைய தொழிற்சாலைகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு, கிழக்கில் சுமார் 8 ஆயிரம் வரையிலான புதிய வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தத் தொழிற்சாலைகள் தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ம-22)

# கடமை நிறைவேற்று அதிபர்கள் போராட்டம் நடத்த முடிவு

வடமராட்சி, ஒக்.17

நாடெங்கிலும் உள்ள அரசினர் பாடசாலைகளில் கடமை நிறைவேற்றும் அதிபர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கொழும்பு பத்ரமுல்லையில் உள்ள கல்வியமைச்சின் முன்பாக எதிர்வரும் புதன்கிழமை மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக தமிழ், சிங்கள அதிபர்கள் 4 ஆயிரம் பேர் அரசினர் பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள்.

இவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு பல முறை கோரியும் கோரிக்கை நிறைவேற்றப்படாததால் இந்த மறியல் போராட்டத்துக்கு முடிவு செய்துள்ளதாக அகில இலங்கை கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ம-236-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து தலைநகரில் வரலாறு காணாத வெள்ளம்





பாங்கொக், ஒக். 17

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள இந்தியர்களுக்கு, இந்தியத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்லாந்தில், வரலாறு காணாத அளவிற்கு இந்தாண்டு பெய்த மழையால் பாங்கொக்கைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பாங்கொக்கின் மத்திய பகுதியும் வெள்ள அபாயத்திற்கு உட்பட்டுள்ளது.

உபரி வெள்ளம் வெளியேற வசதியாக கால்வாய்கள், போர்க்கால அடிப்படையில் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் மணல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள இந்தியத் தூதரகம், பாங்கொக்கில் சுற்றுலாவிற்கு வந்த இந்தியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,''இந்திய சுற்றுலாப்பயணிகள், சுற்றுலாவிற்குச் செல்லுமுன், அன்றைய நிலைவரத்தைத் தெரிந்து கொண்ட பின் செல்வது நல்லது. நகரின் தாழ்வான பகுதிகள் வெள்ள அபாயத்தில் உள்ளன. மத்திய, சுற்றுலா, வர்த்தக பகுதிகளுக்கு அபாயம் இல்லை. எனினும், அவை வெள்ளத்தில் மூழ்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பயணிகள் தங்கள் சுற்றுலா ஒருங்கிணைப்பாளர், ஹோட்டல்கள், வழிகாட்டிகள் ஆகியோர் மூலம் வெள்ள நிலைவரத்தைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும் எனவும் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

# உகண்டாவில் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்க இராணுவம்

ஆபிரிக்க நாடான உகண்டாவின் வடக்குப் பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக தீவிரவாதிகள் அட்டூழியம் செய்து வருகின்றனர். இதுவரை 30 ஆயிரம் பேரை கொன்று குவித்துள்ளனர்.

பெண்களைக் கடத்தி கற்பழித்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வருகின்றனர். சிறுவர்களைக் கடத்திச் சென்று அவர்களுக்கு தீவிரவாத பயிற்சி அளித்து வருகின்றனர். அவர்களை ஒடுக்கும் பணியில் உகண்டா இராணுவம் ஈடுபட்டுள்ளது. இருந்தும் அவர்களை அடக்க முடியவில்லை. எனவே, அமெரிக்காவின் உதவியை அந்த நாட்டு அரசு நாடியுள்ளது.

அதையேற்று அமெரிக்கா இராணுவச் சிப்பாய்கள் 100 பேரை உகண்டாவுக்கு அனுப்பவுள்ளது. இதுகுறித்து தகவல்களை அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் ஏமனில் 7 தீவிரவாதிகள் உயிரிழப்பு

ஏமன், ஒக்.17

ஏமனின் தென் பகுதியிலுள்ள ஷப்வா மாநிலத்திலுள்ள அல்-குவைதா தீவிரவாதிகள் முகாம்கள் மீது அமெரிக்க இராணுவம் ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் அல்-குவைதா தீவிரவாதிகள் 7 பேர் பலியானார்கள்.

2 வாரங்களுக்கு முன்னர் நடந்த ஏவுகணைத் தாக்குதலில் அல்-குவைதா தலைவரும், அமெரிக்காவில் பிறந்த மதகுருவுமான அன்வர் அல் அவ்லாகி பலியானார்.

சனிக்கிழமை நடந்த ஏவுகணைத் தாக்குதலில் அவ்லாகியின் 21 வயது புதல்வர் அப்துர் ரஹ்மான் பலியானார். அவரது உறவினர் ஒருவர் உட்பட 6 பேர் பலியானார்கள்.

# ஈரான் மீது குற்றச்சாட்டு: அமெரிக்கா மீது சந்தேகம்

வாஷிங்டன், ஒக். 17

சவூதி அரேபியத் தூதரைக் கொல்ல தீட்டப்பட்ட திட்டத்தின் அடிப்படையில், ஈரான் மத்திய வங்கி மீது தடைகளை விதிக்க,மேற்கத்திய நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. அதேநேரம், ஈரான் மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டு குறித்து அமெரிக்க அதிகாரிகள் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்கா, ஈரானின் மத்திய வங்கி மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கிறது. ஆனால், பலதரப்பு பொருளாதாரத் தடைகளை விதிப்பதில், மேற்கத்திய நாடுகளின் ஆதரவை அமெரிக்காவால் கடந்த 20 ஆண்டுகளாகப் பெறமுடியவில்லை.

ஈரான் மத்திய வங்கி, எண்ணெய் உற்பத்தித் துறை உள்ளிட்டவற்றில் முதலீடு செய்து வருகிறது. பலதரப்பு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால், ஒரு வெளிநாட்டு நிறுவனம், ஈரான் மத்திய வங்கியுடன் இணைந்து செயல்படுவதா அல்லது அமெரிக்காவுடன் செயல்படுவதா என முடிவெடுக்கவேண்டிய கட்டாயம் நேரிடும். அதாவது, வெளிநாட்டு நிறுவனங்கள், வங்கிகள் ஈரான் மத்திய வங்கியுடனான தொடர்பைத் துண்டிக்க நேரிடும்.

இதுகுறித்து, அமெரிக்க நிதித்துறை அதிகாரி, டேவிட் கோஹென் அளித்த பேட்டியில்,''ஈரான் மத்திய வங்கி மீது பலதரப்பு பொருளாதாரத் தடை விதிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். விரைவில் அதைச் செய்து முடிப்போம்'' என்றார்.

இதன் மூலம், மேற்கத்திய நாடுகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளமை தெளிவாகியுள்ளது. அதேநேரம், ஈரான் மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டு உள்நாட்டிலேயே பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் சிலர் இதுகுறித்து கூறுகையில்,''ஈரான் மீது மேலும் தடைகளை விதிக்க அமெரிக்கா மிகத் தீவிரமாக செயல்படுவது மக்கள் மத்தியில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. மேலும், ஏற்கனவே தடைகள் விதிக்கப்பட்ட அந்நாட்டின் மீது மேலும் தடைகள் விதிப்பது, சர்வதேச உறவுகளைச் சீர்குலைக்கும். இந்த நடவடிக்கைகள், ஒபாமாவின் அடுத்தாண்டு தேர்தலுக்காகவே நடத்தப்படுவதாக மக்கள் கருதுகின்றனர்'' எனத் தெரிவித்தனர்.

# சீனாவில் சாகச நிகழ்வில் போர் விமானங்கள் மோதல்

பீஜிங், ஒக். 17

சீனாவின் வடமேற்குப் பகுதியில் ஷான்சி மாகாணத்தில் புசெங் பகுதியிலுள்ள நெய்பூ விமான நிலையத்தில் போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சி நடந்தது. அப்போது பறக்கும் சிறுத்தை என்றழைக்கப்படும் ஜெ.எச்.7 ரக போர் விமானங்கள் நடுவானில் பறந்து சாகசத்தில் ஈடுபட்டன.

அப்போது விமானங்கள் ஒன்றையொன்று உரசியபடி பறந்ததால் மோதிக்கொண்டன. உடனே 2 விமானங்களிலிருந்த விமானிகள் பாராசூட்கள் மூலம் குதித்தனர். இதனால் அவர்கள் காயமின்றி உயிர் தப்பினர்.

அதே நேரத்தில் போர் விமானங்கள் கீழே விழுந்து நொறுங்கின. அதிலிருந்து கரும்புகை கிளம்பியது. இருந்தும் சாகச நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தது. சீனாவில் சாகச நிகழ்ச்சியின்போது இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இதுவரை நடந்ததில்லை.

எனவே, இது சீன விமானத் தயாரிப்பில் ஒரு பின்னடைவாகக் கருதப்படுகிறது. இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த நெய்பூ விமான நிலையத்துக்கு நிபுணர்கள் விரைந்தனர்.

# ஏவுகணை தாக்குதல்: பாகிஸ்தானில் ஐவர் பலி

பாகிஸ்தான் பழங்குடி இன மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியான தெற்கு வசிரிஸ்தான் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த காம்பவுண்டு மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் 4 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணைத் தாக்குதலில் 5 தீவிரவாதிகள் பலியானார்கள். இதில் மேலும் 5 பேர் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை அமெரிக்க உளவு விமானங்கள் வடக்கு, தெற்கு வசிரிஸ்தானில் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் 10 தீவிரவாதிகள் பலியானார்கள். அவர்களில் ஹக்கானி குழுவைச் சேர்ந்த ஜமீல் குறிப்பிடத்தக்கவர்.

இவர் ஹக்கானி இயக்கத் தலைவர் சிராஜுதின் ஹக்கானியின் சகோதரர் பத்ருதீனின் வலக்கரமாகச் செயல்பட்டவர் ஆவார். மறுநாள் வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதலில் 4 தீவிரவாதிகள் பலியானார்கள்.

# இடிந்து விழும் சீனப் பெருஞ்சுவர்

பீஜிங், ஒக். 17

சிறப்புவாய்ந்த சீனப் பெருஞ்சுவர் தற்போது இடிந்து வருகிறது. அதற்கு பல இடங்களில் அந்தச் சுவர் சேதமடைந்திருப்பதுதான் காரணமாகக் கருதப்படுகிறது. மோசமான தட்பவெப்ப நிலையும் இந்தச் சுவர் சேதமடைந்து வருவதற்கு மற்றொரு காரணமாகும்.

உலக அதிசயங்களில் ஒன்றாக சீனப் பெருஞ்சுவர் திகழ்கிறது. இது சீனாவில் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மிங் அரசர் காலத்தில் கட்டப்பட்டது. 5,500 மைல் நீளமுள்ள இந்த சுவர் சீனாவின் 11 மாகாணங்களை உள்ளடக்கியுள்ளது.

சீனா - ஜப்பான் நாடுகளுக்கிடையே நடந்த போரின்போது இது பல கட்ட தாக்குதலுக்கு உள்ளானது. அதேநேரத்தில் 1950 முதல் 1960ஆம் ஆண்டுகளில் சீனப் பெருஞ்சுவரிலிருந்த செங்கற்களை அப்பகுதி கிராம மக்கள் இடித்து கொள்ளையடித்தனர். அவற்றை அதிக விலைக்கு விற்றனர். இதனாலும் சுவர் சேதமடைந்தது.

அவை தவிர, சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்ட பகுதியில் தங்கம், இரும்பு போன்ற உலோகத் தாதுக்கள் இருக்கின்றன எனக் கருதப்படுகிறது. எனவே, அங்கு நிலத்தைத் தோண்டும் பணியில் சிலர் திருட்டுத்தனமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்தக் காரணத்தினாலும் பெருஞ்சுவர் இடிந்து வருகிறது.

# வேலைவாய்ப்புக் கோரி ரோமில் பேரணி, வன்முறை, தீவைப்பு

ரோம், ஒக். 17

வேலைவாய்ப்புக் கோரி இத்தாலியின் தலைநகரான ரோமில் நடந்த பேரணியில் வன்முறை வெடித்தது. பேரணியில் பங்கேற்றவர்கள் சாலைகளில் சென்றவர்கள் மீது கல்வீசி தாக்கினார்கள். கடைகளையும், வங்கிகளையும் அடித்து நொறுக்கினார்கள். வாகனங்களை தீவைத்து கொளுத்தினார்கள்.

வன்முறைச் சம்பவத்தில் 70 பேர் காயமடைந்தனர். இதனால் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன. பொலிஸார் குவிக்கப்பட்டனர். வன்முறையை அடக்க பொலிஸார் கடுமையாகப் போராடினர்.

லண்டனில் நடந்த பேரணியில் 'விக்கிலீக்ஸ்' தலைவர் ஜூலியன் அசாங்கே கலந்து கொண்டு பேசினார். இந்தப் போராட்டம் அமெரிக்காவில் வலுத்து வருகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி முதல் நியூயோர்க்கில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. சனிக்கிழமை டைம் சதுக்கத்தில் கூடி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். இதைத்தொடர்ந்து 45 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

உலக நாடுகளில் சில நிறுவனங்களின் ஆதிக்கப் போக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. மேலும் அரசுகளும் செலவுகளைக் குறைப்பதற்காக மக்களுக்கு வழங்கிவரும் சலுகைகளை நிறுத்தி வருகின்றன. இதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பதாகக் கூறி கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இந்தப் போராட்டம் மெல்ல மெல்ல பரவி தற்போது பெரும்பாலான நாடுகளை ஆக்கிரமித்துள்ளது. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா கண்டங்களிலுள்ள 82 நாடுகளில் இப்போராட்டம் பரவியுள்ளது. ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் கடந்த மே 15ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பமாகியது.

அதைத்தொடர்ந்து இத்தாலி தலைநகர் ரோம், லண்டன், சூரிச், சியோல், சிட்னி, டோக்கியோ, ஹொங் கொங், புகாரஸ்ட் உள்ளிட்ட 951 நகரங்களிலும் பேரணி நடந்தது. இந்த நகரங்களில் நடந்த பேரணிகளிலும், ஆர்ப்பாட்டத்திலும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 நவோதயா பாடசாலைகள் பங்குபற்றிய

# விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று யாழ். துரையப்பா மைதானத்தில்!



யாழ்ப்பாணம், ஒக்.17

வடமாகாணத்தைச் சேர்ந்த 23 நவோதயா பாடசாலைகள் விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று நண்பகல் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வடமாகாண நவோதயா பாடசாலைகளின் இணைப்பாளர் கே.செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஷ்ணன், வடமாகாண கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மணிமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் நானாட்டான் மகா வித்தியாலயம் 35 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் அரிப்பு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை 32 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் கல்மடு மகா வித்தியாலயம் 14 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 54 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் கல்மடு மகா வித்தியாலயம் 34 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மன்னார் சென்.ஜேசவாஸ் மகா வித்தியாலயம் 10 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது. (எ-23)

# உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றது நவிண்டில் கலைமதி வி.க.

வடமராட்சி, ஒக.17

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 11 பேர் கொண்ட இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த மோதலில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் எந்தவிதமான கோல்களையும் போடவில்லை. கலைமதி விளையாட்டுக்கழகம் 5 கோல்களைப் போட்டு அசத்தலான வெற்றியைப் பெற்றது.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் சக்கோட்டை சென்ஸ் சேவியர் விளையாட்டுக்கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் விரைவில் மோதவுள்ளன. இந்த மோதலில் வெற்றிபெறும் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (எ-313-236)

யாழ். அரச அதிபர் கிண்ணத்துக்கான

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பி.செ., யாழ்ப்பாண மா.செ.



யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் செயலக நலன்புரி சங்கம் முதற் தடவையாக அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியும் நலன்புரி சங்கத்தின் விளையாட்டுத்துறை செயலரும் திருமதி ஜே.எவ்.ஏ. றூபசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் உதவி அரச அதிபர் தலைமைப்பீட யாழ். மாவட்ட செயலக நலன் புரி சங்கத்தின் தலைவருமான ய.பரந்தாமன், செயலாளர் பா.ரமேஸ் கலந்துகொண்டனர்.

முதலாவது அரை இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 10:06 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய அரை இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட செயலக அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணி 21:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (எ-23-86)

# 16 வயது பிரிவு உதைபந்தாட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு ஒக்.17

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு கல்லூரிகளும் சளைக்காது விளையாடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு கல்லூரிகளும் கோல் பெற முயற்சித்த போதிலும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி முதலாவது கோலைப் பெற்று முன்னிலைப்படுத்திய நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்த நிலையில் இரு அணிகளும் கிடைத்த வெற்றியை தக்கவைப்பதிலும் வெற்றியைப் பெறவேண்டும் என்ற துடிப்புடனும் களமிறங்கி மோதின.

மானிப்பாய் இந்துக் கல்லூரி கோல் பெற சளைக்காது போராடிய போதும் புனித ஹென்றியரசர் கல்லூரி மீண்டும் ஒரு கோலைப் பெற்று ஓரளவு வெற்றியை உறுதிப்படுத்திய நிலையில் மோதிக் கொண்டது.

ஆட்ட நிறைவில் புனித ஹென்றியரசர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வென்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (எ- 86)

# 16,18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.17

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மனோகரா விளையாட்டுக்கழக மைதானங்களில் இடம்பெறவுள்ளது. (எ-23)



யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரச அதிபர் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் ஒன்றில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் யாழ்.மாவட்ட செயலக அணியும் மோதிக் கொள்ளும் காட்சி. (எ-23)

137 ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு

# வடமாகாண அஞ்சல் திணைக்களங்களுக்கு இடையிலான விளையாட்டு நேற்று இடம்பெற்றது

கொழும்புத்துறை, ஒக்.17

சர்வதேச 137 ஆவது அஞ்சல் தினத்தையொட்டி வடமாகாண அஞ்சல் திணைக்களங்களுக்கு இடையிலான மாபெரும் விளையாட்டு விழா நேற்று அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் வடபிராந்திய பிரதி அஞ்சல் அலுவலக நாயகம் என்.இரத்தின சிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அஞ்சல் திணைக்கள அணியினருக்கிடையிலான துடுப்பாட்ட, உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை வடபிராந்திய பிரதி அஞ்சல் அலுவலக நாயகம் என்.இரத்தினசிங்கம்



மங்கள விளக்கேற்றி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அஞ்சல் அலுவலக அத்தியட்சகர் ஐ.சின்னப்பு, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் க.புஸ்பநாதன், யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், யாழ்.பிரதம தபால் அதிபர் ஏ.தர்மராஜா, யாழ். பிரதி பிரதம தபால் அதிபர் ஏ.லோகஞானம், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி வைத்தனர். (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான இரண்டாவது 'ரி - 20' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. தென்னாபிரிக்காவின் தெரோன் சகல துறைகளிலும் கலக்க, இறுதியில் ரிம் பார்னெல் துடுப்பாட்டத்தில் அசத்த இந்த வெற்றியை தென்னாபிரிக்கா பதிவு செய்தது. இதன் மூலம் இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடர் 1-1 என்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி நேற்று ஜொகர்னஸ்பேர்கில் இடம்பெற்ற இரண்டாவது 'ரி - 20' ஆட்டத்தில் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. ஆஸ்திரேலிய அணியில் காயம் காரணமாக வொட்ஸன் இடம்பெறவில்லை.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத்திலிருந்து தடுமாறிய போதும் பின்வரிசையில் களமிறங்கிய மிர்செல் மார்ஷின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

வோர்னர், வேட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். 3 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆஸி. முதலாவது இலக்கை இழந்தது. வோர்னர் 9 பந்துகளைச் சந்தித்து ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சீரான இடைவெளியில் ஆஸி.யின் இலக்குகள் வீழ்ந்த வண்ணமேயிருந்தன. மத்திய வரிசையில் களமிறங்கிய அணித்தலைவர் கம்ரான் வைட் மாத்திரம் 26 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். 16.4 பந்து பரிமாற்றங்களில் 106 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வைட் 6 ஆவது இலக்காக வீழ்த்தப்பட்டார். அதன் பின்னர் இறுதிக் கட்டத்தில் அதிரடியாக ஆடிய மிர்செல் மார்ஷ் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிரடியாக உயர்த்தினார். இறுதி இரு பந்து பரிமாற்றங்களிலும் 34 ஓட்டங்கள் பெறப்பட்டது. மிர்செல் மார்ஷ் 21 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 36 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ரொஸ் ரோபே, மோர்கல், தெரோன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு சுலபமான இலக்கை விரட்டத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்திலிருந்து தடுமாறியது. முதல் மூன்று இலக்குகளும் 18 ஓட்டங்களுக்கு இழக்கப்பட்டது. ஆட்டத்தின் நான்காவது பந்து பரிமாற்றத்தை வீசிய குமின்ஸ் கடந்த ஆட்டத்தில் கலக்கிய இங்கிராம், டுமினி இருவரையும் ஆட்டமிழக்கச் செய்து தென்னாபிரிக்காவை திணறடித்தார். முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஸிமித் மட்டும் 24 ஓட்டங்கள் பெற்றார். மத்திய வரிசையில் களமிறங்கிய போத்தா அதிரடியாக ஆடி அணியின் நிலையை ஸ்திரப்படுத்த முயன்றார். 28 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போத்தாவும் ஆட்டமிழந்தார். தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் 14.4 பந்து பரிமாற்றங்களில் 84 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது. தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருந்த தென்னாபிரிக்க அணியை பின்வரிசை வீரர்களான பார்னெல், தெரோன் மீட்டெடுத்தனர்.

இருவரது அதிரடியில் தென்னாபிரிக்காவின் வெற்றி உறுதியானது. ஆஸ்திரேலிய அணி களத்தடுப்பு மற்றும் பந்து வீயூகம் என்பவற்றை மாற்றியமைத்த போதும் தென்னாபிரிக்காவின் வெற்றியை தடுக்க முடியவில்லை. இறுதி 5 பரிமாற்றங்களில் இலக்கு இழப்பேதுமின்றி 61 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 8 ஆவது இலக்குக்காக 22 பந்துகளில் 50 ஓட்டங்கள் எட்டப்பட்டது. இறுதியில் 19.1 பந்து பரிமாற்றங்களிலேயே 7 இலக்குகளை மாத்திரம் இழந்து தென்னாபிரிக்கா 148 ஓட்டங்களைப் பெற்றது.

பார்னெல் 11 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 29 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். தெரோன் 16 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 30 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் குமின்ஸ், பர்ரின்ஸன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக தெரோன் தெரிவானார். (15)



# அரையிறுதியில் ஆஸ்திரேலியா



ஜப்பான் ஓபன் ரெனிஸ் போட்டியில் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர். சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் சானிலியை 6-2,6-3 என்ற செட் கணக்கில் அவர் வென்றார்.

சர்வதேச ரெனிஸ் தரவரிசையில் இப்போது 6 ஆவது இடத்தில் இருக்கும் சமந்தா, அரையிறுதியில் பெட்ரோவா அல்லது ஜிகியாங்கை எதிர் கொள்வார். இந்த இருவர் இடையிலான காலிறுதிப் போட்டி மழையால் பாதியிலேயே தடைபட்டது.

பிரான்ஸ் வீராங்கனை மரியன் பர்தோலியும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். அவர் ஜப்பானின் அயுமியை 6-2,6-1 என்ற செட்கணக்கில் வென்றார். ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக்கை அவர் அரையிறுதியில் எதிர்கொள்கிறார். (15)

# தோல்வியால் துவளவில்லை



'இதுக்கெல்லாம் அசருவோமா?'

இனி வரும் போட்டியில் எழுச்சி பெற்று வெற்றிப் பாதைக்கு திரும்புவோம், என்று இங்கிலாந்து அணி தலைவர் குக் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடர் இந்தியாவில் நடந்து வருகிறது. இதன் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

இது தொடர்பாக அணித்தலைவர் குக் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்து வீச்சு என்று மூன்றிலும் நாங்கள் சிறப்பாக செயல்படவில்லை. வீரர்கள் வழக்கத்திற்கு மாறாக களத்தடுப்பில் சொதப்பியதால், இந்திய அணி 300 ஓட்டங்களை எடுத்தது. இது மீண்டும் தொடராது, விரைவில் எழுச்சி பெற்று வெற்றிப் பாதைக்கு திரும்ப முடியும். இந்த ஒரு தோல்வியால் தன்னம்பிக்கையை நாங்கள் இழக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வெல்வது முக்கியமான ஒன்று. அதனை இழந்துவிட்டோம். முதல் ஆட்டத்திலிருந்து சில பாடங்களை கற்றுக் கொண்டோம். சுழலுக்கு எதிராக எப்படி செயல்பட வேண்டும் என்று தெரியாமல் வீரர்கள் திணறினர். இதுவே தோல்விக்கு வழி வகுத்தது. அடுத்த ஆட்டத்துக்காக கடின பயிற்சி மேற்கொண்டு வருகிறோம். சுழலுக்கு எதிராக எப்படி செயல்பட வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு சாதிப்போம் - என்றார். (15)

# மீண்டார் சச்சின்

## தொடங்கினார் பயிற்சியை



காயம் காரணமாக ஓய்வில் இருந்த சச்சின், நேற்று முன் தினம் மும்பையில் துடுப்பாட்ட பயிற்சியை தொடங்கினார்.

இங்கிலாந்து சென்ற இந்திய அணியில் இடம் பெற்றவர் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின். ஒரு நாள் தொடர் தொடங்க இருந்த நேரத்தில், ஏற்கனவே சத்திரசிகிச்சை செய்திருந்த இவரது கால் பெருவிரலில், லேசாக வீக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து வீக்கமும், வலியும் அதிகரித்ததால், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்காமல் நாடு திரும்பினார்.

இது குறித்து லண்டனில் உள்ள, வைத்தியர் ஜேம்ஸ் கால்டரை சந்தித்தார். அவரது ஆலோசனையில் பேரில், சச்சினுக்கு என்று 'ஸ்பெஷலாக' வடிவமைக்கப்பட்ட சப்பாத்து அணிந்து வந்தார்.

சமீபத்தில் முடிந்த சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரில், மும்பை இந்தியன்ஸ் அணிக்காக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், மும்பை அணிக்கு ஹர்பஜன் சிங் தலைமை ஏற்று, கிண்ணத்தை வென்று கொடுத்தார். ஆட்டங்களில் பங்கேற்கவில்லை என்ற போதிலும், சச்சின் தனது அணியினருடன் சென்று, வீரர்களை உற்சாகப்படுத்தினார்.

காயம் காரணமாக, இங்கிலாந்து அணிக்கு எதிராக தற்போது நடக்கும் ஒருநாள் தொடரில், முதல் இரு ஆட்டங்களுக்கான அணியிலும் சச்சின் தேர்வு செய்யப்படவில்லை. இதனிடையே, நேற்று முன்தினம் மும்பையில் உள்ள மைதானத்தில் சச்சின், துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டார்.

இதையடுத்து சச்சின், எதிர்வரும் மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடருக்கு அணிக்கு திரும்பி விடுவார் என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, சேவக்கும் வர [illegible] பயிற்சிக்கு திரும்பியது, இந்திய [illegible] மகிழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சண்முகம் சந்திரன்
(சிறந்த கிராம சேவையாளர்)
பிரமந்தனாறு –KN/58



திருமதி
விஜயகுமாரி சந்திரன்
(சிறந்த ஆசிரியர்)
கிளி/பிரமந்தனாறு ம.வி.



சந்திரன் சதுர்சிகன்
(சிறந்த மாணவன்)
கிளி/பிரமந்தனாறு ம.வி.

2010 ஆம் ஆண்டின் கிராம சேவையாளர்களுக்கிடையிலான முகாமைத்துவத் திறன் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற எமது பிரமந்தனாறு (KN/58) கிராம அலுவலர் திரு.ச.சந்திரன் அவர்களையும், கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் சிறந்த ஆசிரியருக்கான 'பிரதீபா பிரபா விருது-2011' இனைப் பெற்ற அவரது பாரியாரான கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலய ஆசிரியை திருமதி விஜயகுமாரி சந்திரன் அவர்களையும், இந்த வருட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுசித்தியெய்திய இவர்களது புதல்வன் செல்வன் சதுர்சிகன் அவர்களையும் பாராட்டி அகமகிழ்வதுடன், எமது பிரதேசத்தில் சமூகம்சார் செயற்பாடுகளில் முன்னோடியாகத் திகழும் கிராமசேவையாளர் திரு.சந்திரன் அவர்கள் மேன்மேலும் சிறந்த சேவைகளையாற்றி தன் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம்வாழ எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
கண்டாவளை, கிளிநொச்சி.

உதவி அரசாங்க அதிபரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
19.01.1934

ஆண்டவன் அடியில்
28.09.2010

அமரர்

### பொன்னையா முத்துலிங்கசாமி

திதி: புரட்டாதி மாத பஞ்சமி (17.10.2011)

கண்ணை இமை காத்தது போல் காத்த அப்பாவே
காலம் ஒன்று கழிந்தாலும் கழியவில்லை நம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அப்பாவே
அழியாத தங்கள் அன்பிற்கு இணையாகுமா?

என்றென்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

சிந்துபுரம்,
வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை-கனகம்மா



நாவலர் மடம், திடல்வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகம்மா 15.10.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கார்த்திகேசு- கதிராசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தவனம் சின்னத்துரையின் அன்பு மனைவியும் கந்தசாமியின் (லண்டன்) அன்புச் சகோதரியும், ஜெயந்தி (லண்டன்) சுகந்தி, சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரன் (லண்டன்), ஆனந்தராஜா (C.E.B), நவநீதா (லண்டன்) ,லக்கியா(லண்டன்) ,மயூரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் யர்சிகா (லண்டன்), பிருந்தன்(லண்டன்) , விஜிதரன் (லண்டன்) சிவன்யா, அஞ்சலா(லண்டன்), ஆர்த்தி (லண்டன்), ஆதித் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கந்தசாமி, செல்வராணி(லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திடல் வளவு
நாவலர் மடம்,
நவிண்டில்.

தகவல்:
குடும்பத்தினர்

## பாதாள...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுகையில் பாரத லக்ஷமன் நாடாளுமன்றில் தனது கன்னி உரையை நிகழ்த்தியபோது கொலைகளுக்கும் போதைவஸ்துக் கடத்தலுக்கும் காரணமாய் இருப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றார் . அவரைப் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. ஒரு பெருமூச்சு மட்டுமே என்னால் இப்போது விடமுடியும் என்றார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொது செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியது:- இந்த மோசமடைந்துவரும்அரசியல்கலாசாரத்துக்கு நாம் முடிவு கட்ட வேண்டும்.

பாரதவைக் கொன்றவர்களுக்கு எதிராக சட்டங்களும் சமூக நீதியும்செயல்படுத்தப்படவேண்டும் என்றார்.

கோட்டே ஸ்ரீ நாகவிகாரையின் பிரதம குருவான வண.முதுலுவாவே கோபித்த தேரர் கூறுகையில், பாரதவின் மரணம் விருப்பு வாக்கின் உச்சகட்டமாகும். இது முடிவுபெற வேண்டும். கொலன்னாவையில் இப்போது 570 இற்கும் அதிகமான போதைவஸ்து நிலையங்கள் உள்ளன. அப்பகுதிக்கு வெளிநாட்டிலிருந்து விலைமாதுக்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர். போதைவஸ்து விற்பனையை பாரத தமது கடைசிப் பேச்சிலும் கூடக் கண்டித்திருந்தார் என்றார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலளார் டி.ஈ.டபிள்யு குணசேகர (சிரேஷ்ட அமைச்சர்) கருத்து வெளியிடுகையில் இது மேலும் ஒரு படுகொலை என்ற வகையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரே கட்சியைச் சேர்ந்த இரு நபர்களுக்கிடையில் இருந்துவந்த நீண்ட கால கருத்துமோதல் மட்டுமல்ல, விருப்பு வாக்குகளுக்கான மோதல் காரணமான கொலையுமல்ல, தலைமறைவு கேடிகள் - கறுப்பு பணத்தினால் தம்மை வளப்படுத்திக் கொண்டவர்கள் அரசியல் முறைமைக்குள் கொண்டுவரப்பட்டிருப் பதே காரணம். இந்த விடயத்தில் சட்டம் முழுமையாக செயல்படுத்தப் படவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

லங்கா சம சமாசக்கட்சியின் பிரமுகரும் சிரேஷ் அமைச்சர்களில் ஒருவருமான திஸ்ஸவிதாரண விடுத்துள்ள அறிக்கையில், தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தார். எப்பொழுதும் இடதுசாரி கருத்துக்களையே வெளியிட்டு வந்தார் என்றார். ஜனநாயக இடது சாரி முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார பத்திரிகையாளர் மகாநாடொன்றில்பேசுகையில், பாரதவின் கொலை தனிப்பட்ட குரோதங்களினால் நடைபெற்றுள்ளது. வன்செயல்களுக்கும் இனவாதக் கொள் கைகளுக்கும் எதிராக போராடி வந்தவர் அவர்என்றுகூறினார்.

## பதவியேற்பும் பாராட்டுதலும்



இலங்கை போக்குவரத்துச் சபைத்
தலைவரினால் பருத்தித்துறை
சாலைக்கு சேவையின் அவசியம் கருதி
உதவி செயலாற்று முகாமையாளராகக்
கடமையாற்றிவந்த

### திரு. கந்தப்பு கந்தசாமி

புதிய சாலை முகாமையாளராக 2011-10-12 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார். இவரின் பதவி மேன்மேலும் உயர வேண்டும் என்றும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நன்மை கருதி சிறப்பான சேவையை ஆற்றவேண்டும் என்றும் சபையின் ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கு சிறந்த சாலை முகாமையாளராக விளங்க வேண்டும் என்றும் எல்லாம் வல்ல "ஞானவைரவரின்" அருளை வேண்டி என மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
**சாலையின் அனைத்து ஊழியர்களும்,**
**இ.போ.சபை (வட) பருத்தித்துறை சாலை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
பவானி செல்வநாயகம்
யா/நவக்கிரி அமெரிக்கன் மிஷன்
தமிழ்கலவன் பாடசாலை

எமது பாடசாலையின் பெருமதிப்புக்குரிய ஆசிரியை திருமதி. பவானி செல்வநாயகம் அவர்கள் சிறந்த ஆசிரியையாகத் தெரிவு செய்யப்பட்டு அலரி மாளிகையில் ஜனாதிபதியிடம் "பிரதீபா பிரபா" கௌரவ விருதினைப் பெற்றதனைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் சேவையாற்ற இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/நவக்கிரி அமெரிக்கன் மிஷன்**
**தமிழ்க் கலவன் பாடசாலை.**

புத்தூர்.

## கண்ணீர் அஞ்சலி



கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
குமாரசாமி
சிவானந்தன்

நேற்று (16.10.2011) ஞாயிற்றுக் கிழமை நாம் எதிர்பாராமல் நேற்று வரை எம்முடன் கூடி இருந்து எமக்கு சொல்லாது திடீரென்று மறைந்து விட்டீர். உமது பிரிவை தாங்க முடியவில்லை. உமது பிரிவால் துயர் உற்று இருக்கும் அனைத்து உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அலெக்ஸ் வைன் சொப்**
**உரிமையாளரும் ,**
**ஊழியர்களும்.**

161, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர்

### கதிரவேலு சுப்பிரமணியம்

கடந்த 17.09.2011 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாக எம்மோடு துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் எமக்கு உதவிக்கரம் நீட்டிய அன்புக் கரங்களுக்கும் எம் இதய நன்றிகள்.

அத்துடன் இன்று (17.10.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 44
மானிப்பாய் றோட், ஆசாத் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
சுதர்சன் (மகன்)
மிலேனியம் பசன் & பம்பே பஜார் ஊழியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க நீதிமன்றின் அழைப்பாணை எப்படி வாந்தாலும் அரசு பதிலளிக்காது

கொழும்பு, ஒக்.17

**கொழும்பு திட்டவட்டம்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளூர் ஊடகங்கள் மூலம் அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டாலும் கூட அதற்குப் பதில் அளிக்கப்படாது என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன.

படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களான மூன்று தமிழர்கள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் நட்டஈடு கோரும் வழக்கு ஒன்றை சட்டவாளர் புரூஸ் பெய்ன் ஊடாகத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் ஜனாதிபதி மஹிந்தவைப் பதிலளிக்கக் கோரும் அழைப்பாணை அலரி மாளிகைக்கு அனுப்பப்பட்டபோதும் அதனை ஏற்க அங்குள்ள அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

அமெரிக்கச் சட்டத்தின் படி, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பாணை குறித்து அறிந்திருக்க வேண்டும்.

இதனால், இலங்கையில் உள்ள இரண்டு ஊடகங்கள் மற்றும் தமிழ்நெற் இணையத்தளம் ஆகியவற்றின் மூலம் அழைப்பாணையை வெளியிட அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இந்தநிலையிலேயே, அமெரிக்க நீதிமன்றத்தின் அழைப்பாணை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடப்பட்டாலும் கூட, அதற்குப் பதில் அளிக்கப்படாது என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

வலுவான காரணமின்றி அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கும் போது அதற்கு இலங்கை ஜனாதிபதி பதிலளிக்க வேண்டியதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அதுவேளை, முன்னாள் சட்டமா அதிபரும் இலங்கை அமைச்சரவையின் மூத்த சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ், இலங்கை ஜனாதிபதிக்கு இராஜதந்திர விதிவிலக்கு இருப்பதால், அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணை உள்ளூர் ஊடகங்களில் வெளியிடப்பட்டாலும் கூட அதற்குப் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது இலங்கையின் சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸ், இலங்கை ஜனாதிபதியின் செயலகத்துக்கோ அல்லது வதிவிடத்துக்கோ எந்தவொரு அழைப்பாணையும் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

# கொழும்பில் வெளிநாட்டு மருத்துவர்கள் துமிந்த சில்வாவுக்கு சிகிச்சை அளிப்பு

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து, ஸ்ரீஜயவர்தனபுர வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் உடல் நிலையை கொழும்பு வந்திருக்கும் வெளிநாட்டு வைத்தியர்கள் இருவர் பரிசோதனை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் உறவினர்களின் வேண்டுகோளின் பேரில் சிங்கப்பூரில் உள்ள பிரசித்திபெற்ற வைத்தியசாலை ஒன்றின் வைத்தியர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு வந்துள்ளார். அத்துடன், லண்டனில் பிரசித்திபெற்ற வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் நேற்று கொழும்பு வந்திருக்கிறார்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர், உட னடியாகக் கஜேந்திரனின் வாகனத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அரசியல்வாதிகள் வைத் தியசாலைக்குச் சென்று தவபாலசிங்கத்திடம் நலன் விசாரித்தனர்.

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டு வந்த 18ஆவது திருத்தம் இல்லாமல் செய்து விட்டது. இதனால் இந்த மூன்று துறைகளும் மேலும் மேலும் அரசியல் மயப்பட்டுப் போயுள்ளது என்று பரவலான குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பின் "இத்தகைய அரக்கத்தனமான பகுதியை நீக்குவதற்கான போராட்டத்தை நாடாளுமன்றத்தில் நாம் ஆரம்பிப்போம். பின்னர் அதனை மக்களிடம் எடுத்துச் செல்வோம். 18ஆவது திருத்தத்தை அகற்றும்வரை அது தொடரும்" என்றார் ரணில்.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மூலம் இந்த மூன்று ஆணைக் குழுக்களையும் உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்படிப் பாடுபட்டது என்பதையும் ரணில் விக்கிரமசிங்க விளக்கினார். சுயாதீனமான, சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு மட்டுமே தவறியிருந்தது எனவும் அவர் கூறினார். அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க அந்த ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கு உடன்படாததன் காரணத்தாலேயே அந்தத் தோல்வியும் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் துறை உள்ளிட்ட இலங்கை அரச நிர்வாகத் துறைகள் பலவற்றில் சுயாதீனத்தன்மை இல்லை என்று, ஐ.நா. பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்த விடயத்தைத் தான் அப்படியே ஏற்றுக்கொள்கிறார் என்றும் அவர் கூறினார். (உ)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரமேஷின் மனைவி, சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க தென்மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து அவருக்கான அழைப்பாணை சவேந்திர சில்வாவின் தனிப்பட்ட வீட்டில் சேர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சவேந்திர சில்வாவுக்கு இராஜதந்திரி அந்தஸ்தை வழங்கியது.

இதனையடுத்து இராஜாங்க திணைக்களத்தின் இராஜதந்திர தன்மைக்கான அறிக்கையையும் இணைத்து சவேந்திர சில்வாவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் எதிர்மனுவை கடந்த வாரம் தாக்கல் செய்துள்ளனர். (உ-சி)

## தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச சமூகத்திற்குக் கதைசொல்லும் அரசு இந்தத் தாக்குதலுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார். இத்தகைய சம்பவங்கள் இனித் தொடரக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். (உ)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்ட ஐக்கிய தேசியக் கட்சி 24 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 16 உறுப்பினர்களையும், ஜனநாயக மக்கள் முன்னணி 6 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 உறுப்பினர்களையும், ஜனநாயக ஐக்கிய முன்னணி 2 உறுப்பினர்களையும், ஜே.வி.பி. ஓர் உறுப்பினரையும், இரண்டு சுயேச்சைக் குழுக்கள் தலா ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளன.

இதன்படி எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 29 ஆக இருப்பதால் மாநகர சபையில் எதிர்க்கட்சி அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என அரசாங்கம் விரும்புவதாகத் தெரிகிறது.

இந்த விடயம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உத்தியோக பற்றற்ற ரீதியில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், கொழும்பு மாநகரசபை கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது இந்த விடயத்தை வலியுறுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகரசபை வரலாற்றில் இதுகாலவரை எதிர்க்கட்சி அலுவலகம் ஒன்று இல்லாத நிலையில் புதிதாக ஒன்றை அமைக்க அனுமதி வழங்குவதில்லை என்று ஐ.தே.க உள்ளூர தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது.

இதனால் எதிர்க்கட்சி அலுவலக விவகாரத்தினால் மத்திய அரசுக்கும், மாநகர நிர்வாகத்துக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்படடும் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்வு கூறுகின்றன.

இந்த விவகாரம் குறித்து கொழும்பு மாநகர முதல்வராகப் பதவியேற்கவுள்ள ஏ.ஜே.எம். முஸம்மிலிடம் நாம் கேட்டோம்.

"கொழும்பு மாநகரசபை சட்டத்திட்டங்களின் அடிப்படையிலேயே எம்மால் செயற்பட முடியும். இதனை அரசாங்கம் நன்கு அறியும். அரசோ, ஜனாதிபதியோ கூறுகிறார்கள் என்பதற்காக எம்மால் புதிதாக எதையும் புகுத்த முடியாது. மாநகர சபை சட்டத்தின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற ஒன்று கிடையாது. முதல்வருக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக தான்தோன்றித்தனமாக என்னால் சட்டத்தை மீறி செயற்படவும் முடியாது."- என்றார். (உ-சி)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை உடன் நிறுத்துக.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் லட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் காணி, வீடு அற்று நிர்க்கதியான நிலையில் தவிக்கும் இவ்வேளையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவக் குடியேற்றங்கள் மற்றும் பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றங்கள் ஊடாக இன ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துக.

ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய கட்சிகள் அண்மையில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்திலேயே அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளும் முடிவை எடுத்தன.

இன்று நடைபெறும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியும் கலந்துகொள்கின்றது.

கொழும்பில் இருந்து வவுனியா செல்லும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குருபரன் உட்படக் கட்சி முக்கிய நபர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வர். (சி)


## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சிவபாதசுந்தரம் சத்தியசீலன்
(உதவி அரசாங்க அதிபர்- கண்டாவளை)
B.B.A(Hons), Dip. in.Pub.Ad, M.A.in Pub. Ad(Merit)



06.10.2011 திகதி அன்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகத்தின் 27ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (பொது நிர்வாகம்- விசேட சித்தி) பட்டத்தைப் பெற்ற எமது உதவி அரசாங்க அதிபர் திரு.சிவபாதசுந்தரம் சத்தியசீலன் அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று உன்னத சேவையாற்றி பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

அலுவலக உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரி சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கண்டாவளை, கிளிநொச்சி.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் பேனாட் கொலின்
அவர்களின் தந்தை
மரியாம்பிள்ளை எட்வின் யோசப்
16.10.2011 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பல்கலைக்கழக நண்பர்கள்.
(Jameson Street) ஐக்கிய இராச்சியம்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவானந்தன்



அளவெட்டி வடக்கு, கூத்தன் சீமாவைப் பிறப்பிடமாகவும், 245, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவானந்தன் நேற்று (16.10.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி நல்லம்மா தம்பதியரின் மகனும், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகையா- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், மேனகா, கார்த்திகேயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனிகாந்தின் மாமனும், அஸ்வினியின் பேரனும், காலஞ்சென்றவர்களான வரதாம்பிகை, திலகவதி மற்றும் குகானந்தன், வடிவாம்பிகை, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருபாகரன், நகுலேஸ்வரன், மகேஸ்வரன், கெங்காதரன், புரந்தரன், அனந்தலக்சுமி, இராசலக்சுமி, இராஜராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

245, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
குகானந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொழும்பில் 60ஆயிரம் வாக்குகள்' என்ற இலக்கு நோக்கி நகரத் தயாராகின்றோம்

## ஜனநாயக மக்கள் முன்னணி அறிவிப்பு

கொழும்பு, ஒக்.17

தேர்தலில் தமிழ் மக்கள் அளித்துள்ள ஆணையை மேலும் பலப்படுத்தும் வகையில், கட்சியில் உடனடி மறுசீரமைப்பைச் செய்து, புதிய அமைப்பாளர்களை நியமித்து 'கொழும்பு மாவட்டத்தில் 60 ஆயிரம் வாக்குகள்' என்ற இலக்கை நோக்கி நகரத் திட்டமிட்டு வருவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தின் நிலவரம் குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

கொழும்பு மாநகரசபை, தெஹிவளை-கல்கிஸை மாநகரசபை, கொலன்னாவை நகரசபை ஆகிய கொழும்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களிலே நமது கட்சியின் தனித்துவமான ஏணிச் சின்னத்திற்குக் கிடைத்துள்ள சுமார் 30 ஆயிரம் வாக்குகள் மூலம் தலைநகரத் தமிழர்களின் தலைமைக்கட்சி என்ற எமது அந்தஸ்து தெட்டத் தெளிவான முறையிலே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த 30 ஆயிரம் வாக்குகளை வெகு விரைவில் 60 ஆயிரமாக மாற்றிக்காட்டுவோம். அதற்கான துணிச்சல் மிக்க வல்லமை எங்களுக்கு இருக்கின்றது.

கொழும்பு மாநகரசபையிலே நாம் 26 ஆயிரத்து 229 வாக்குகளையும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபையில் 2 ஆயிரத்து 167 வாக்குகளையும், கொலன்னாவை நகரசபையில் 939 வாக்குகளையும் பெற்றுள்ளோம். கொழும்பு மாநகர சபையிலே நமது தமிழ் வாக்காளர்களின் தவறுகள் காரணமாக ஏணிச்சின்னத்திற்கும், பிறிதொரு சின்னத்திற்கும் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, எமது ஒட்டுமொத்தமான வாக்குத்தொகை 30 ஆயிரத்தையும் தாண்டுகின்றது. எமது அணியின் சார்பாக கொழும்பு மாவட்டத்திலே மொத்தமாக 8 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். வரலாற்றில் முதன் முறையாக எமது கட்சியின் சார்பாக கொழும்பு மாநகரசபையில் 6 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை, தெஹிவளை-கல்கிஸை மாநகரசபையிலும், கொலன்னாவை நகர சபையிலும் நாம் முதன் முறையாக இடம்பிடித்துள்ளோம்.

கொலன்னாவை பகுதியில் தேர்தல் தினத்தன்று வன்முறை இடம்பெற்றிருக்காவிட்டால், எமது வாக்காளர்களின் வாக்களிப்பு விகிதம் அதிகரித்து, மேலதிக வாக்குகளையும், உறுப்பினர்களையும் நாம் நிச்சயமாகப் பெற்றிருப்போம்.

தொகுதிகள் அடிப்படையில் வட கொழும்பிலே நாம் முதன் முறையாகத் தனித்துவமாக 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ளோம். அதேபோல், மத்திய கொழும்பிலே 6 ஆயிரத்து 216 வாக்குகளையும், கொழும்பு மேற்கிலே 4 ஆயிரத்து 473 வாக்குகளையும், கொழும்பு கிழக்கிலே 4 ஆயிரத்து 056 வாக்குகளையும், பொரளை தொகுதியிலே ஆயிரத்து 467 வாக்குகளையும் தமிழ் மக்கள் எமது ஏணிச்சின்னத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் பெரும்பான்மை கட்சிகளின் ஏகபோக கோட்டைகளாக இருந்த தொகுதிகளிலே இன்று எமது ஏணிச்சின்ன தமிழ்க் கொடி பட்டொளி வீசிப் பறக்கின்றது.

இந்த ஜனநாயகத் தேர்தல் தீர்ப்புகள் கொழும்பு மாவட்டத் தமிழர்கள் மத்தியில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை தெளிவான முறையிலே படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தத் தமிழ் மக்களின் அங்கீகாரத்திற்கும், ஆணைக்கும் உரித்தான எங்களது பயணம் வெற்றிகரமாகத் தொடரும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

# தவறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக்.17

உழவு இயந்திரத்தில் கிளிநொச்சிக்கு கல் ஏற்றிச் சென்றபோது அதன் 'மக்காட்' டில் இருந்து ஒருவர் தவறி விழுந்ததனால் தலையிலும் வயிற்றிலும் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் வத்திராயன் வடக்கு, தாளையடியைச் சேர்ந்த ஏ. கிருஸ்ணகுமார் (வயது-31) என்பவரே காயத்துக்குள்ளானார்.

இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாற்றப்பட்டார்.

(10-4)

# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் குகனேசன்



கோம்பசிட்டி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் முத்துக்கிருஷ்ணர் வீதி (நாகம்ஸ் தியேட்டர் முன்பாக) சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் குகனேசன் (யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி) 14.10.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம்-இரத்தினாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், ஸ்கந்தவரோதயன் (முகாமைத்துவ உதவியாளர் -யாழ். மாவட்டச் செயலகம்), திருட்செல்வி, அருட்செல்வி (முகாமைத்துவ உதவியாளர்-தெல்லிப்பழை பிரதேச செயலகம்) ஜெயச்செல்வி (ஆசிரியை- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) சிவனேசன் (Holland) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணநாதன் (இந்தியா), விஜயராணி, வசந்தி, சுப்பிரமணியம்(சுவிஸ்), திரிலோகநாதன், மகேந்திரன்(வசி வோர்ச்) பிரகாமி (Holland) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகவதி, இளமாறன், சுகிர்தா, பவித்திரா, சஞ்சீவன், பிரணவன், மணிவர்மன் ஆகியோரின் சித்தப்பாவும் தர்சிகாவின் பெரியப்பாவும் பிரவீணா, மணிமோகன், பார்த்தீபன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.10.2011) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

## சின்னத்துரை வள்ளியம்மா



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், 82/8, பருத்தித்துறை வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வள்ளியம்மா நேற்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறன்-சரசு தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை-பூதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (சோமு)மற்றும் கமலாதேவி, தங்கராசா, செல்வராணி(ஜேர்மனி), விமலாதேவி, சுசிலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், சுகிர்தமலர், கந்தசாமி (கட்டட ஒப்பந்தகாரர்) இரத்தினம், செல்வராசா(ஜேர்மனி), அன்னலிங்கம் (டினா ரவல்ஸ்), செல்வம்(செல்வா ஆட்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4மணி அளவில் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*82/8, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

தகவல்: குடும்பத்தினர்.

# அமைச்சர் பீரிஸ் எப்போதும் 'பிஸி'தானாம்; தமிழ் ஊடகங்களுடன் பேச நேரமில்லையாம்

கொழும்பு, ஒக். 17

வெளிவிவகார அமைச்சர் எப்போதும் பேச்சுகளில்தான் இருப்பாராம். மற்றப்படி தமிழ்ப் பத்திரிகைகளுடன் பேசுவதில்லை என்ற போக்கு அவரிடம் கிடையாதாம்.

இப்படி சாரப்பட எமது சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு நேற்று கருத்துத் தெரிவித்தார் வெளிவிவகார அமைச் சர் ஜி.எல்.பீரிஸின் கைத்தொலைபேசியில் பதிலளித்த பண்டார என்பவர்.

முக்கியமான செய்திகள் குறித்து கருத்தை அறிவதற்காக வெளிவிவகார அமைச்சரின் கைத்தொலைபேசியுடன் தொடர்புகொள்ள செய்தியாளர் கள் பலதடவை முயன்றுள்ளனர். ஆனால் அமைச்சருடன் தொலைபேசியில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. செய்தியாளர்கள் தொடர்புகொள்ளும் போதெல்லாம் அமைச்சர் கூட்டத்தில் இருக்கிறார். உணவு அருந்துகி றார் என்பதே பதிலாகக் கிடைத்தது. ஆனால் வேறு பத்திரிகை கள் அமைச்சரின் கருத்துகளைத் தொலைபேசியூடாகக் கேட்டு செய்திகளை வெளியிடுவது வழமை.

இந்நிலையில், நேற்றைய தினமும் இவ்வாறு எமது செய்தியாளர் ஒருவர் அமைச்சரைத் தொடர்புகொள்ள அவரது கைத்தொலைபேசிக்கு அழைத்தார். நேற்றுக்காலை முதல் மாலை வரை அமைச்சர் பேச்சுகளில் இருப்பதாகவே தகவல் தரப்பட்டது.

ஏன் இவ்வாறு செயற்படுகிறீர்கள்? தமிழ்ப் பத்திரிகைகளுக்கு கருத்துக்கூறக்கூடா தென்று அமைச்சர் கொள்கை யெதனையும் வைத்துள்ளாரா? அப்படி இல்லையேல் ஏன் இந்தப் பாரபட்சம்? - என்று எமது செய்தியாளர் கேள்வியெழுப் பினார். அதற்குப் அமைச்சரின் தொலைபேசியில் பதிலளித்த பண்டார என்பவர், '' அமைச்சர் எப்போதும் பேச்சுகளில்தான் இருப்பார். உங்களுக்கு இப்போது பேச இயலாது. பிறகு தொடர்பு கொள்ளுங்கள். தமிழ்ப் பத்திரிகைகளுடன் பேசுவதில்லை என்ற போக்கு அவரிடம் கிடையாது.'' உங்களுக்கு இன்னும் சில நேரத்தில் நான் தொடர்பை ஏற்படுத் தித் தருகிறேன்'' - என்றார்.

ஆனால், நேற்றுமாலை இந்தச் செய்தி எழுதப் படும் வரை அமைச்சரை தொடர்புகொள்ள முடியவில்லை.

(ஒ-சி)

**Personal Class (கணினி)**

★ கற்கை நெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ MS Office 2007/2010, Internet and E.mail, DTP, Web Design, Graphic Design சிறுவர்களுக்கான கற்கை நெறி
★ பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
ஆசிரியர்:-KRC நல்லூர்.T.P- 0779672038

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் வியாபார நிறுவனத்துக்கு கீழ்காணும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவை.
1.கணக்காளர்
2. காசாளர்
இப்பணிகளில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 22.10.2011இற்கு முன் தங்கள் சுயவிவரங்களை, தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.
மே/பா உதயன், வி.இ-4186,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ASP ENTERPRISES**

சாரதி அனுமதிப்பத்திரம் (Lisence) தேவையில்லை
# பெற்றோல் செலவில்லை
# குறைந்த எடை & நீண்ட பாவனை
# இலகுவாக மிதித்தும் செல்லலாம்
# இலகு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
# எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால் 60-70Km வரை பயணம் செய்யலாம்
# ஒரு Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே
# பற்றரிக்கு 8 மாதம் மோட்டாரிற்கு ஒரு வருடம் உத்தரவாதம்

மின்சார சக்தியில் இயங்கும் புதிய
Atlas E-Bike
புதிய தோற்றத்துடன் விற்பனையாகின்றது.

யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

விசேட விலைக்கழிவு 48V- ~~65500/=~~ 56500/= 36V- ~~56500/=~~ 49500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.